இளந் தென்றல்

1998

தமிழ்ச் சங்கம்

கொழும்பு பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்"

இளந்தென்றல்

1998

தமிழ்ச் சங்கம்

கொழும்பு பல்கலைக்கழகம்

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தாய் வணக்கம்

தமிழே தமிழே தாரணி போற்றும்
இளமை குன்றா இன்பத் தமிழே
அழகுத் தமிழே அன்னைத் தமிழே
வளமார் தமிழே வண்ணத் தமிழே
முன்னைத் தமிழே மூத்த தமிழே
என்றும் இளமையி லெழிலுறு தமிழே
கன்னல் கனிச்சாறு கற்கண் டாகி(க்)
கவிதை யிலுலவும் காவியத் தமிழே
காலம் கணிக்க வொண்ணாத் தமிழே
சென்னி பணிந்துனை போற்றுவம் தமிழே

~ புலவர் முல்லைக்கவி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்பட விளக்கம்

தொலைவில் தெரிவது இரவியா - ஆமெனில்
காலையின் மலர்ச்சியா?
மாலையின் தளர்ச்சியா? - இடையில்
சாலை சரியில்லாமலிருக்கின்றது
சாக்கடல் பரந்திருக்கின்றது - நாளை
சாலை சரியாகி மாலையாகுமுன்
காலையைக் கண்டடைவோமோ
எம் சோகங்கள் தான் தீர்ந்திடுமா
நம் துயரங்கள் தான் கலைந்திடுமா
யுத்தம் தந்த அவதி வாழ்க்கையும், அகதி வாழ்க்கையும் மாறிடுமா
எம் சமாதானக் கனவுதான் நனவாகுமா ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிநிரல்

நேரம்	நிகழ்ச்சி		
3.30	**தமிழ்த்தாய் வாழ்த்து**		
3.40	**மங்கள விளக்கேற்றல்**		
3.50	**வரவேற்புரை**	-	தலைவர்
4.00	**நடனம்**	-	கொழும்பு பல்கலைக்கழகம்
4.15	**நடனம்**	-	யாழ் பல்கலைக்கழகம்
4.45	**வில்லுப்பாட்டு**	-	கொழும்பு பல்கலைக்கழகம்
5.45	**கவியரங்கம்**	-	கொழும்பு, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள்
6.30	**"இளந்தென்றல்" வெளியீடு**		
7.00	**"இளந்தென்றல் மலர் விமர்சனம்"**		
7.15	**பட்டிமன்றம்**	-	கொழும்பு, பேராதனை, மொரட்டுவ பல்கலைக்கழகங்கள்
8.00	**நாடகம்**	-	கொழும்பு பல்கலைக்கழகம்
9.00	**நன்றியுரை**	-	செயலாளர்
9.05	**சித்தாரா இசைக் குழுவினருடன், 'கொழும்பு, மொரட்டுவ, பேராதனை, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள் இணைந்து வழங்கும்' "இளந்தென்றல்" இசை நிகழ்ச்சி**		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயில்

அன்புள்ள தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்,

காலத்தின் தூதுவர்களாம் கவிஞர் பெருமக்கள் சூட்டிய புகழ் ஆரத்தைத் தாங்கி, சீரோடும் சிறப்போடும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து, வளர்ந்து புகழ்பரப்பி நிற்கும் தமிழ் அன்னைக்கு அழகு சேர்க்கும் இவ்வேளையில், அன்புள்ளங்களே, உங்களை இந்த நுழைவாயிலில் சிறிதுநேரம் நிற்கவைப்பதற்குப் பொறுத்தருள வேண்டுகின்றோம்.

ஆம். சிலவருட இடைவெளியின்பின் மீண்டும் "இளந்தென்றல்" புதுப்பொலிவுடன் வெளி வந்துள்ளது. தரத்தில் சிறந்து தரணி போற்றும்வண்ணம் தங்கள்முன் தரப்பட்டுள்ளது. எண்ணற்ற தடைகள் நிறைந்த பாதையில் பயன்பட்டு வரும் கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம், தனது அயராத உழைப்பால் இம்மலருக்கு உருக்கொடுத்துள்ளது. தலைசிறந்த பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தமிழறிஞர்கள் இம்மலருக்கு உயிர்கொடுத்துள்ளனர். இவர்களுடன் கொழும்பு, பேராதனை, மொறட்டுவ, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களும் மலருக்கு மெருகு சேர்த்துள்ளனர். பல்கலைக்கழக இதழியல் வரலாற்றில் விளம்பர அநுபந்தம் இன்றி, முழுவதும் தரம்பெற்ற ஆக்கங்கள் நிறைந்த மலர் வெளியிடப்பட்டுள்ளது. "மெல்லத் தமிழினிச் சாகும்" எனக் கூறப்படும் இவ்வேளையில் தமிழ்மொழியையும், அதன் வளத்தையும் போற்றிப் பேண எமது தமிழ்ச் சங்கம் உறுதிபூண்டுள்ளது. இதன் ஓர் அம்சமாக "இளந்தென்றல்" விளங்கும் என்பதில் ஐயமில்லை. "இளந்தென்றல்" மலருக்கு ஆக்கங்கள் அளித்த அனைவருக்கும் நன்றிகள். மிகக் குறுகிய காலத்தில் அழகுற அச்சேற்றித் தந்த "லக்சு கிரபிக்ஸ்" பதிப்பகத்தாருக்கு நன்றிகள். தமிழ் மணக்க வரும் இம்மலர், உங்களுக்கு இனிய விருந்தளிக்கும் என நம்புகின்றோம். எத்தனை தடைக்கற்கள் வந்தாலும் உயிர்வலி பொறுத்துத் தமிழ் உரைப்போம் உலகுக்கு என்று கூறி விடை பெறுகின்றோம்.

தமிழைக் காதலிப்போம்

அன்புடன்

இதழாசிரியர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කොළඹ විශ්වවිද්‍යාලය
கொழும்பு பல்கலைக்கழகம்
UNIVERSITY OF COLOMBO

MESSAGE FROM THE VICE-CHANCELLOR

It is with pleasure that I write this message to the souvenir published by the Tamil Society of this University to mark the occasion of their Annual Cultural Festival, ***Kalai Vizah***.

The University of Colombo is a multi-ethnic and multi-religious community. In this community there are student associations set up to promote the interests of different linguistic and religious groups. The Tamil Society is one such association which plays significant role, along with other similar associations, towards promoting goodwill, amity and understanding among various communities by organising cultural festivals and other activities, while at the same time promoting the respective separate sectional interests.

It is with pleasure that I noted that this year the festival will not be limited to this University and it will be participated by other Universities such as Universities of Moratuwa, Jeyawardenepura, Peradeniya and Jaffna.

The annual cultural festival organised by the Tamil Society is indeed a useful exercise to promote inter-ethnic and inter-religious harmony within the University system and I wish every success for its activities.

Professor Tilak Hettiarachchy
Actg. Vice-Chancellor
December 15, 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பொருளாளரிடமிருந்து ....

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கத்தினரால் வெளியிடப்படும் இளந்தென்றல் மலருக்கு பெரும் பொருளாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது இனிய தாய்மொழியான தமிழின் பெருமையையும், சிறப்பையும் கொழும்பு பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கத்தின் மூலம் வெளிக்கொணர வேண்டியது இன்றைய காலகட்டத்தில் ஒரு முக்கியமான பணியாகும். இந்த வகையில் பல்வேறு நடைமுறைப் பிரச்சனைகள் மத்தியில் இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களையும் இணைத்து இவ்விழாவை நடாத்துவது ஒரு சிறப்பான நிகழ்வாகும்.

இன, மத வேறுபாடற்ற முறையில் தமிழ்மொழி பேசுகின்ற எல்லோருக்கும் பொதுவான இத்தமிழ்ச்சங்கத்தின் ஊடாக எமது தமிழ்மொழியின் சிறப்பை வெளிப்படுத்த எதிர்காலத்தில் உற்சாகமாக செயற்பட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

'இளந்தென்றல்' வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பாக நடாத்தும் தமிழ்ச்சங்க மாணவர்கள் உயர்ந்த பாராட்டுதலுக்கு உரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

கே. கஜேந்திரா
(முதுநிலை விரிவுரையாளர்,
முகாமைப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத் தலைவரின் செய்தி

மானிட ஜென்மம் பயன்பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டவல்லது மொழி. எந்த மொழியாக இருந்தாலும் சரி மொழியறிவு வாய்க்கப்பெற்றவர்களே வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பவர்கள். மொழிகளுள் தனித்துவமான தன்மையும் தொன்மையும் வாய்ந்தது தமிழ்மொழி. இத்தகைய தமிழ்மொழியை நாம் முழுமையாக அனுபவிப்பதற்கே எமது பல்கலைக்கழக அறிஞர்கள் அன்று தமிழ்ச்சங்கத்தைத் தொடக்கி வைத்தார்கள். அன்றிலிருந்து இன்றுவரை இச்சங்கத்தைப் படிப்படியாக பக்குவப்படுத்தி, எமக்கென உரிய சீரிய பாரம்பரியம் ஒன்றை மேம்படுத்திவரும் மாணவர்களாகிய நாம், இச்சங்கத்தினூடாக தமிழுக்குப் பாரிய பணியொன்றை ஆற்றி வருகின்றோம். தமிழ்மொழியினூடாக மாணவர்களாகிய நாம் கற்கவேண்டிய பண்புகள் ஆயிரம் உண்டு. அதேவேளை கற்க வேண்டிய பண்புகளைக் கைவிட்டு சமூக விழுமியங்களுக்கு மாறான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவது வேதனைக்குரியதாகும். எம் மொழியைப் பேசும் மாணவர்களாயினும் தத்தமது மொழியினூடாக சமூகவிழுமியங்களை மேம்படுத்த வேண்டியது யதார்த்த நிலையில் அவசியமாகின்றது. அதற்கேற்றவகையில்தான் பல்கலைக்கழகங்கள் பல சங்கங்களை உருவாக்கித் தந்திருக்கின்றன. மனச்சஞ்சலத்துடன் ஊசலாடிக்கொண்டிருக்கும் இளம் உள்ளங்களின் உள வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இவை சிறந்த பங்களிப்பை நல்கின்றன.

சங்கங்களின் நற்பணிகள் ஒவ்வொருவர் உள்ளங்களையும் கணப்பொழுதேனும் பூரிப்படையச் செய்வதுடன் வருங்கால சந்ததியினருக்கும் வரலாற்றுத் தொடர்புடைய சில முக்கிய சம்பவங்களை இலக்கியப் படைப்புகளாக வழங்குவதனூடாக மனித சமுதாயத்திற்கும் விலைமதிப்பற்ற பங்களிப்பை ஆற்றுகின்றன. எமது தமிழ்ச்சங்கத்தின் "இளந்தென்றல்" பல்வகைப்பட்ட அறிவு சார்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளுடனும் சமகால நிகழ்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகளுடனும் வெளிவருகின்றது.

எமது மொழியைப் பற்றிப் பெருமைப்படும் நாம் அம்மொழியைத் தற்காலத் தேவைக்கேற்ற வளங்கொண்ட மொழியாக மாற்றிக்கொள்ளவேண்டும். தற்காலத் தேவைக்கேற்ற வளம் கொண்ட மொழியாக மாற்றியமைக்கவேண்டிய அதேவேளை பல நூற்றாண்டு காலமாக தமிழனிடையே இருக்கின்ற வேற்றுமை உணர்வுகள் களையப்பட வேண்டியதும் காலத்தின் கட்டாயத் தேவையாகும். ஒற்றுமையீனமும், அகதி வாழ்க்கையும் ஒத்த கருத்தாய்த் தமிழ் அகராதியில் பதியப்பட்டுவிடுமோ என்றிருக்கையில் எமது கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பேராதனை, மொரட்டுவ, ஜெயவர்த்தனபுர போன்ற பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் பேசும் மாணவர்களை ஒன்றிணைத்துக் "கலைவிழா" நடத்தத் தீர்மானித்திருப்பது நொருங்கிய இதயத்தோடு வேதனைகள் மத்தியில் வாழும் தமிழ்மக்களுக்கு துன்பத்திலும் ஓர் இன்பமான செய்தியாக அமையட்டும்.

இந்த ஒற்றுமை விழாவிற்கு ஆலோசனை வழங்கிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பலவழிகளிலும் துணைபுரிந்த மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி கூறுவதோடு ஒற்றுமையை வலியுறுத்தும் இந்தக் கலைவிழா அடுத்துவரும் ஆண்டுகளிலும் தொடர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஜெ. ஸ்ரீ றங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சங்கம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

அலுவலர் 97/98

காப்பாளர்	:	பேராசிரியர் டபிள்யூ. டீ. லக்ஷ்மன்
பெரும் பொருளாளர்	:	திரு. கே. கஜேந்திரா
தலைவர்	:	திரு. ஜெ. ஸ்ரீறங்கா
உபதலைவர்	:	திரு. மனோகரன்
இணைச்செயலாளர்	:	திரு. கி. கலைச்செல்வன்
		திரு. மு. இ. றயிஸல் ஹாதி
உதவிப் பொருளாளர்	:	திரு. கிறிஸ்ரி ரா. அஞ்சலோ
மலர் வெளியீட்டுக் குழு	:	செல்வி. சிவாஜினி
		செல்வி. ச. கிரிஜா
		திரு. பா. றிஸ்வான்
		திரு. ஐ. எல். எம். றமீஸ்
		திரு. ரீ. திவாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMIL SOCIETY
UNIVERSITY OF COLOMBO

OFFICE BEARES 97/98

Patron	:	Prof. W. D. Lakhsman
Senior Treasurer	:	Mr. K. Kajendra
President	:	Mr. C. P. J. Sri Ranga
Vice President	:	Mr. P. Manogaran
Joint Secretaries	:	Mr. K. Kalaichelvan Mr. M. I. Raizul Haathay
Junior Treasurer	:	Mr. Christy R. Angelo
Editorial committee	:	Miss. K. Sivagini Miss. S. Girija Mr. F. Riswan Mr. I. L. M. Ramees Mr. T. Thivakaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சங்கம் - கொழும்பு பல்கலைக்கழகம்
அலுவலர்கள் - 97/98

அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு. கி. கலைச்செல்வன் (இணைச்செயலாளர்), திரு. கே. கஜேந்திரா (பெரும் பொருளாளர்), பேராசிரியர் திலக் ஹெற்றியாராச்சி (பதில் உபவேந்தர்), திரு. ஜெ. ஸ்ரீ றங்கா (தலைவர்), திரு. மு. இ. றயீஸீல் ஹாதி (இணைச் செயலாளர்), திரு. சி. மனோகரன் (உபதலைவர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : செல்வி. சிவாஜினி (இதழாசிரியர் குழு), திரு. பா. றிஸ்வான் (இதழாசிரியர் குழு), திரு. கிறிஸ்ரி ரா. அஞ்சலோ (உப பொருளாளர்), திரு. ரி. திவாகரன் (இதழாசிரியர் குழு), செல்வி. ச. கிரிஜா (இதழாசிரியர்குழு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

1. எளிதாக்கப்படவேண்டிய தமிழ் வரிவடிவச் சீரமைப்பு 1

- பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி

2. மொழியும் அதிகாரமும் 7

- பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு

3 ஈழகேசரிச் சிறுகதைகள் 12

- கலாநிதி க. குணராசா

4. கல்வியும் கெட்டித்தனக் கோட்பாடும் 18

- கலாநிதி சபா. ஜெயராசா

5. தமிழக - ஈழத் தமிழ் அறிஞர்களிடையே நிலவிய புலமைசார் உறவுகள் 26

- கலாநிதி எஸ். சிவலிங்கராஜா

6. இருபதாம் நூற்றாண்டின் முடிவில் ஈழத்தின் நவீன இலக்கியம் 28

- செ. யோகராசா M. A

7. பரதர் கூறும் ரசக்கொள்கை ஓர் மீள்பார்வை 32

- ஏ. என். கிருஷ்ணவேணி M. A.

8. இலங்கையின் தமிழ் பத்திரிகைகள் தமிழ்பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்றனவா? 36

- என். எம். அமீன் B. A

9. முரண் உண்மை 40

- ஜெ. ஸ்ரீ றங்கா

10. யுத்தத்தினால் ஏற்படும் மருத்துவரீதியான தாக்கங்கள் 44

- ந. சுகுமார்

11. ஆவிகள் அனுப்பி வைக்கும் அவசரக் கடிதம் 47

- எஸ். நிலக்ஷன்

12. சமூகவியல் நோக்கில் தமிழ்த்திரையுலகம் 50

- இரா. ஜெ. ட்றொஸ்க்கி

13. சுவாமி விபுலானந்தர் 57

- செல்வி. வத்சலாதேவி வாசு

14. சமாதானம் அற்ற நாட்டில்... 62

- க. மயூரன்

15. தமிழரும் மருத்துவ அறிவும் 64

- கிருஷ்ணா கலைச்செல்வன்

16. கானல் தாகங்கள் 68

- க. சந்திரகலா

17. கண்ணிருந்தும் குருடர்களாய்..... 71

- நி. சத்தியசுதன்

18. எங்கே எம் சமாதானம் 73

- செல்வி. ஏ. எம். சமூன்

19. University of Colombo Hierarchy System 74

20. Faculties & Departments 75

21. Hostels maintained by University of Colombo 77

22. Members of the Tamil Union 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதாக்கப்படவேண்டிய தமிழ் வரிவடிவச் சீரமைப்பு

பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி
(முன்னாள் துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்)

1. எழுத்துகளைக் குறைப்பதன்று

தமிழ் வரிவடிவச் சீரமைப்பு என்னும் பொழுது நாம் ஒரு கருத்தை வலியுறுத்த வேண்டும். தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலி எழுத்துகளில் ஒன்றையும் குறைப்பதல்ல. அவற்றை எழுதவதற்காகக் குழந்தைகள், மற்றைய கற்போர் மனப்பாடம் செய்ய வேண்டிய குறியீடுகளை மட்டும் குறைப்பதாகும். பெரியார் நூற்றாண்டின் பொழுது செய்யப்பட்ட சீர்திருத்தத்திற்குப்பின் இப்போதிருக்கும் தமிழ் வரிவடிவத்திற்கு 107 குறியீடுகள் தேவைப்படுகின்றன.

அட்டவணை – 1

தமிழுக்குக் கையெழுத்தில் தேவைப்படும் குறியீடுகள் பற்றிய விவரம்

			ஒலிகள்	எழுத்துகள்	குறியீடுகள்
i.	உயிர்		12	12	11 (ஔ - கூட்டுக் குறியீடுகள்)
ii.	ஆய்தம்		1	1	1
iii.	தனி மெய்		18	18	18 + புள்ளி 1
iv.a	உயிர்மெய் (அகர வரிசை)	கூட்டொலிகள்	18		–
iv.b	உயிர்மெய் (ஆ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ வரிசைகள்)	கூட்டொலிகள்	126		4 (ா, ெ, ே, ை) (35)
V.	உயிர்மெய் (இ, ஈ, உ, ஊ வரிசைகள்)	கூட்டொலிகள்	72		72 (72)
			31	247	107

இவற்றுள் உயிர் மெய் இகரம் (கி. சி. ஙி .... னி), உயிர் மெய் ஊகாரம் (கீ, சீ, ஙீ .... னீ), உயிர் மெய் உகரம் (கு, சு, நு .... னு) உயிர் மெய் ஈகாரம் (கூ, சூ, நூ .... னூ) ஆகிய 72 ஒலியெழுத்துகட்கும், 72 குறியீடுகள் தேவைப்படுகின்றன. இவற்றில் ஒவ்வொரு எழுத்தும் மனப்பாடம் செய்யவேண்டிய குறியீடு. அதிலும் உயிர் மெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகரம், ஊகாரம் இவற்றுள் எந்த விதமான சீர்மையும் இல்லை. ஒவ்வொரு எழுத்தும் ஒரு தனி வடிவம். இந்த 36 எழுத்துகள் மட்டும், மீத முள்ள 211 ஒலி எழுத்துகளையும் கற்க வேண்டியதற்கு இணையான நேரத்தை எடுத்துக் கொள்கின்றன. இது தேவைதானா? தவிர்க்க முடியாததா? தவிர்க்க முயன்றால் அதன் வழி தமிழுக்குப் பெரிய தீங்கு வந்துவிடுமா என்ற கேள்விகள் எழுவது இயல்பு.

2. நான்கு குறியீடுகள் போதும்

நாம், மேலே குறிப்பிட்ட நான்கு உயிர் மெய் வரிசைகளைத் தவிர மீத மிருக்கும் உயிர் மெய் எழுத்துகள் அனைத்திற்கும் (, ெ, ே, ை, ள) போன்ற குறியீடுகளை மட்டும் உயிர் மெய் அகரத்திற்கு வலது புறத்திலோ (கா, சா ....னா) இடது புறத்திலோ (கெ, செ..........னெ) அல்லது இரு புறத்திலுமோ (கொ, சொ .... னொ) பயன்படுத்துகிறோம். ஆனால (கி, கீ .... கு .... கூ ....) உயர மெயகளல மடடும உயரக குறயடுகள உயிர்மெய் அகரத்திற்கு வலது புறத்திலோ, இடது புறத்திலோ தனியாக வராமல் எழுத்தோடு ஒன்றி நிற்கின்றன. இந்த நான்கு வரிசைகள் மட்டும் மற்ற ஏழு உயிர்மெய் வரிசைகளில் (கா, கெ, கே, கை, கொ, கோ, கௌ) இருந்து மாறுபட்டு நிற்கின்றன. மற்ற வரிசைகள் இரு இணைகோடுகட்குள் அடங்க இவற்றிற்கு மேல் ஒருமாடி கீழ் ஒருமாடி இடம் தேவைப படுகிறது மற்ற ஏழு வரிசைகளைப் போலவே இந்த நான்கு வரிசைகட்கும் தனிக் குறியீடுகளைப் பயன்படுத்துவது என்று வைத்துக்கொண்டால் இவற்றிலுள்ள 72 ஒலியெழுத்துகட்கு நான்கு குறியீடுகள் மட்டுமே தேவைப்படும். குழந்தைகள் எழுபத்திரண்டு எழுத்துகளுக்குப் பதிலாக நான்கு குறியீடுகளை மட்டும் கற்க வேண்டும். கொள்கையளவில் இது ஒப்புக் கொள்ளப்பட்டால் குறியீடுகளைத் தேர்வு செய்வது பெரிய பிரச்சினையாக இராது. உயிர்மெய் இகர, ஈகரத்திற்கு இப்பொழுது எழுத்துக்கு மேல் பயன் படுத்துவதையொத்த குறியீடுகளையே வலது புறத்தில் பயன்படுத்தலாம். உயிர்மெய் உகரம், ஊகாரம் இவற்றிற்கு நாம் கிரந்த எழுத்துகட்குப் பயன்படுத்தும் குறியீடுகளை ஒத்தவற்றை, தமிழ் வரிவடிவத்தின் இயற்கைக்கு ஏற்பவும், பார்வைக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையிலும் ( ) பயன்படுத்தக் கூடும். இப்படி ஒரு முடிவு செய்வதாக வைத்துக் கொண்டால், கீழ்க்கண்ட நான்கு குறியீடுகளைக் (அட்டவணை - 2) குழந்தைகள் கற்றால் 72 ஒலி எழுத்துகளையும் எழுத இயலும்.

படம் 1



அட்டவணை 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நான்கு குறியீடுகளை ஏற்றுப் பயன்படுத்தினால் 247 ஒலி எழுத்துகளைக் கொண்ட தமிழ் நெடுங்கணக்கை எழுதவும் படிக்கவும் தேவையான குறியீடுகள் 107 க்குப் பதிலாக 39 மட்டுமே. அவை அட்டவணை - 3 இல் கொடுக்கப்பட்டுள்ளன. அட்டவணை - 2 இல் குறிப்பிட்ட குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்ட உயிர்மெய் இகரம், ஈகாரம், உயிர்மெய் உகரம், ஊகாரம் வரிசைகள் படம் - 2 இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

படம் 2



அட்டவணை 3

முதன்மை எழுத்துகள்						உயிர்மெய்க் குறியீடுகள்	
அ	இ	உ	எ	ஒ	ஃ	்	ா
ஆ	ஈ	ஊ	ஏ	ஓ	ஐ	[illegible]	[illegible]
க	ச	ட	த	ப	ற	[illegible]	[illegible]
ங	ஞ	ண	ந	ம	ன	ெ	ே
ய	ர	ல	வ	ழ	ள	ை	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குறியீடுகளின் வடிவம்

இங்கு இப்பொழுது முக்கியமானது இந்த நான்கு வரிசைகட்கும் நான்கு குறியீடுகளைப் பயன்படுத்தலாம் என்ற கொள்கையை ஒப்புவது தான். குறியீடுகளின் வடிவம் அடிப்படைப் பிரச்சினை அன்று. அதை ஒரு சில அறிஞர்களைக் கலந்து அரசு முடிவு செய்யலாம். கணிப் பொறியில் பல குறியீடுகளை உருவாக்கி அவற்றுள் தமிழ் வடிவத்திற்கு இயைபுடையதான எழில் சேர்ப்பதான ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

4. அறிஞர்கள் ஒப்பியது

நாம் கூறியிருக்கும் மாற்றங்களில் புதியவை எதுவுமில்லை. இந்த நான்கு வரிசைகட்கும் தனிக் குறியீடுகளைப் பயன்படுத்தலாம். பயன்படுத்தவேண்டும் என்பது ஏறத்தாழ 60 ஆண்டுகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. பேரா. தெ. பொ. மீ., பேரா. மு. வ., திரு. கி. வா. ஜ., புலவர் குழந்தை போன்ற, துறை போகக் கற்ற தமிழறிஞர்கள் பரிந்துரைத்திருக்கின்றனர். சிலம்புச் செல்வர் ம. பொ. சி ஆரம்பத்தில் எதிர்த்தாலும், 13. 3. 89 செங்கோலில் சீரமைப்பை ஏற்று எழுதியிருக்கிறார். பேரா. வ. சுபமாணிக்கம் பின்னர் எதிர்த்தார் எனினும் எழுத்துச் சீரமைப்பை ஆதரித்து, உகரம், ஊகார உயிர் மெய்க்கு அவர் பரிந்துரைக்கும் குறியீடுகளையும் காட்டி. டாக்டர் கொடுமுடி கண் முகனுக்கு எழுதிய கடிதம் நூல்களில் பதிப்பாகி இருக்கிறது. திமுகவின் 1977 தேர்தல் பிரகடனம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகிறது டாக்டர் கலைஞர். தாம் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொள்கை அளவில் ஏற்பதாகவும் அறிஞர்களுடன் கலந்து முறையாகச் செய்யவேண்டுமென்பதே தம் கருத்து என்றும் முரசொலியில் எழுதியுள்ளார். கல்வியாளர்களும் தமிழ் அறிஞர் பலரும் ஏற்ற ஒரு சீர்திருத்தம் இவ்வளவு காலம் செயற்படுத்தப்படாதிருப்பதும் ஒரு புதிர் தான்.

5. வாழ்வு காலத்தால் ஆனது

மனித உடல் வேண்டுமானால் ஊனாலும், நாராலும், என்பாலும் ஆனதாக இருக்கலாம். ஆனால் வாழ்வுகாலத்தால் ஆனது. விரைவும், விறுவிறுப்பும் இன்று ஒரு இனத்தின் வாழ்வுக்கு உயிர் நாடி. மேலாண்மைத்துறை நிபுணரான பீட்டர் ட்ருக்கர் விரைவு குன்றிய விரைவில் செயல்பட இயலாத எந்த இனமும் நாளா வட்டத்தில் நசித்துவிடும் என்கிறார். இன்று ஒரு நாட்டின் வாழ்வும் வளமும் அதன் கல்வி நிலையைப் பொறுத்தது. கல்விக்கு முதற்படி மொழிக்கல்வி. தாய்மொழி எல்லோரும் தலைமுறை தலைமுறையாகக் கற்க வேண்டிய ஒன்று. மொழியைக் கற்பது எளிதாக்கப்பட வேண்டும். எவ்வளவு விரைவில் கற்க முடியுமோ அவ்வளவு விரைவில் கற்பது நலம். எதிர் காலத் தமிழ் மக்கள் நான்கு குறியீடுகள் மூலம் கற்கும் 72 எழுத்துகட்கு 72 குறியீடுகளை மனப்பாடம் செய்யச் சம்மதிக்க மாட்டார்கள். 39 குறியீடுகள் மூலம் கற்க இயலும் ஒரு வரிவடிவத்திற்கு 107 குறியீடுகளைக் கற்க வேண்டுவதை ஏற்கமாட்டார்கள். எனவே செய்தக்கவென்று தெரிந்ததைத் தாமதிக்காது செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒரு மொழியினர்: பல நாட்டினர்

இன்று உலகுதழுவி வாழும் இனங்கள் ஐந்து :

i. யூதர்
ii. ஆங்கிலமொழியினர்
iii.. சீனர்
iv. ஜப்பானியர்
v. இந்தியர்

இந்தியர்களில் தமிழர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். உலகின் இரண்டு நாடுகளில் தேசிய மொழியாக இருக்கும் பெருமை, இந்திய மொழிகளில் தமிழுக்கு மட்டுமே உண்டு. தமிழர்கள் பார் முழுதும் பரந்து வாழ்கின்றனர். தமிழர் ஒரு மொழியினர்: பலநாட்டினர். எல்லா நாட்டிலும் சிறுபான்மையர். தமிழினம் ஆலமரம் போன்றது அடிமரம் தமிழகத் தமிழர் என்றால், மற்ற நாட்டினர் விழுதுகள். தமிழினம் என்ற ஆலுக்கு விழுதின் வலிமை மிக முக்கியம். விழுதுகள் வலிமையுள்ளதாக இருக்க வேண்டுமாயின் அயலகத் தமிழர்கள் தமிழ் மொழியொடு தொடர்புள்ளவர்களாக வாழ வேண்டும். அவர்கள் தமிழ் கற்கவேண்டும். அதற்குத் தமிழ் கற்பது எளிதாக்கப்படவேண்டும். ஒரு மொழி பொருளாதாரத் தேவையாக இல்லாவிட்டால் இளைஞர் தலைமுறை எளிதில் அதைக் கற்க முன் வராது. இந்தியத் துணைக்கண்டத்திற்கு உள்ளேயே மற்ற மாநிலங்களில் வாழ்பவர்கள் தமிழை மறந்து விடுகிறார்கள். பொதுவாகத் தமிழ் கற்பது எளிதாக்கப்படவேண்டும். அதற்கு முதற்படியாக தமிழ் வரிவடிவம் எளிதாக்கப்படவேண்டும். எளிதாக்கப்படுவது இயலும் வரிவடிவம் கடினமாக இருக்குமாயின் ஆரம்பமே அதைரியப்படுத்துவதாக அமைந்து விடும். இது விரும்பத்தக்கதன்று.

7. பிறமொழியினர் செய்துள்ளனர்

மலையாள மொழியை எழுதுவதற்கு முன்பு நானூறுக்கு மேற்பட்ட குறியீடுகள் தேவைப்பட்டன. ஆயினும், ஆரவாரமின்றி, அமைதியாக தொண்ணூறுக்குப் பக்கமாக இருக்கும் படி குறைத்து விட்டார்கள். ஜப்பானிய மொழி பழமையானது. வலது புறத்தில் தொடங்கி மேலிருந்து கீழாக செங்குத்து வரிசையில் எழுதி வந்தார்கள். ஆனால் அறிவியல் தொழில்நுட்பப் பாடங்களில் தேவை கருதிப் படுக்கையாக இடது புறமிருந்து எழுதுகிறார்கள் இது மகத்தான மாற்றம். சீனாவில் பொது உடமை அரசு அடைந்தபின் செய்த முதல் வேலைகளில் ஒன்று மொழிச் சீர்திருத்தக்குழு அடைந்ததும் பத்தாயிருத்திற்கும் அதிகமாகத் தேவைப்பட்ட எழுத்துகளை குறைத்ததுமாகும். பண்டை மொழியினரும் செய்திருக்கிறார்கள். அண்மைக்கால மொழியினரும் செய்திருக்கிறார்கள். வளரும் காலத்தில் வலிமை குறையாது நிலைத்து நிற்க மாற்றங்களை ஏற்றேயாக வேண்டும்.

8. வரிவடிவம் மாறிவந்த ஒன்று

தமிழ் வரிவடிவம் ஏதோ தொல்காப்பியர் காலத்திலிருந்து நிலைத்து நிற்கும் ஒன்றன்று. வள்ளுவரும் இளங்கோவும் எழுதிய வரிவடிவத்தில் (படம் - 3) ஓர் எழுத்தும் நமக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாது. இன்று நாம் எழுதும் வரி வடிவத்திலும் அவர்கட்கு ஓர் எழுத்தும் புரியாது. அவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியின் அடிப்படையும் அடையாளமும் மாறவில்லை. மொழிக்கு ஒலிதான் அடிப்படை. வரிவடிவம் ஒலிக்கு நாம் கொடுக்கும் குறியீடு. வரிவடிவ மாற்றத்தால் மொழி அணுவளவும் பாதிக்கப்படுவதில்லை. நாம் புரிந்துகொள்ள இயலாத சுருக்கெழுத்தில் (short hand) எழுதப்படும் தமிழும் நாம் எழுதும், பேசும் தமிழ்தான். வரிவடிவமே மொழி அன்று.

படம் 3



9. சோதனைக்காலம்

தமிழ் மொழி தனது மேடும் பள்ளமும் நிறைந்த நீண்ட வாழ்வில் பல சோதனைகளைச் சந்தித்திருக்கிறது. கண்டங்களைக் கண்டிருக்கிறது. ஆனால் இன்றைய நிலை வேறு. நாம் வாழ்வது கல்வியுகம். அறிவியலும், தொழில் நுட்பமும் ஆட்சி செய்யும் காலம். 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட போக்குவரத்துப் புரட்சியும் 20 - ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தகவல் புரட்சியும் பரந்து விரிந்த உலகை ஒரு 'வையச் சிற்றூர்' (Global Village) என்று கூறும் அளவிற்குச் சுருக்கிவிட்டன. இந்தச் சூழ்நிலை வலியவர் மொழியும் பண்பும் வளைவும், மெலியவர் மொழியும் பண்பும் தேயவும் துணை நிற்கிறது. சிறுபான்மை எதுவாயினும் பெரும்பான்மையில் கரைந்து மறையும் கால கட்டத்தில் இருக்கிறோம். இருப்பதை இறுக்கிப் பிடிப்பது மட்டும் போதாது. சற்று இளக்கம் (Flexibility) தேவை. காலத்திற்கேற்ற வளர்ச்சி தேவை. வளர்ச்சிக்கு மாற்றங்கள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியும் அதிகாரமும்

பெண்நிலை நோக்கிலான சில குறிப்புகள்

பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு
கிழக்குப் பல்கலைக்கழகம்

மனிதரது கருத்து, உணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகவும், மனிதர் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதைச் சாத்தியப்படுத்தும் கருவியாகவும் மொழி செயற்படுகிறது. உலகில் வெவ்வேறுபட்டவையும் நூற்றுக்கணக்கானவையுமான மொழிகள் வழங்கிவருகின்றன. மொழிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும் அவற்றின் பயன்பாட்டில் பொதுத்தன்மை காணப்படுகிறது.

மொழியினுடைய தொடர்பாடல் தன்மை என்பது என்ன? வெறுமனே அது பரஸ்பர உணர்வு கருத்துப் பரிமாற்றங்கள் மாத்திரம்தானா என்ற வினாக்களும் மொழியினுடைய தொடர்பாடல் பற்றிச் சிந்திக்கும்போது கூடவே எழுகின்ற வினாக்களாகும். ஏனெனில் மனிதர் யாவரும் இன்றைய உலகில் சமமானவராக இல்லை; மனிதர்களுக்கிடையே அந்தஸ்து வேறுபாடுகள் உள்ளன; 'அதிகாரம்' (Power) 'மேலாட்சி' (Hegemony) ஆகியவை மனிதருக்கிடையிலான உறவுகளிற் செயற்படுகின்றன. வர்க்கம், பால் ஆகியவற்றின் அடிப்படையில் அதிகாரமானது ஒரு முறைமையாகவே செயற்படுகிறது. அரசியல், பொருளாதாரத் தளத்திலும் பண்பாட்டுத்தளத்திலும் அது இயங்குகிறது.

மொழி பயன்படுத்தப்படுகின்ற வகையிலும் அதிகாரமும், அதிகாரம் பெற்ற கருத்தியலும் செயற்படுவதை நவீன சமூகமொழியியல் ஆய்வுகள் வெளிக்காட்டியுள்ளன. சமூகத்தில் அதிகாரம் பெற்றுள்ள பகுதியினர் மொழிமூலம் எவ்வாறு தமது அதிகாரத்தை மீளுருவாக்கம் செய்கின்றனர்; நிலை நிறுத்துகின்றனர் என்றவகையில் இவ் ஆய்வுகள் அமைந்துள்ளன. இன்று பிரபலமடைந்து வருகின்ற பின் நவீனத்துப் பார்வையும் இத்தகைய ஆய்வுநோக்கை ஊக்கப்படுத்துகிறது.

மொழியில் பொதிந்திருக்கும் அல்லது மொழி உள்வாங்கியிருக்கும் கருத்தியல், அதிகாரக் கூறுகள் போன்றவற்றை விளங்கிக் கொள்வதற்கு மொழியின் உருவாக்கம், அதன் வளர்ச்சி பற்றிய விளக்கம் முதற் தேவையாகும்.

ஒரு சமூகத்தினுடைய வரலாற்று ஓட்டத்துடன் இணைந்ததாகவே அச் சமூகத்தின் மொழி வளர்ச்சியும் காணப்படும். இவ்வகையில் மொழி தனியே ஒரு தொடர்பாடற் சாதனமாக மாத்திரமன்றி குறிப்பிட்ட அச்சமூகத்தினுடைய வரலாறு, சமூக சிந்தனை, பண்பாடு ஆகியவற்றை எடுத்துரைக்கும் ஒரு சாதனமாகவும் அமைகிறது. இவ்வகையில் மொழியானது அது வழங்கும் சமூகத்தினுடைய வரலாற்றாலும், அவ்வரலாற்றோட்டத்தின் பண்புகளாலும் வடிவமைக்கப்பட்ட ஒன்றாகவே வளர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபற்றிய மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில் மொழியில் 'பால்வாதம்' அமைந்திருக்கும் வகையினை எடுத்துக்கூறுவதும் அது தொடர்பான சிந்தனையைக் கிளறி விடுவதும் இக்கட்டுரை மூலமான எனது நோக்கமாகும்.

பொதுவாக மனிதகுல வரலாறானது பெண்களைப் பாரபட்சப்படுத்தியும் கீழ்மைப்படுத்தியும் வளர்ந்து வந்துள்ளது. புராதன காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள இவ்வாறான வரலாற்றுப் போக்கில் பெண் அடைந்துள்ள அந்தஸ்து மாற்றத்தை மொழி தனக்குள் உள்வாங்கியுள்ளது. ஆணை உயர்வானவராகவும் பெண்ணைத் தாழ்ந்தவளாகவும் ஆக்கிய இந்த அந்தஸ்து மாற்றத்தால் பெண்களை இழிவுபடுத்துகின்ற, பாரபட்சப்படுத்துகின்ற சொற்கள், சொற்தொடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள் எனப் பலவும் மொழியில் உருவாகியுள்ளன. இவ் வகையில் சமூகத்தினுடைய யதார்த்த நிலைமையும் நடைமுறையும் மொழியில் செல்வாக்குச் செலுத்தி சொற்களையும் சொற்தொடர்களையும் உருவாக்க மறுதலையில் இச்சொற்களும் சொற்தொடர்களும் அடங்கிய மொழியானது பால்வாதத்தை வெளிப்படுத்துவதாகவும் அதனை நிலைநிறுத்தும் கருவியாகவும் அமைகிறது. இது மாத்திரமன்றி இன்றைய ஆணாதிக்க, தந்தை வழிச் சமூகத்தில் மொழியின் இலக்கணங்கள் சமூகத்தில் அதிகாரம் பெற்றிருந்த ஆண்களாலேயே உருவாக்கப்பட்டிருந்தன. இலக்கண நூல்களிற் காணப்படும் மொழி பற்றிய சிந்தனைகளும் நிகண்டுகள், அகராதிகள், சொற்களஞ்சியங்கள் போன்றவற்றில் நிரைப்படுத்தப் பட்டிருக்கும் சொற்களும் அதிகாரம் பெற்றிருந்தோராலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அவர்களுடைய பார்வையும் கிரகிப்புமே மொழியில் முதலிடம் பெற்றன. இவ்வகையில் ஆண் நிலைப்பட்ட ஒன்றாக மொழி உருவாகி வளர்ந்துள்ளது; வடிவமைக்கப்பட்டுள்ளது.

"தாய் மொழி" என ஒருவருடைய சொந்த மொழியைக் குறிப்பிட்டாலும், மொழியைப் பெண்ணாக உருவகம் செய்தாலும் யதார்த்தத்தில் மொழியானது தந்தையர் மொழியாக, "ஆண் மொழி" யாகவே அமைவது எமது அவதானத்திற்கு உரியதாகும்.

இன்று சமூகத்தின் முன்னேற்றம் சமூக விடுதலை குறிப்பாக பெண்களின் முன்னேற்றம், அபிவிருத்தி ஆகியவை பற்றிப் பேசும்போது மேலே குறிப்பிட்ட மொழியின் பால்வாதம் பற்றியும் அதன் பக்கச்சார்பு பற்றியும் அக்கறைப்படுதல் வேண்டும். 'மாற்றுப் பண்பாடு' என்ற கருதுகோளை முன்வைக்கும்போது அக்கருதுகோள் அடிப்படையில் உரையாடுவதற்கு மொழி ரீதியாக ஏற்படும் தடங்கல்கள் யாவை என்பதும் சிந்தனைக்குரியதாகும். ஏனெனில் கருத்துகள் மொழிமூலமே வடிவம் பெறுகின்றன. பெண்களைக் கீழ்மைப்படுத்துகின்ற, ஆணாதிக்கக்கருத்து நிலையுடைய மொழியைப் பெண்கள் தொடர்பான புதிய சிந்தனைகளையும் கருத்துகளையும் வெளியிடுவதற்கு எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியும்? மொழியில் இது தொடர்பாக ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் யாவை என்பது இன்று எம்முன்னாலுள்ள வினாக்களாகும். மொழிபற்றிய ஆய்வுகளில் பெண்நிலைவாதிகள் ஏற்கனவே இவ்வினாக்களை முன்வைத்துள்ளனர்.

தமிழில் சில உதாரணங்களைக் கூறுவதன் மூலம் இப்பிரச்சனையை விளக்கலாம். தமிழில் சொற்களில் பால்பகுப்புச் செய்யப்பட்டுள்ளது. மனிதரைக் குறிக்கும் சொற்கள், பால் அடிப்படையில் ஆண்பால், பெண்பால், பலர் பால் என வகுக்கப்பட்டுள்ளன. சில சொற்கள் பால் பொதுச் சொற்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பால் விகுதியான 'அன்' விகுதி கொண்டு முடியும் சொற்கள் ஆண்பாலைத் தீர்க்கமாகக் குறிப்பிடுகின்றன. ஆனால் அச்சொற்களில் சிலவற்றிற்கு எதிர்ப்பாலான பெண்பாற் சொற்கள் இல்லை. இந்நிலைமை இன்று பெண்கள் சில துறைகளில் தம்மை அடையாளப் படுத்துவதில் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக எழுத்தாளன், கலைஞன், கவிஞன், ஓவியன் போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். இவை ஆண்பாற் சொற்கள். ஆனால் ஓவியரான பெண், கவிஞரான பெண், கலைஞரான பெண் போன்றோரைக் குறிக்கப் பெண்பாற் சொற்கள் இல்லை. இதனாலேயே இத்தகையோர் பற்றிக் குறிப்பிடும்போது பெண் என்று ஒரு அடைமொழிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டி ஏற்படுகிறது. பெண் ஓவியர், பெண் கவிஞர் என்றே குறிப்பிடுகிறோம். இவ்வாறு இத்துறைகளில் பெண்களைக் குறிக்கும் சொற்கள் இல்லாமல் போனதற்கான காரணம் என்ன? சொற்களை வடிவமைத்தோர் பெண்களை இத்துறைகளுடன் சேர்த்துச் சிந்திக்காமை தான். தமிழ்ப் பாரம்பரியத்தில் எத்தனையோ பெண்கள் புலவர்களாகவும் கவிஞர்களாகவும் இருந்துள்ளனர். ஆனால் 'புலவன்' என்ற சொல்லுக்கு பெண்பால் தமிழ் இலக்கணத்தில் இல்லை. "பெண்பாற்புலவர்" என்ற தொடரைப் பயன்படுத்தி விட்டு, இப்பிரச்சனையைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்காமல் விட்டுவிடுகிறோம்.

பாற்பொதுச் சொற்களும் கூட ஆணையே கருதுகின்றன. தமிழில் பாற்பொதுச் சொற்கள் உள்ளன. எனவே அவற்றைப் பயன்படுத்தலாம் எனவும் தமிழில் பெரிய அளவில் பால் வாதம் இல்லாமைக்கு இப்பாற் பொதுச்சொற்கள் சான்றாக அமைகின்றன எனவும் சிலர் வாதாடுவர். ஆனால் அச்சொற்களைப் பயன்படுத்தும்போது கூட அவை ஆண்பாலார் சார்ந்தே குறிக்கப்படுகின்றன. உதாரணமாக "அவர் ஒரு எழுத்தாளர்", "அவர் ஒரு ஓவியர்" ஆகிய வசனங்கள் உணர்த்தும் பொருள் யாவை? இச்சொற்தொடர்களைக் கேட்கும்போதோ படிக்கும் போதோ, எழுதும்போதோ, பேசும்போதோ உருவாகும் படிமம் யாது? பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தொடர்கள் சுட்டுபவர் ஆணாகவே உள்ளார்.

ஆணை நடுநாயகமாக வைத்தே வளர்ந்து வந்த சிந்தனையினதும் வரலாற்றினதும் மொழி சார்ந்த விளைவு இது எனக்கூறலாம்.

ஆணே சமுகத்தில் முதன்மை: அவனே மையம். இந்த மையத்தைச் சார்ந்தே யாவும் அமைந்துள்ளன என்ற கருத்தே பெண்ணை, ஆணைச் சார்ந்த 'இரண்டாவது பால்' (Second Sex) ஆக்கியுள்ளது என்ற கருத்துப்பட பிரஞ்சுப் பெண்நிலைவாதியான சிமோன்டிபூவர் குறிப்பிடுவார்.

மேலே எடுத்துக்காட்டிய உதாரணங்களை இக்கருத்தின் பின்னணியில் விளங்கிக் கொள்ளலாம். ஆண்பாலுக்கு இச் சொற்கள் தரும் முதன்மை நிலையாலேயே பெண்கவிஞர், பெண் ஓவியர் என அடைமொழி கொடுத்து பெண்பாலை நிலை நிறுத்த வேண்டியுள்ளது.

ஆனால் இந்நிலையை மொழியில் இவ்வாறே தொடரவிடுவதா என்பதே இன்று எம்முன்னாலுள்ள வினாவாகும். இக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் குறிக்க மொழியில் புதிய சொற்கள் உருவாக்கப்பட வேண்டும். அதாவது ஆண்பாலுக்குச் சமதையான பெண்பாற் சொற்கள் உருவாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே சமயம் சில சொற்கள் தனியே பெண்பாலாரை மாத்திரமே குறிக்கப் பயன்படுகின்றன; உதாரணமாக விதவை, விபச்சாரி போன்ற சொற்களாகும். கணவனை இழந்த பெண்ணைக் குறிக்கும் விதவை என்ற சொல் எழுப்பும் உணர்வோட்டம் என்ன? அதன் உட்கருத்து என்ன? விதவை என்ற சொல் அபலை, நாதியற்றவள், சுபகாரியங்களுக்கு உதவாதவள் என்ற கருத்தையெல்லாம் உள்ளடக்கியுள்ளது. கணவனை இழப்பது பெண்ணுடைய சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலையில் தாழ்வான அந்தஸ்தை அளிப்பதாகவே சமூகத்தில் கருதப்பட்டு வந்துள்ளது. எனவே விதவை எனப் பெண்ணை ஒதுக்கி வைக்கின்ற பால்வாதம் மொழிமூலம் வெளிப்படுகின்ற, நிலைநிறுத்தப்படுகின்ற ஒரு சந்தர்ப்பமாகவே இச்சொல் பயன்படுத்தப்படல் விளங்குகிறது.

இச் சொல் குறித்து இன்று பல விவாதங்கள் நடைபெறுகின்றன. இலங்கையில் போர் நிலையால் கணவனை இழந்த பெண்கள் குடும்பத்தின் பிரதான உழைப்பாளர்களாய் மாறியுள்ளதை சமீபத்தைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவர்கள் குடும்பத்தலைவர்களாக மாறியுள்ளனர். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் (women headed house holds) உருவாகி உள்ளன. இந்தநிலையில் விதவை என்ற சொல் - தாழ்ந்த உள்ளர்த்தம் நிறைந்த சொல்லைப் பயன்படுத்துவது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதையும் அது எவ்வாறு எமது சிந்தனையைக் கட்டுப்படுத்துகிறது என்பதையும் சிந்திக்கவேண்டும்.

இதே சமயம் மனைவியை இழந்த ஆணைக்குறிக்க 'தபுதாரன்' என்ற சொல் இருந்தாலும் அது அதிகம் வழங்குவதில்லை. ஏனெனில் மனைவியை இழப்பது ஆணுடைய அந்தஸ்தை மாற்றுவதில்லை எனச் சமூகம் கருதுகிறது.

எனவேதான் இச்சொற்களின் அர்த்தப்பரப்பு, அவற்றின் கருத்தியல், வழக்கு ஆகியவை பற்றிய மறுபரிசீலனை மேற் கொள்ளப்படவேண்டும்; அந்த அடிப்படையில் மொழிவழக்குகளில் மாற்றம் செய்யப்படவேண்டும் என பெண்நிலைவாதிகள் கூறுகின்றனர்.

இதே போலத்தான் 'விபச்சாரி' என்ற சொல்லும் அமைந்துள்ளது. இது வெளிப்படையாகவே பெண்ணைக் குறிக்கின்ற சொல்லாகவுள்ளது. ஆண்கள் விபச்சாரம் செய்கின்றநிலை இருந்த போதும் இன்று அத்தொகை அதிகரித்து வருகின்றபோதும் விபச்சாரி என்பது பெண்ணையே குறிக்கிறது.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டவை ஒரு சில உதாரணங்கள் மாத்திரமே. மொழியின் பால்வாதத்திற்கு பல்வேறு வகையான உதாரணங்களைக் கூறலாம்.

தமிழில் அகராதிகளும், சொற்களஞ்சியங்களும் மறு சீரமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை மேலே காட்டிய பிரச்சனைகள் வற்புறுத்துகின்றன. புதிய சொற்கள் உருவாக்கப்பட வேண்டியதும் அவை அகராதியிலும், பாவனையிலும் இடம்பெற வேண்டியதும் முக்கியமானதாகும். ஏற்கனவே ஆங்கிலமொழி அகராதியில் இத்தகைய மாற்றங்கள் சில செய்யப்பட்டுள்ளன.

புதிய சொற்களை ஆக்குவதும் பயன்படுத்துவதும் அவசியமானது போலவே சில சொற்களை ஒதுக்கி விடுவதும், கைவிடுவதும் கூட இன்று தேவையானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. ஊக்கல்

ஆ. அடைவுகளைப் பெறுவதற்குரிய சமூகப்பின்புலம்

இ. தொடர்ந்து முன்னெடுக்கப்படும் முயற்சி

ஈ. அடைவுகளை ஈட்டுவதற்கான அறிபரவல்

(Achievement Orientation) முதலியவை இதிற் பங்கெடுக்கின்றன: இந்தப் பல்வேறு மாறிகள் பல மாணவர்களின் கெட்டித்தன ஆக்கத்தை நலிவுறச் செய்து விடுதல் உண்டு. போட்டி நிலைமைகளின் வெளிவீசப்படும் மாணவர்கள் தமது சமூக அந்தஸ்தை இழக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

கெட்டித்தனக் கோட்பாடானது ஒரு விதமான சமூக அநீதிக்குத் துணை போவதால் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் "திறந்த அனுமதி முறைமை" அறிமுகம் செய்ய வேண்டிய நிலைமை முன்னெடுக்கப்பட்டது. தர வேறுபாடு காட்டுதல், நிராகரித்தல், தரங் குறைந்த கல்விச் செயற்பாடுகளின் வெளிப்பாடுகள், முதலிய எதிர்மறைத் தாக்கங்களில் இருந்து விடுபட, திறந்த அனுமதி முறைமை துணை செய்யும் எனக் கருதப்பட்டது. திறந்த அனுமதி முறைமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் ஆரம்பத்தில் குறைந்த ஈட்டுப் புள்ளிகளைப் பெற்றனராயினும் பின்னர் அவர்களின் அடைவுகளிலே தொடர்ச்சியான மேம்பாடு காணப்பட்டது. (Samuel Bowles and Herbert Gints, 1997, p-108) அடைவில் முன்னேற்றம் காட்டியது மட்டுமல்ல, உயர் கல்விக்குரிய தனியாள் குணநலன்கள் பலவற்றை அவர்கள் வெளிப்படுத்தியமை, பாரம்பரியமான கெட்டித்தனக் கோட்பாட்டைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

கல்விவாயிலாக ஏற்படும் அறிகைத்திறன்களின் வளர்ச்சியானது பொருள்சார் உற்பத்தித் திறன்களை அதிகரிக்கச் செய்யும் என்றும், அதன் தொடர்ச்சியாக ஒருவர் ஈட்டும் வருமானத்திலும் வளர்ச்சி காணப்படும் என்று கொள்ளப்படுகின்றது. கெட்டித்தனக் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்திப் பார்ப்போமானால், கல்விப்படி நிலைகளில் ஒவ்வொருகட்டத்திலும் அமைக்கப்படும் கெட்டித்தனக் கோட்பாட்டுச் செயல்முறை ஒரே வகுப்பிலே கற்கும் மாணவரிடத்து வருமான ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திவிடுகின்றது. ஒரே அடைவைப் பெறும் மாணவரிடத்தும் வருமான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்திவிடுகின்றது.

மக்களாட்சி மரபில் அறிவுத் திறன்களை எல்லா மாணவர்க்கும் சம கணிப்புடன் வழங்க வேண்டும். அனைவருக்கும் சமநீதி கிடைத்தல் வேண்டும் என்ற அணுகுமுறை ஒரே வகுப்பில் படிக்கும் மாணவரிடத்துக் கூட சிதறடிப்பை மேற்கொண்டு விடுகின்றன.

மேற்கூறியதன் கருத்து வளர்ச்சியை மேலும் ஆழ்ந்து நோக்கினால், பொருளாதாரச் சுரண்டல்களை மாற்றியமைப்பதற்குரிய திறன்களைக் கெட்டித்தனக் கோட்பாடு கண்டறிந்து கொடுப்பதில்லை, மாறாக சுயநலத் திறன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொதுநலத் திறன்களை இரண்டாம் பட்சமாக்கி விடுகின்றது. இதன் காரணமாக தொழில் வழங்குவோர், கல்வி நிலையங்கள் உருவாக்கிய கெட்டிக்காரர்களைத் திறனாய்வு செய்து தமக்குப் பயன்படாத குணவியல்புகளைச் சுட்டிக் காட்டுதலும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டித்தன வெளிப்பாடுத் தன்மைக்குப் பல வேர்கள் உள்ளன. அவற்றின் பிரதான வேர் "அறியாமை" (Ignorance) வயப்பட்டு நிற்றலாகும். கல்விச் செயல்முறையின் தயக்கத்தில் அறியாமை மீள் உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருப்பதை நிராகரிக்க முடியாதுள்ளது. இந்த நிகழ்ச்சியினூடே கெட்டித்தனக் கோட்பாட்டை முன்னெடுக்கும் பொழுது, செயல்முறையின் ஒரு பரிமாணத்தை மறைத்து இன்னொரு பரிமாணத்தை நயக்கும் தொழிற்பாடாக அமைவதையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

கல்வியறிவானது மேலதிகமான பெறுமானங்களை (Surplus value) உற்பத்தி செய்வதற்குத் துணைசெய்கின்றது. ஆனால் உற்பத்திச்சாதனங்களை உடையோருக்கே மேலதிகப் பெறுமானங்கள் சென்றடைவதால், உற்பத்திச் சாதனங்களின்றி ஆற்றல்களை வெளிப் படுத்துவோரின் திறன்கள் மட்டுப்பாடுகளை எதிர்நோக்குகின்றன. கல்விச் செயல்முறை, சமுகசெயல் முறையோடு ஒன்றிணைந்து நிற்பதால் ஒன்றின் இயல்பு, மற்றையதன் இயல்பின் மீது தாக்கம் விளைவிப்பதைக் காணலாம். உற்பத்தியாளருக்குரிய பிரதான பிரச்சனையாக அமைவது பேரிலாபத்தைப் பெறும் பொருட்டு நிறுவனத்துள்ளும், சமுகத்தினுள்ளும் பொருத்தமான ஒழுங்கமைப்புக்களைச் செய்வதாகும்.

கல்வி நிலையம் எத்தகையதாக இருப்பினும் மாணவர்களுக்கு முன்வைக்கப்படும் முதலாவது செயற்காட்சி பரீட்சையிலே தவறி விடுவதற்கான பயமுறுத்தலாகும். (Threat of Failure) அதன் தொடர்ச்சியாக மாணவர்களது சுய எண்ணக்கருவுக்குரிய பாதிப்புமட்டங்கள் என்ற பயமுறுத்தல் முன்வைக்கப்படுகின்றது. தொழிலாளர்களதும் நலிவடைந்தோரதும் பிள்ளைகள் கல்விவாயிலாக சமுகசெல்வத்தில் (Social Weaith) முன்னரிலும் கூடுதலான பங்கு பெறவேண்டும் என்ற வேட்கை கல்விச் செயல்முறையிலே தொடர்ச்சியாக முன் வைக்கப்படுகின்றது. கெட்டித்தனத்தின் தனித்துவமான பண்பு அறிகைசார் வெளிப்பாடுகளின் அளவீடுகள் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (Hvey Averch, 1972) வளம்சார் ஆற்றல்கள் எவ்வழிகளிலேனும் வளர்த்தலும், ஊக்குவித்தலும் கெட்டித்தனத்துக்கு அடிப்படைகளாயின.

கல்வி நிலையங்கள் மகிழ்ச்சியூட்டும் நிலையங்களாக இருப்பதற்கு மாறாக அன்றியமைய உணர்வுகளைத் தரும் நிலையங்களாகவும், தேர்வுகள் மதிப்பீடுகள் முதலியவற்றில் நெகிறாப் பண்பு கொண்டவையாகவும் காணப்படுகின்றன. நவீன பள்ளிக்கூட அமைப்புக்களில் ஆசிரியர்-களின் சுயாதீனமான செயல்வலு ஒப்பீட்டளவிலே குறைவடைந்து, மேல் நிலைகளில் இருந்து தரப்படும் அதிகாரங்களைச் செயற்படுத்துவோர் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். **இதன் தருக்க நிலை வளர்ச்சியில் கெட்டிக்கார மாணவர்களை உருவாக்கும் நிலையிலிருந்த ஆசிரியர்கள், கெட்டிக்கார மாணவர்களைக் கண்டறியும் உத்தியோகத்தர்களாக மாறி வருகின்றனர்.**

மேலைநாட்டுப் பள்ளிக்கூடங்களில் முன்னர் "ஒழுக்காறு" (discipline) என வலியுறுத்தப்பட்ட எண்ணக்கரு இன்று நடத்தைச் சீர்ப்படுத்தல் (behaviour modification) என்று குறிப்பிடப்படுகின்றது. அகத்தையும் புறத்தையும் ஒன்றிணைப்பதாக "ஒழுக்கம்" என்ற எண்ணக்கரு விளங்கியது. ஆனால் என்பது வெளித்துலங்கும் நடத்தைகள் மீதே தீவிரகவனம் செலுத்துகின்றது. சமுக ஒழுங்கமைப்புக்கு இயைந்தவாறு ஆசிரியர்கள் நடத்தைச் சீர்ப்படுத்தலில் ஈடுபடவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தைச் சீர்ப்படுத்தலின் வழியாக அறிகைத் திறன்களுக்கே கூடிய அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக ஆளுமையின் ஏனைய பரிமாணங்களை வளர்ப்பதற்குரிய ஊக்குவிப்புக்கள் பின்னடைவை எதிர் கொள்ளுகின்றன.

ஒருவரது பிறப்பால் அன்றி அவரது கெட்டித்தனத்தால் புதிய சமூக அந்தஸ்தைப் பெறலாம் என்பது தான் கெட்டித்தனக் கோட்பாட்டுக்குச் சாதகமான உரை.

சமூக பொருளாதார ஆக்கத்தோடு கல்விச் செயற்பாடுகள் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு மனிதரதும் தனித்துவமான இயல்புகளை மேலோங்கச் செய்யும் தேவைகளிலும் பார்க்க இலாபமீட்டலும், மேலாண்மையும் சமூகப் பொருளாதார ஆக்கத்தினால் ஊக்குவிக்கப்படும் நிலையானது கெட்டித்தனக் கோட்பாட்டோடு இணைத்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

பொருளாதாரம் தொடர்பான பெரும் தீர்மானங்கள் ஒரு சிலரால் மட்டுமே மேற்கொள்ளப் படுகின்றன. பெரும் தீர்மானங்களை மேற் கொள்ளாதோர் வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்வதன் வாயிலாகப் பாதுகாப்புத்தேட முற்படுகின்றனர். தொழில் பெற்றோர் மேலதிகார வலுவுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிவு கொள்ளல் வேண்டும். இத்தகைய ஒரு நிலை கல்விசார்ந்த ஆக்கத்துக்கு உற்சாகம் தருவதாக இல்லை.

கெட்டித்தனக் கோட்பாடு என்பது சந்தைச் செயல் முறைக்கும் கல்விச் செயல்முறைக்கும் உள்ள இடைவிளைகளால் வளர்ச்சியுறும் போக்கினைக் கொண்டுள்ளமை புலனாகின்றது. சந்தை என்பது போட்டிக்குரிய தளமாகின்றது. அதன் தெறிப்பாகக் கல்விக் கூடங்களும் போட்டிக்குரிய தளமாக மாறியுள்ளன. தொழிலாளர்கள் உற்பத்திக் கருவிகள் மீதும், செயல்முறை மீதும் உரிமை கொண்டாட முடியாதிருப்பதைப் போன்று ஆசிரியரும், மாணவரும் கல்விச் செயல் முறையின் மீதும், கல்விக் கட்டமைப்பின் மீதும், கல்வித் தளபாடங்கள் மீதும் உரிமை கொண்டாட முடியாதிருக்கின்றனர்.

ஆசிரியர்கள் கல்விமுறைமையைத் திறனாய்வு செய்யும் பொழுது, அது பலம் பொருந்திய கருத்தாக எதிரொலிப்பதில்லை. மாறாக பெரும் உற்பத்திநிறுவனத்தின் உரிமையாளர் கல்வி முறைமையைத் திறனாய்வு செய்யும் பொழுது அது பலம் பொருந்திய கருத்தாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதாவது கல்வியைக் கல்வி சாராதோர் கட்டுப்படுத்தும் நிலை (Control of education by Non Educationist) வளர்ச்சியடைகின்றது. சந்தை நிலவரத்தோடு இதனை ஒப்பிட்டுப் பார்த்தால், சந்தையின் வேலை இயல்பானது வேலையாள் அல்லாதவர்களினால் கட்டுப்படுத்தப்படும் (Control of work by non workers) நிலைக்கு இது இணையானதாகின்றது.

கல்வியைக் கல்வி சாராதோர் கட்டுப்படுத்தும் பொழுது, கெட்டித்தனத்துக்குரிய கட்டளைகளை உருவாக்குவதிலும் கல்வி சாராதோரின் கருத்துக்களே பலம்மிக்கவையாக அமைகின்றன. கல்விசாராதோரின் இயல்புகளுக்கு இயைந்தவாறு மாணவரும் தமது இயல்புகளை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. தொழில் புரிவோரின் தொழில்சார் திருப்திபற்றி ஆராய்ந்தோர், தொழில்சார் உளநிறைவு என்பது நல்ல சம்பளம், நல்ல வேலைச் சூழல் முதலியவற்றால் மட்டும் ஏற்படுவது அல்ல என்றும் தொழிலானது வாழ்க்கை நிலை அர்த்தமுள்ளதாகவும் (meaningful) ஆக்கத்திறனை (creativity) வெளிப்படுத்துவதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் பொழுதுதான் தொழிற்திருப்தி ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (work in America report 1973)

இந்த ஏற்புடைமை கல்விச் செயல்முறைக்கும் பொருந்தும், கல்விச் செயல்முறையானது வாழ்க்கைப் பொருண்மை கொண்டதாகவும், படைப்பாற்றலை வளர்க்கவும் துணை செய்யாதவிடத்து எத்துணை வசதியும் வளமும் கொண்டதாக இருப்பினும் கல்விநிலையத்தின் வாயிலாக மாணவர் திருப்தி கொள்ள முடியாதிருக்கும். கெட்டித்தனத்தை இனங்காணும் செயல் முறை வாழ்க்கை புலப்படுத்தாமல் இருந்தால் படைப்புத் திறனை வெளிப்படுத்தாமல் இருந்தால் - அதன் வாயிலாக உளத்திருப்தி எட்டப்பட முடியாமலிருக்கும்.

சந்தைக் கோலங்களின் தாக்கங்களால் மனித இயல்புகள் மாறுவதை, எறிக்புறொம் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார். "மனிதனுக்குரிய உடலும் உள்ளமும் ஆன்மாவும் அவர்களுக்குரிய மூலதனமாகும். அவற்றைச் சாதகமான முறையில் முதலீடு செய்வதே அவர்களுக்குரிய பிரதான செயற் பணியாகும். அதன் வாயிலாகவே அவர்கள் தமக்குத்தாம் இலாபமீட்டமுடியும். மனிதப் பண்புகளாகிய தோழமை, விருந்தோம்பல், அன்புடைமை முதலியவை விற்பனைப்பண்டங்களாக (commodities) நிலை மாற்றப்பட்டுள்ளன. ஆளுமைச் சந்தையில் அதிக விலை பெறுவதற்குரிய ஆளுமைப்பொதியை மேற்கொள்வதற்கு அத்தகைய நடவடிக்கை அவசியமாகின்றது". Eric fromm 1955, p. 140)

சந்தைக் கோலங்கள் மனித இயல்புகளையும் கல்விச் செயல் முறைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தாக்குதல் பல கோணங்களிலே ஆராயப்படத்தக்கது.

சந்தைமுறைமையும், சமூக சமத்துவமின்மையும் ஒன்றியைந்து கெட்டித்தனத்துக்குரிய பண்புகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது, ஒருவர் தம்மை வெளிப்படுத்துவதில் (self presentation) அவை செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் சமூகப் பின்புலத்தின் தாக்கங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

அ. கெட்டித்தனத்தைக் கண்டறியும் வெளிப்படுத்தலில் உடல்சார் இசைவாக்கம் ஒரு பிரதான காரணியாகக் கருதப்படுமானால் வாய்ப்பு வசதிகள் கொண்ட குடும்பத்தினருக்கு அது பொதுவாக ஒரு தடையாகமாட்டாது.

ஆ. தம்மை வெளிப்படுத்துவதில் ஆங்கில மொழி அறிவு ஒரு பிரதான பரிமாணமாகக் கொள்ளப்படுமிடத்து அது வாய்ப்பு வசதிகள் கொண்ட குடும்பத்தைச் சார்ந்தோருக்குச் சாதகமாக அமையும்.

இ. சமூக மயமாக்கல் போன்று (Socialisation) கல்வி மயமாக்கல் (Educationalisation) என்ற செயல் முறையில் வாய்ப்பு வசதிகள் அற்றோர் பிரதிகூலங்களை அனுபவிக்கின்றனர்.

ஈ. தெரிவுகளுக்கும், நியமனங்களுக்கும் ஆற்றல்மிக்க உசாவுவார்களை (Refrees) வாய்ப்பு வசதிகள் கொண்டவர்களால் தரமுடியும்.

கெட்டித்தனத்தை கல்விக் கூடங்களில் அறிந்து கொள்வதற்குப் பொதுவாகப் பின்வரும் அளவைகள் மேற்கொள்ளப்படுதல் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கலைத்திட்ட செயற்பாடுகளோடு ஒன்றித்தல்.

2. தேர்வுகளில் கூடிய அடைவுகளைக் காட்டுதல்.

3. செயற்பாட்டுத் தொடர்ச்சிகளைக் (consistent) கொண்டிருத்தல்.

4. பாடச் செயற்பாடுகளில் ஈடுபாட்டைக் காட்டுதல்.

5. செயல் ஒழுங்கு (punctual) கொண்டிருத்தல்.

6. நம்பிக்கை வைக்கக்கூடிய இயல்பு (dependable) கொண்டிருத்தல்.

7. எதிர்வு கூறக்கூடிய ஆற்றல் அமைந்திருத்தல்.

8. ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துதல்.

9. சுயாதீனமான தொழிற்பாடுகளை வெளிப்படுத்துதல்.

மேற்கூறியவற்றில் ஆக்கத்திறன், சுயாதீனமான தொழிற்பாடு முதலியவை நியூயோர்க் உயர்தர பள்ளிக் கூடங்களில் வளர்த்துவிடப்படாது, கிள்ளி எறிந்து விடப்படுகின்றன. (penalized) என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (Samuel Bowles and Herbert Gints 1977, pp 137-38) பொதுவாக கைத்தொழில் சமூகங்களில் உற்பத்திப் பண்டங்கள் போன்று, மாணவரும் பொறிமுறையான கற்றல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். கைத் தொழில் வளர்ச்சிச் சமூகங்களின் அடிப்படைத் தருக்கமாக (Initial logic) கெட்டித்தனக் கோட்பாடு அமைகின்றது என்ற கூற்று (Danial bell, 1973 9.409) போட்டி நிலைமைகளுக்கும் வர்க்க ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துவதற்குமான கருத்தாகின்றது. சமூக வர்க்க ஏற்றத் தாழ்வுகளை நியாயப் படுத்துவதற்குமான கருத்தாகின்றது. சமூக வர்க்க அடிப்படையில் தொழில் அடைவுகள் கிடைக்கப்பெறுவதாகக் கூறுதல் கல்வியடிப்படையிலான ஒரு புதிய உயர்குழுவின் ஆக்கத்துக்கு வழிவகுப்பதாக அமைகின்றது.

இவற்றின் படிமுறை வளர்ச்சியாக மாணவர்களை, விவேகம் மிக்கோர், சராசரியானவர்கள், மெல்லக் கற்போர் என்று முத்தரப்பினராகப் பிரிக்கும் மரபும் வளரத்தொடங்கியது. இது ஒரு பரிமாண (one dimensinal) அடிப்படைத்தரம் பிரிப்பாக அமைவதோடு மட்டுமல்லாது, வேறும் பல சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றது. அதாவது வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்குப் பதிலாக, வர்க்க வேறுபாடுகளுக்குரிய புதிய கட்டளையங்களை (criteria) யும் ஏற்படுத்தி வருகின்றது.

மாணவர்கள் அனைவருக்கும் கல்வியில் சமசந்தர்ப்பங்களை வழங்கி அதன்மேல் கெட்டித்தனக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல் சாலச் சிறந்தது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. (thomas p. roHlan, 1983, p. 135)

இதுவும் ஒரு பரிமாணக் கருத்தாகவே அமைகின்றது. பள்ளிக் கூடங்கள் வாயிலாக சமசந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் மட்டும் போதாது. சமூகத்திலும் சமசந்தர்ப்பங்களையும் சமநீதியையும் ஏற்படுத்துதல் இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டித்தனக் கோட்பாடு பொதுவாக மனித விழுமியங்களை நிராகரித்து விடுகின்றது. மாணவர்கள் பின்பற்றும் விழுமியங்களை அறிந்து அவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப் படுவதில்லை. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை முதலாம் விழுமியங்கள் மாணவர்களது உள்ளங்களிலும், நடத்தைகளிலும் பதிய வைத்தல் பற்றி கெட்டித்தனக் கோட்பாட்டிலே கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

கல்வியிலாளர் விழுமியங்களின் உதிர்வு பற்றிப் பல கோணங்களிலே ஆராய்ந்துள்ளனர். (V.K. Gupta and M.S. Sachdev, 1996, p. 225) அவற்றுட் சில வருமாறு.

அ. கற்பித்தல் நிர்வாக அமைப்புக்கள் முதலியவற்றில் சுயநலம் காணப்படுதல்.

ஆ. கூட்டுறவு, நல்லுணர்வு, சகோதரத்துவம், சமூக சேவைப்பண்பு முதலியவை நிறுவனங்-களில் இல்லாது போதல்.

இ. எல்லா விதமான பிறழ் நடத்தைகளும் சகல மட்டங்களிலும் காணப்படல்.

ஈ. சுயவொழுக்கம், கடின உழைப்பு, நேர்மை, முதலியவை அருகிவருதல்.

உ. கீழ்ப்படிவு அருகிவருதல்.

ஊ. விழுமியங்களை நிராகரித்து விட்டு பணத்துக்கும், பொருளாதாரங்களுக்கும் முதன்மை தருதல்.

இலங்கையின் கல்வி விரிவாக்கத்தோடு இணைந்த ஒரு செயற்பாடாகக் கெட்டித்தனக் கோட்பாட்டின் எழுச்சி (the rise of meritocracy) காணப்படுகிறது. கெட்டித்தனத்தைக் கல்வியில் வலியுறுத்தியவேளை, சமத்துவம் சமவாய்ப்பு, சமகணிப்பு முதலியவை அனைத்து மாணவர் களுக்கும் கிடைக்கின்றதா என்பதை ஆழ்ந்து அறிய வேண்டியுள்ளது. கல்விப் பிரச்சனைகள் பற்றிப் பேசும்பொழுது சமத்துவமும் பொறுப்புடைமையும் (equality and responsibility) பற்றிச் சிந்தித்தல் தலையாயது என்ற கருத்தைக் கல்வியியலாளர் வலியுறுத்துகின்றனர். (James Bowen, 1981, p. 551)

முகிழ்த்து வரும் புதிய சமூகத்துக்குக் கல்வி செயல்முறை முகம் கொடுக்க முடியாதிருக்கும் அவலங்களையும் ஆய்வாளர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளனர். (Alvin Tofler, 1997, p. 360)

இலங்கையின் பின்புலத்தில் கெட்டித்தனக் கோட்பாட்டின் நடைமுறைக்கும் விலகலுக்குமாக சில எடுத்துக்காட்டுக்களைச் சுட்டிக்காட்டலாம்.

1. அ.நடைமுறை : ஈட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் வழங்குதல்.

ஆ.விலகல் : மாவட்டங்களின் அடிப்படையில் வெட்டுப்புள்ளியை வேறுபடுத்துதல்.

2. அ.நடைமுறை : இலங்கை முழுவதற்குமான ஈட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத் தெரிவுமுறைமை.

ஆ.விலகல் : மாவட்ட அடிப்படையில் வெட்டுப்புள்ளியை வேறுபடுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.அ. நடைமுறை : அரச தொழில் தெரிவுகளில் ஈட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் அறிமுகப் படுத்தியமை.

ஆ. விலகல் : நியமனங்களில் இடமளித்தமை.

தொகுப்புரை:

அ. தொகுத்து நோக்கும் பொழுது கெட்டித்தனக் கோட்பாட்டை முன்னெடுப்போர், பன்முக சமுகங்களின் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது. மொழி, இனம், பண்பாடு சார்ந்த உணர்வுகள் கெட்டித்தனத் தெரிவுகளை தாக்காதிருப்பதை உறுதிசெய்தல் வேண்டியுள்ளது.

ஆ. சமுகத்தில் வாய்ப்புடையோருக்கு கெட்டித்தனக் கோட்பாடு சாதகமாக இருப்பதனால், சமுக ஏற்றத்தாழ்வுகளை மனங்கொள்ளாது தனித்து அக்கோட்பாட்டினை நடைமுறைப் படுத்தல் ஒரு தலைப்பட்சமான செயற்பாடாகிவிடும்.

இ. கெட்டித்தனத்தைக் கணிப்பீடு செய்யும் பாரம்பரிய முறையியல்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளன.

கல்வி ஒரு தொடர்செயல்முறையாக இருப்பதுடன், காலந்தோறும் இடம்பெற்ற வழுக்களைத் திருத்தும் நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. இந்நிலையில் கல்வியும் கெட்டித்தனக் கோட்பாடும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

Reference:

1. Alvin Toffler, Fu P. Shook, Pan Publishers, London, 1971.
2. Danial Bell. The coming of Post Industrial Society, Basic Books, New York, 1955.
3. Department of Health, Education and Welfare, Work in America Report, 1973.
4. Erio Fromm, The Saciety, Reihart, New York, 1955.
5. James Brown, A History of Western Education Vol - 3, Mehuen, London, 1981.
6. Lenon J Kamin, The and Politice of I. Q, Erlbaum Associates, New York, 1974.
7. Samuel Bowles and He Gints, Schooling in Capitalisr America, Kegan Paul, London, 1977.
8. Thomas Rohlen, Jap High Schools, University of California, Los Angeles 1983.

"தமிழ்மொழியால் வளர்ச்சியடையும் நாம் தமிழின் தொன்மையைக் கட்டிக் காக்க வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக - ஈழத்தமிழ் அறிஞர்களிடையே நிலவிய புலமைசார் உறவுகள்

(19ஆம் நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வுக்களங்கள்)

கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா

முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நீண்ட நெடுங்காலமாகவே தமிழ்நாட்டுத் தமிழறிஞர்களுக்கும் ஈழத்துத் தமிழ் அறிஞர்களுக்கும் புலமைசார் தொடர்புகள் இருந்துவந்துள்ளன. இப்புலமைசார் தொடர்பின் உன்னத நிலையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே மிகச்சிறப்பாகக் காணலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முந்திய புலமைசார் உறவுகள் பற்றி, முழுமையான தகவல்களைப் பெறமுடியவில்லை. எனினும் சிறுபான்மையாக இப்புலமைசார் தொடர்புத் தடயங்களைக் கண்டுகொள்ள முடிகின்றது.

சோழர்கள் ஈழநாட்டைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த காலப்பகுதியிலே பொறிக்கப்பட்ட சில தமிழ்க் கல்வெட்டுக்களும், யாழ்ப்பாண இராச்சிய காலத்திலே தமிழ்நாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் இடையேயிருந்த கல்வி, இலக்கித்தொடர்புகளும் விரிவான ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை ஆகும். கந்தபுராணம் ஈழநாட்டுக்கு வந்து நிலைபெற்ற காலப்பகுதியும், அதன் பயில்முறைப் பண்பாடும் யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திற்குரியதாகலாம். இவை பற்றியும் தெளிவானதோர் ஆய்வுத் தேவையுண்டு.

இலங்கையைப் போர்த்துக்கேயர் ஆட்சிசெய்த காலப்பகுதியிலே ஈழநாட்டைச் சேர்ந்த தமிழறிஞர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று கல்வி கற்றுப் புலமைபெற்று விளங்கியமைக்கான சான்றுகள் உள. சிவஞானசித்தியாருக்கு உரைகண்ட ஞானப்பிரகாசர் இந்தவகையிலே ஆய்வு செய்யப்படவேண்டியவர். ஞானப்பிரகாசரோடு உடன் தமிழ்நாடு சென்ற வரணித் தில்லைநாதத்தம்பிரானின் சமய இலக்கிய முயற்சிகள் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி நிலவிய காலப்பகுதியிலே தமிழ்நாட்டில் இருந்து (காஞ்சிபுரம்) ஈழநாட்டிற்கு வந்து கல்வி, இலக்கியப் பணிபுரிந்த கூழங்கைத் தம்பிரான் எனும் கனகசபாபதி யோகி ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே மிகவும் முக்கியமானவராவர். ஈழத்துத் தமிழ் கல்வி மரபின் ஊற்றுக்காலாகக் கருதப்படும் கூழங்கைத்தம்பிரான் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. கூழங்கைத் தம்பிரானின் வாழ்வும் பணியும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியவையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முதல் இரண்டு மூன்று தசாப்தங்கள் வரை தமிழகத்திற்கும் ஈழநாட்டிற்குமிடையே மிக நெருக்கமான அத்தியந்த புலமைசார் உறவு நிலவி வந்துள்ளது. இப்புலமைசார் உறவு ஈழநாட்டின் கல்வி, கலை, இலக்கியப் பண்பாட்டுச் செந்நெறியிலே மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அறிஞர்களின் தொடர்பு ஈழத்துத் தமிழறிஞர்களிடையே ஏற்படுத்திய மொழி, இலக்கியப், பண்பாட்டுச் செல்வாக்கினையும் ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகும்.

19 ஆம் நூற்றாண்டில் ஈழநாட்டுத் தமிழ் அறிஞர்கள் தமிழ்நாட்டுப் புலமைப் பரப்பிலே பெற்றிருந்த இடத்தினையும், ஏற்படுத்திய தாக்கத்தினையும் ஆய்வு செய்யவேண்டியதும் அவசியமாகும்.

பொதுவாகத் தமிழக, ஈழத்துத் தமிழறிஞர்கள் பரஸ்பர நல்லுணர்வுடன் செயற்பட்டுள்ளனர். இந்தவகையிலே ஆறுமுகநாவலர், வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை, மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சபாபதி நாவலர், சங்கர பண்டிதர், வி. கனகசபைப்பிள்ளை, தி. த. கனகசுந்தரம்பிள்ளை முதலான பல தமிழறிஞர்கள் ஈழநாட்டுத் தமிழ்புலமைப் பாரம்பரியத்திற்கும் தமிழ்நாட்டுப் புலமைப் பாரம்பரிய்ததிற்கும் பாலமாக அமைந்துள்ளனர்.

நாவலர் யாழ்ப்பாணத்திலே பாடசாலை நிறுவிக் கல்விப் பணியாற்றிய அதேவேளையில் சிதம்பரத்திலும் பாடசாலை நிறுவிப் பணிபுரிந்துள்ளார். இவரைப் போலவே இவர் மரபினர் பலரும் ஈழத்துக் கல்வி இலக்கிய மரபினையும் தமிழ்நாட்டுக் கல்வி இலக்கிய மரபினையும் ஒன்றிணைத்து நோக்கியுள்ளனர்.

பத்திராதிபர் ஊரெழு, சு. சரவணமுத்துப்பிள்ளை ஏககாலத்தில் தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் “சைவ உதயபானு” என்னும் பத்திரிகையை வெளியிட்டார்.

ஈழநாட்டுக் கல்விப் பாரம்பரியமும் தமிழ்நாட்டுக் கல்விப் பாரம்பரியமும் ஒன்றிணைந்து புதியதோர் கல்வி இலக்கிய மரபினைத் தோற்றுவித்துள்ளது எனக் கருதலாம். ஈழநாட்டிலே இந்நிலைமையைப் பெரிதும் காணலாம்.

மொழி, இலக்கியத்துறையிலே ஒருவருக்கொருவர் பல சந்தர்ப்பங்களில் உடன்பாடு உடையவராகவும், சிற்சில சந்தர்ப்பங்களில் முரண்பாடுடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். இந்த நிலை தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவதாகவே அமைந்தது எனக் கருதலாம். தமிழக அறிஞர்களின் அங்கீகாரம் ஈழத்து அறிஞர்களை ஊக்குவித்தமையும் குறிப்பிடக்கூடியது.

கிறிஸ்தவ மிஷனரிமார் தமது மதப்பணிக்கு நிலைக்களனாகத் தமிழ்நாட்டையும் ஈழநாட்டையும் ஏககாலத்திலே கொண்டிருந்தனர். மிஷனரிமாரின் தாக்கம் எந்தளவுக்கு இரண்டு நாட்டுப் புலமைப் பாரம்பரியத்தினையும் பாதித்தது என அறிவதும் அத்தியாவசியமாகும்.

ஈழத்தவர்களின் தமிழகத் தொடர்புகள் ஈழநாட்டுப்புலமைப் பாரம்பரியத்திலே செலுத்திய செல்வாக்கு எத்தகையது என்பதனையும் கண்டுகொள்ளல்வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களிலே யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலிய தமிழ்ச் சங்கங்களின் ஒருங்கிணைந்த பணிகளும் ஆராய்ந்து அறியப்பட வேண்டியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் முடிவில் ஈழத்தின் நவீன இலக்கியம்

செ. யோகராசா M.A.
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டு முடிவுற சில மாதங்கள் மட்டுமே உள்ள இச்சந்தர்ப்பத்தில் எமது நவீன இலக்கியவளர்ச்சி எவ்வாறுள்ளது? என்பது பற்றி சிந்தித்துப் பார்ப்பது ஆரோக்கியமானதும் அவசியமானதுமென்று கருதுகின்றேன்.

1

முதலில் நவீன கவிதை வளர்ச்சி பற்றி கவனிப்போம்;

தமிழில் நவீன கவிதை வளர்ச்சியின் பிறப்பு இந்நூற்றாண்டின் பிறப்புடன் நடைபெற்றது. அதன் பிதாமகன் பாரதி. கவிதையை அரசியலுடனும் அவ்வழிச் சமூகத்துடனும் இணைத்து அவன் சாதனைகளாயின. இரண்டொரு வருஷத்து நூற் பழக்கமுள்ள பொது ஜனங்களை அவன் மனங்கொண்டமையினால் கவிதையின் உள்ளடக்கம் மட்டுமன்றி உருவமும், வடிவமும் அவன் கவனத்திற்குட்பட்டன என்பது கவனத்திற்குரியது. பின்னர் அவன் தாசனை பாரதி தாசனிடம், நவீன கவிதை எழுச்சியும் கூடவே தளர்ச்சியும் கண்டது. அதன் பின் இவனது தாசர்களிடம் நவீன கவிதை ஓசை, ஒலிக் கோலமாயும், அணியலங்காரப் பந்தலாயும் சமாதியடைந்தது. அதே முப்பதுகளளவில் மணிக்கொடி குழுவினரான நாயக்கமூர்த்தி கு. ப. ரா ஆகியோர் அறிமுகப் படுத்திய புதுக்கவிதையும் சமூகத்திடம் இருந்து, சமகால வாழ்விலிருந்து அந்நியப்பட்டே நின்றது. இத்தகு ஆரோக்கியமற்ற நிலையில் 50 களில் ஈழத்து நவீன கவிதை நவீன தமிழ்க்கவிதைக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. மஹாகவி அதன் முன்னோடியானார். இவ்விடத்தில் மஹாகவி தமது தொகுப்பு முன்னுரையில் எழுதியவை கவனத்திற்குரியன.

> "நவீன வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியன
> நவீன உரிப்பொருளை கையாண்டவேளை,
> கவிதை மட்டும் பழைய பொருள் மரபைப் பற்றியே
> சுழன்றமையால் அருகி வரும் கலை எனக் கருது -
> மாறாயிற்று. <u>நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சனை -</u>
> <u>களையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய</u>
> <u>யுகத்திற்கு இழுத்து வரல் அவசியமாகும்</u>"
>
> (கீழ்க்கோடு எம்மால் இடப்பட்டுள்ளது).

இவ்வாறு மஹாகவி இன்றைய யுகத்திற்கு பாரதிக்குப் பிற்பட்ட நவீன கவிதையை இழுத்து வந்தமை மட்டுமன்றி அதன் தவிர்க்க இயலா விளைவுகளாக நவீன கவிதை, செவிப்புல கலையாக்க நெறியிலிருந்து விடுபட்டு கட்புல கலையாக்க நெறியுடையதாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சோசைத் தன்மை மிக்கதாயும், சிறுகதை வடிவப்பண்புகள் கலந்ததாயும், வலிவும், வனப்பும் பெறலாயிற்று.

இதே காலப்பகுதியில் அறுபதுகளில் - தமிழ்நாட்டில் 'எழுத்துக்' குழுவினர் பிரக்ஞை பூர்வமாகப் புதுக்கவிதையை தமிழுக்கு அறிமுகம் செய்கின்றனர். ஆயினும் இப்புதுக்கவிதை முயற்சிகளும் சமூகப் பிரக்ஞையின்றியே வெளிப்பட்டன.

மஹாகவி ஏற்படுத்திய புதியதடம் பல கவிஞர்களால் அகலப்படுத்தலுக்கும், ஆழப் படுத்தலுக்குமுட்பட்டது. நிலாவாணன் ஈழத்துக்கவிதையில் சமூகச்சார்பினை அழுத்தினார். கூடவே பாரதியிடம் வெளிப்பட்ட ஆத்மார்த்தப் பண்பினையும் கவனித்துக் கொண்டார்.

மேற்கூறிய இருகவிஞர்களினதும் சங்கமிப்பான நுஃமான், முற்பட்ட மஹாகவி, நிலாவாணன் ஆகிய இருவரும் இட்ட தடங்களை மேலும் ஆழப்படுத்தினார். நவீன கவிதைக்கு நாடகப்பாங்கும், நாட்டார்பாடல் தன்மையும் அளித்ததுடன், கவிதைவடிவமுறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தினார். ஆர்ப்பாட்டமின்றி இவர் ஏற்படுத்திய வடிவமாற்றமே பிற்பட்ட புதிய தலைமுறைக் கவிஞர்கள் பலருக்கும் (நுஃமான், சண்முகம் சிவலிங்கம், வ. ஐ. ச. ஜெயபாலன், சிவசேகரம், சேரன்) அறிந்தோ, அறியாமலோ ஆதர்சமாயிற்றே தவிர அது தமிழ்நாட்டுப் புதுக்கவிதை வடிவத்தினால் ஏற்பட்ட தாக்கமன்று. (குறிப்பிட்ட இக்கவிஞர்கள் பின்னர் தமது ஆளுமைகளாலும் ஆற்றலினாலும் நவீன தமிழ்க்கவிதையை வளம்படுத்தியமை வேறு விடயம்)

முற்கூறியவாறு அந்நியப்பட்டுநின்ற எழுத்து புதுக்கவிதை, இன்னொரு ஈழத்துக்கவிஞரான தா. இராமலிங்கத்தின் மூலம் தமிழ்ச்சூழலுக்கேற்ப பரிணாமம் பெற்றாலும் அவர் ஏற்படுத்திய மாற்றத்தின் முக்கியத்துவம் உணரப்படாமல் போயிற்று. இதே புதுக்கவிதையினை 'ஆத்மார்த்த' பண்பளித்து வளம்பெறச் செய்தவர் மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம் ஆகியோராவர்.

எண்பதுகளில் ஈழத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பக்கபலமாக அமைய இன்றைய இளந்தலைமுறையினர் பலரிடமும் செல்வாக்குச் செலுத்தியவராக பரிணமித்தவர் (மஹாகவியின் மகனான) சேரன். முற்றிலும் புதிய ஈழத்தின் அரசியல், சமூக அனுபவங்கள், புதிய படிமங்கள், குறியீடுகள், மொழிப்பிரயோகங்கள் ஊடாக - சேரனூடாக - தமிழ் கவிதையுலகிற்குள் பிரவேசித்தன. சேரனின் பின் சோலைக்கிளி ஏற்படுத்திய முன்னுதாரணமற்ற வெளிப்பாட்டு மாற்றமும் நவீன தமிழ்க்கவிதையுலகிறகு புதியதொரு பங்களிப்பாகியது. (உயிருள்ள, உயிரற்ற அஃறிணைப் பொருட்கள் ஊடாக நடைமுறை வாழ்க்கையைக் கண்டுகொண்டவர் சோலைக்கிளி)

இதே காலப்பகுதியில் நவீன தமிழ்க்கவிதையுலகு இன்னும் மூன்று மாற்றங்களைச் சந்திக்கின்றது. அவையாவன

i. இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டக் கவிதைகள் மக்கள் மயமானவை. (எ-டு. தொண்ணூறுகளளவிலான யாழ்ப்பாணப் பிரதேசக் கவிஞர்களது மெல்லிசைப் பாடல்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. பெண்ணிலைவாதச் சிந்தனையுடனான பெண்கவிஞர்களின் வரவு. இவர்கள் இதுவரை பெண்கள் பற்றி ஆண்களால் சொல்லப்படாத செய்திகளை கவிதைகள் ஊடாக வெளிப்படுத்தியமை; அரசியல் கவிதைகளையும் எழுதியமை. (இரண்டிற்குமான சிறந்த எ-டு: சிவரமணி)

iii. எண்பதுகளின் பின் இடம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளை சென்றடைந்த புகலிடக் கவிஞர்களின் வரவு சிறப்பாக இவர்கள் ஊடாக நவீன தமிழ்க் கவிதை மூன்றாம் உலக நாடுகளின் மக்கள்குரலாக ஒலித்தமை (எ-டு: நிருபா).

ஆக இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலே தமிழ் நாட்டிலே பிறந்த நவீன தமிழ்க்கவிதை. நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து இந்நூற்றாண்டின் முடிவுவரை ஈழத்துக் கவிதை வளர்ச்சியுடன் இரண்டறக் கலந்துள்ளமை தெளிவாகின்றது. இதுபற்றி தமிழ்நாட்டு ஆய்வாளரொருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை நினைவிற்கு வருகின்றது.

> "இதுவரை தமிழின் சமூகச் சார்புள்ள
> புதுக்கவிதைகள் தரமுள்ளவையாக உருப்
> பெறவில்லை. இனிவரும் தமிழ்க்கவிதை ஈழத்துக்
> கவிதைகளின் மேற்கண்ட இயல்புகளைச்
> சேர்த்துக்கொண்டால் மிகநல்லது"

2

ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சி ஏற்படுத்திய பூரணதிருப்தியினால் பெருமைப்படும் கணங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போலுள்ளது ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றிய அதிருப்தி நிலை.

பிரக்ஞைபூர்வமான சமுகநோக்குடன் சிறுகதை எழுதுவதில் ஈழத்து எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு வழிகாட்டிகளாயிருந்தரென்பது உண்மையே. ஆயினும் அதன் மறுபக்கம் விசனத்திற்குரியது. எழுபதுகள் வரையான பெரும்பாலான ஈழத்து எழுத்தாளர்கள்

i.. கலைப்பெறுமானத்திற்கு முக்கியமளித்தாரல்லர்.
ii. பிரச்சாரத்திற்கே முதன்மையளித்தனர்
iii. 'கதை' கூறுதல் என்பதனை தாரகமந்திரமாகக் கொண்டு இயங்கினார்.
iv. 'கதை' வடிவத்திற்கும் 'சிறுகதை' வடிவத்திற்குமான தெளிவான வேறுபாடுகளை உணர்ந்திருந்தாரல்லர்.
v. பேச்சுமொழிப் பிரயோகம் பற்றித் தெளிந்திருந்தாரல்லர்.

மேற்கூறிய அதிருப்திநிலை எழுவதுகளின் பின் சற்று மாற்றமுறுகின்றது. இவ்விதத்தில் உமாவரதராஜன், சட்டநாதன், எஸ். எவ். எம். வாரனிபா, சு. யேசுராசா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் சிவலிங்கம் ஆகியோரும் எண்பதுகளின் பிற்கூற்றில் ரஞ்சகுமார் தொண்ணூறு-களில் திருக்கோயில் கவின், புகலிட எழுத்தாளருள் கலாமோகன் (பிற்காலத்து) ராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், பார்த்திபன், கருணாகரமூர்த்தி முதலானோரும் முக்கியம் பெறுபவர்க-ளாகின்றனர்.

தமிழ்நாட்டு முற்போக்கு எழுத்தாளர்கள் எழுத்தின் கலைத்துவம் பெறுமானத்தை எண்பதுகளிலிருந்து உணர்ந்து செயற்பட்டாலும் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் (நந்தினி சேவியர் முதலான விதிவிலக்கானோர் தவிர) இன்னமும் அதுபற்றி கரிசனை கொள்ளாமை சிந்திக்கத்தக்கது.

3

ஈழத்து சிறுகதை வளர்ச்சியால் ஏற்படும் குறைந்தளவு திருப்தியைத்தானும் ஈழத்து நாவல் வளர்ச்சி தரமுடியாத நிலையில் ஊனமுற்று காணப்படுகின்றது. சமூக நோக்குடைய நாவல்முன்னோடிகள் மிகச்சிலரை நாம் பெற்றிருந்தாலும் இவர்களுட்பட பல நாவலாசிரியர்களும்

i. கதை கூறுபவராகவே விளங்குகின்றனர்.

ii. நிகழ்ச்சிகளை அடுக்கிச் செல்வதே 'நாவல்' என்று கருதுகின்றனர்.

iii. நாவல் படைப்பதென்பதனை தொழிற்சாலை உற்பத்திப் பொருள் போன்று எண்ணு-கின்றனர்.

iv. கட்டுரை நாவல்களைச் சிருஷ்டிக்கின்றனர். வருங்காலத்தில் சிலவேளை புகலிட நாவலாசிரியர்கள்

(எ-டு -: பொ. கருணாகரமூர்த்தி) சாபவிமோசனம் வழங்கக்கூடும்.

நவீன கவிதையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் சிறுகதையின் பின்னடைவிற்கும் நாவலின் தேக்க நிலைக்குமான காரணங்கள் பற்றி ஆழமாகச் சிந்திப்பதற்கான காலம் அண்மித்துவிட்டது. இருபத்தோராம் நூற்றாண்டு செய்யும் முன்னறிவிப்பு அதுதான்.

'சமூக விழுமியங்களுக்கு மாறான செயற்பாடுகளைத் தவிர்த்து மாணவர்கள்
"மாணவர் சக்தி" என்பதை புனிதமான கோட்பாடாக மாற்றவேண்டும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதர்கூறும் ரசக்கொள்கை ஓர் மீள்பார்வை

A. N. கிருஷ்ணவேணி B.A.(Hons.) M.A; M. Phil (Madras)

விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

கலை, இலக்கிய வளர்ச்சியிற் பல்வேறு சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் அறிஞர்கள் ஆய்வுக்குட்படுத்தியிருக்கும் நிலையில் 'ரச'க் கொள்கை பற்றிய பரதரது எண்ணக்கருத்துக்களை ஓர் மீள்பார்வைக்குட்படுத்துவது அவசியமாகிறது. கலை, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் அதனை நுகரும் அனுபவிக்கும் வாசகர்கள், பார்வையாளர்கள், ரசிகர்களே அவற்றின் நிலைபேற்றுக்குக் காரணமானவர்கள். ஒன்றைப் பார்த்து அல்லது வாசித்து உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் விளங்கிய பொருள் கொள்ளத்தக்கவர்கள் சராசரிப் பார்வையாளர்களாக, சஹ்ருதயர்களாகக் (Qualified appreciators) கொள்ளப்படத்தக்கவர்கள் என்று கூறிய பரதர் கி.பி 1ம், 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்ற கருத்தும் பொதுவாக நிலவுகிறது. தொல்காப்பியரும் "கண்ணினாலும் செவியினாலும் மிகநுணுக்கமாக உணர்ந்து பொருள் கொள்ளத்தக்க உயர்வுடைய மாந்தர் பற்றிப் பேசுவது குறிப்பிடத்தக்கது. வடமொழிக்காவிய மரபில் பேசப்படும் சஹ்ருதயர் என்போரும், தொல்காப்பியர் கூறும் கண்ணினுஞ் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தர்களும் கலை இலக்கியங்களுக்கும் பொருள் கொள்ளும் ரசிகர்களே என்பது எடுத்துக்கூறாமலே விளங்கும். கலைஞன் ஒருவன் ஒரு நோக்கில் ஒரு சிருஷ்டியை உருவாக்கும்போது அதனை வாசிப்போன் அல்லது ரசிப்பவனது சூழல் வேறாக இருக்கலாம். அவனது உணர்திறன் வேறாக அமைந்துவிடலாம். பார்வையாளர், வாசகரது உணர்திறன் (Sensibility) அவரவர் பண்பாடு சூழலைப்பொறுத்து வேறுபடலாம். கலைஞன் காட்டும் குறியீடுகளுக்குரிய (Symbols) அர்த்தங்கள்கூட மாறுபடலாம். எனவே கலைப்படைப்புகளுக்குப் பொருள்கொள்ளும் முறைமை (Hermaneutics) ரசனையில், அனுபவத்தில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. கலைஞன் தரும் அர்த்தத்துடன் நின்றுவிடாது, தான்வேறுபொருளை எடுத்தல், விளங்கிக் கொள்ளுதல், அவ்வாறு விளங்கிக்கொள்வதற்கான சூழல் தேவை நவீனத்துவ இலக்கிய விமர்சனத்தில் முக்கியத்துவம் பெறும் ஓர் கட்டத்தில், பார்வையாளர், ரசிகர்கள், ரசனை, அது தோற்றுவிக்கப் படும் முறைமை, ரச உற்பத்தியில் பங்கேற்கும் காரணிகள், கலைப்படைப்பில் சஹ்ருதயர்களின் முக்கியத்துவம் போன்ற பல்வேறு கருத்துக்களையும் பரதரது நாட்டிய சாஸ்திரம் தரும் விளக்கநிலை ஓர் மீள்பார்வைக்குட்படுத்துவதன்மூலம் நவீன தத்துவ சிந்தனைகளை மேலும் விரிவுபடுத்துவதுடன் பண்டைய கலை இலக்கியச் சிந்தனையாளர்களின் தீர்க்கதரிசனங்களிலும் நாம் மூழ்கித்திளைக்கமுடியும்.

சஹ்ருதயர்கள் என்போர் யார்?

ஒரு கலைவடிவத்திற்கு புத்துயிர் அளித்து மறுவடிவம் கொடுப்பவர்களே பரதர் கூறும் சஹ்ருதயர்கள். அதாவது கலைஞனது இதயத்தையொத்த கற்பனாசக்தி, படைப்பாற்றல் மிக்கவர்களே சராசரிப் பார்வையாளர்களான இந்த 'சஹ்ருதயர்'கள். 'ஒத்த இதயத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர்கள்' என்பது இச்சொல்லிற்குப் பொருள். சாஹித்ய தர்ப்பணம் என்ற நூலின் ஆசிரியரான விசுவநாதர் ரசிகர்கள்பற்றிக் குறிப்பிடும்போது ஒரு பாடகன் அரங்கிலே கச்சேரி செய்யும்போது மண்டபத்திலே அமர்ந்திருக்கும் கேட்போர் அவனது குறைகளை நிரப்பி விடுவார்கள் என்று கூறுவதுடன் நில்லாது, அவ்வாறில்லையாயின் அவர்கள் வெறும் மண்டபத்தில் உள்ள தூண்களுக்கும், சுவர்களுக்கும் சமமானவர்களே என்று கூறியிருப்பது இங்கு கூர்ந்து நோக்குதற்குரியது.

பரதர் பார்வையாளர்களைப் பற்றிக்கூறுமிடத்து அவர்கள் உணர்வுபூர்வமாகவும் அனுதாபத்துடனும் (sensitive as well as sympathetic) வெறும் அறிபவர்களாக, விளங்கிக் கொள்பவர்களாக மட்டுமன்றி உணருந்திறனுடையவர்களாகவும் இருத்தல்வேண்டும் என்று வலியுறுத்துகிறார். காவியங்களில் அதுவும் வெறும் சூழல் வர்ணனை, இயற்கை வர்ணணைக்கு அப்பாற்பட்ட, பாவம் அல்லது மனித உணர்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட காவியங்களில் (Emotional Poetry) பார்வையாளனின் உணர்திறன், அனுபவிக்கும் ஆற்றல் அதிஉயர்ந்ததாக, அதிமேம்பட்டதாக இருத்தல்வேண்டும் என்பது பரதரின் எதிர்பார்ப்பு. ஏனெனில் உணர்ச்சிகளை உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளில் அது அகம் சார்ந்ததாக (subjective) இருப்பதனால் அதனை உணர்ந்துகொள்ளும் ஆற்றல் அதன் அனுபவத்தில் முக்கியமானதாகிறது. கலைஞன் வெளிப்படுத்தும் பாவங்களுடன் ஒன்றித்தன்னை மறந்து தாதாத்மியமாக, அநுவேயாக அனுபவிக்கும்நிலை 'தன்மயீபவநம்' (empathy) எனப்படும். இங்கு உணர்திறன் என்பது நேரடியானதாகவும், உள்முகம் சார்ந்ததாகவும் காணப்படுகிறது. இவ்வாறு கலைப்படைப்பினை உணர்ந்து, அதனோடு ஒன்றி, அதனுள்லயித்து அனுபவிக்கும்போது பார்வையாளனது உள்ளநிலை உறங்கிக்கிடக்கும் அவனது அடிப்படை உணர்ச்சிகளான ஸ்தாயிபாவங்கள், பல்வேறு புறக்காரணிகளால் ரசமாக உருமாற்றம் பெறுகின்றன. ரசமே அதிஉயர்ந்த அழகியல் அனுபவமாக (aesthetic delight) எடுத்துக் கூறப்படுகிறது.

ரச உற்பத்திக்கான காரணிகள்

பரதரது கருத்துப்படி 'அதிஉயர்ந்த, அழகியலனுபவமான ரசம் என்பது தானாகத் தோன்றுவதில்லை. அது 'தோற்றுவிக்கப்படுகிறது' (நிஷ்பத்திஹி) ரச உற்பத்தியில் பங்கு கொள்ளும் காரணிகளை பரதர் விடய காரணிகள் (objective factors), விடய காரணிகள் (subjective factors) என்று இருவகைப்படுத்துகிறார். விடய காரணிகளாகக் கூறப்படுபவை விபாவம் (vibhava) அனுபாவம் (anubhava) வியபிசாரி பாவங்கள் (vyabhicari bhava) என்பன. விடயீகாரணிகளாகக் கூறப்பட்டுள்ளவை ஸ்தாயிபாவம் (sthayibhavam) பிரதிபை (pratibha) என்பன.

ஸ்தாயிபாவம்

ஸ்தாயிபாவம் என்பது மனிதனுக்கு அடிப்படையாக அமைந்த உணர்ச்சிகள் அல்லது பாவங்கள் (emotions). பரதர் அதனை ரதி, ஹாஸ்யம், சோகம் குரோதம், பயம் ஜுகுப்சை விஸ்மயம் என்று எட்டு வகைப்படுத்துகிறார். மனிதனுக்கு அடிப்படையான இந்த உணர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் கவிதைக்கு அல்லது நாடகத்திற்கு உள்ளடக்கமாக (content) வரும்போது அதனை அனுபவிக்கும் பார்வையாளனது மனதில் உறைநிலையிற் காணப்படும், ஸ்தாயிபாவங்கள் கிளர்ந்தெழுந்து, எதிரொலித்து அனுபவநிலைக்குட்படுகின்றன. இத்தகைய அனுபவநிலைக்கு அவனது பிரதியையும் (imaginative) காரணமாகிறது. இவ்வாறு பார்வையாளனது பூாவங்களை ரசமாக்கும் காரணிகளே விபாவம், அனுபாவம், வியபிசாரிபாவம் என்பன.

விபாவம் எனப்படுவது கதாபாத்திரங்களிடத்தே உணர்ச்சிகள் தோன்றுவதற்குக் காரணமான ஓர் ஊடகம். இது கதாபாத்திரங்களினிடத்தே நேரடியாகவும், பார்வையாளரிடத்தே மறைமுகமாகவும் உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கவல்லது. இது ஆலம்பன விபாவம் (alambanavibhava) உத்தீபனவிபாவம் (uddipana vibhava) என இருவகைப்படும். ஆலம்பன விபாவம் கதாபாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டும், உத்தீபனம் சூழல், இயற்கைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டும் உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கவல்லது. பவபூதியின் உத்தரராம சரிதத்தில் சீதையைக் கைவிட்ட இராமனால் எடுக்கப்பட்டமுடிவு ஆலம்பனவிபாவம். இது சீதையிடம் சோகத்தை நேரடியாகவும், பார்வையாளரிடம் மறைமுகமாகவும் தோற்றுவிக்கிறது. இதற்குக் காரணமாக அமைந்த சூழல், இராமன் எடுத்தமுடிவு சீதையைக் குழந்தையுடன் கைவிட்டமையாவும் உத்தீபனவிபாவங்கள். இவை சோகத்தை அதிகப்படுத்தி, பார்வையாளரை பாவங்களுடன் ஒன்றவைக்கிறது.

அனுபாவம் என்பது உணர்ச்சி வெளிப்பாட்டினால் உடலிற்தோன்றும் அத்தனை மாற்றங்களையும் (physical changes) குறித்து நிற்கிறது. இவை உணர்ச்சிகளின் குறியீடாகக் கொள்ளப்படத்தக்கவை. விபாவங்கள் உணர்ச்சிக்குரிய காரணங்களாயின், அனுபாவங்கள் அதன் காரியங்களாகக் கொள்ளப்படவேண்டியவை. இவை கலைப்படைப்பில் உணர்ச்சிகளைத் தெளிவாக வெளிப்படுத்துவதற்கும், அதன்மூலம் பார்வையாளர் அவ்வுணர்ச்சிகளைப் பெறுவதற்கும் உதவுகின்றன.

சிறப்புவகையான அனுபாவங்கள் சாத்வீகபாவங்கள் (sattivaka bhava) என்றழைக்கப்படும். உணர்ச்சிகளின் தன்னிச்சையற்ற வெளிப்பாடே சாத்வீகபாவம். விம்முதல், வியர்த்தல், மெய்மயிர் சிலிர்த்தல், குரல்மாறுதல் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இத்தகைய சாத்வீக பாவங்கள், ஸ்தாயிபாவங்களுடன் தொடர்புறுகின்றன.

வியபிசாரிபாவம், விபாவம், அனுபாவம் போலன்றி ஓர் பாவமாகவே கொள்ளப்படத்தக்கது. இது ஸ்தாயி பாவத்தை ஒத்தது. ஸ்தாயி பாவம் அடிப்படை உணர்ச்சிகளாயின் வியபிசாரிபாவம் இடையிடையே தோன்றும்பாவம். இது சஞ்சாரிபாவம் என்றும் அழைக்கப்படுகிறது. வியபிசாரி பாவங்கள் கலைப்படையில் ஸ்தாயிபாவங்களுக்கு ஊட்டமளிப்பனவாக உள்ளன. ஒரு காவியத்தில் அதன் அடிப்படை பாவம் காதலானால் ஏனைய உணர்ச்சிகளான ஏக்கம், சலனம், உற்சாகமின்மை, நம்பிக்கையின்மை போன்றவை இடையிடையே தோன்றிமறைவனவாக உள்ளன. இவையூடாகத் தான் காதல் என்ற அடிப்படை உணர்ச்சி ஊட்டம் பெற்று வளர்ந்து செல்கிறது.

பரதர் நாடகம் எனும் கலைவடிவத்தை அடிப்படையாக வைத்து, ரசக்கொள்கையை விளக்கும்போது, கலைப்படைப்பில் கதாபாத்திரங்களிடத்தே தோன்றும் பாவங்கள், பாவத்தின் வெளிப்பாடுகளான அனுபவங்கள், அதிலும் சிறப்பாக சாத்வீக பாவங்கள், வியபிசாரிபாவங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையாவும் அடிப்படை பாவமாக உள்ளடக்கத்திலே அமைந்த ஸ்தாயிபாவத்திற்கு ஊட்டமாக அமைந்து, அக்கலைப்படைப்பை ரசிக்கும் ரசிகர்களிடமும் உணர்ச்சிகளைத் தோற்றுவித்து, அவர்களை ரசனைக்குட்படுத்தும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

பரதர்கூறும் ரசங்கள்

'ரசாத்யாயம்' நாட்டிய சாஸ்திரம் 6வது அத்தியாயம் 'ரசாத்யாயம்' என்றும் 7வது அத்தியாயம் 'பாவாத்யாயம்' என்றும் அழைக்கப்படுகிறது. 'ரசம்' என்பது 'ரஸ்' என்ற வினையடியாகத் தோன்றிய ஒரு சொல். அது சுவைத்தல் என்று பொருள்படும். பரதர் நாடகம் என்ற கலைவடிவத்தின் மூலம் பார்வையாளர், பெறும் ரசானுபவத்தை நாடகத்தின் பயனாக எடுத்துக்கூறுகிறார். காவியத்தில் ரசம் இல்லை என்றால் அது எவ்வித நோக்கமும் அற்றது அர்த்தமற்றது என்கிறார். இவ்வாறு ரசத்திற்கு மிகமுதன்மை கொடுக்கும் பரதர் பல்வேறு செயற்பாடுகளின் மூலமாக அது தோற்றுவிக்கப்படும் முறையினையும் தெளிவுபடுத்துகிறார்.

"விபாவாறுபாவ வியபிசாரி சம்யோகாத்
ரஸ நிஷ்பத்திஹி"

என்ற சூத்திரம் விபாவம், அனுபாவம், வியபிசாரி பாவங்களின் சேர்க்கையினால் தோற்றுவிக்கப்படுகிறது என்ற கருத்தைத் தருகிறது.

விபாவங்களும், அனுபாவங்களும், வியபிசாரி பாவங்களுமே பார்வையாளரிடம் தோன்றும், ஸ்தாயிபாவங்களை ரசமாக உருமாற்றும் காரணிகள் என்பதை

"விபாவாறுபாவ வியபிசாரி ப்ரிவிரதஹா
ஸ்தாயி பாவோ ரசநாம லப்தே"

என்ற சூத்திரம் விளக்குகிறது.

பரதர் எட்டுவகையான ஸ்தாயிபாவங்களையும் அவற்றோடு தொடர்புடைய ரசங்களையும் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

1.	ரதி	- சிருங்காரம்
2.	ஹாஸம்	- ஹாஸ்யம்
3.	சோகம்	- கருணை
4.	குரோதம்	- ரௌத்ரம்
5.	உற்சாகம்	- வீரம்
6.	பயம்	- பயானகம்
7.	ஜுகுப்சை	- பீபத்சம்
8.	விஸ்மயம்	- அற்புதம்

ரதிமுதலிய ஸ்தாயிபாவங்களை சிருங்காரம் முதலிய ரசமாக மாற்றும் காரணிகளை விபாவம் அனுபாவம், வியபிசாரிபாவம் போன்றன.

எமக்கு முதன் முதலாகக் கிடைக்கும் அழகியற் சாஸ்திர நூலான 'நாட்டிய சாஸ்திரம்' கூறும் ரசனைக் கொள்கை பின்வந்த ஆசிரியர்களினால் விரிவுபடுத்தப்பட்டு, இற்றைவரை கலை, இலக்கியக்கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ்பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்றனவா?

என். எம். அமீன் B.A.

பகுதிநேர விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம்

இணைச் செய்தி ஆசிரியர், தினகரன்

செயலாளர், ஸ்ரீலங்கா முஸ்லிம் வெகுஜனத் தொடர்பாளர் அமைப்பு

ஒருவரோடு ஒருவர் சுதந்திரமாகத் தொடர்பு கொள்வதற்கு தொடர்புச் சாதனங்கள் உதவுகின்றன. தொடர்புச் சாதனங்கள் எனும்போது பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றன முக்கியம் பெறுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியுடன் கம்பியூட்டர் மற்றும் இன்டநெட் என்பன முக்கியம் பெறுகின்றன.

இலங்கையில் வாழும் சனத்தொகையில் 28% ஆனவர்கள் தமிழ்பேசும் மக்களாவார்கள். இந்த சமுகங்களுக்கிடையே குறிப்பிட்ட சில விகிதத்தினர்களைத் தவிர பெரும்பான்மையினர் தமிழ்மொழியையே பேசுகின்றார்கள்.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை தகவல்களை வழங்குவதில் பத்திரிகைகளே முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வானொலி, தொலைக்காட்சிகள் என்பன இருந்தபோதும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பத்திரிகைகள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை அவை ஏற்படுத்த-வில்லை என்றே கூறலாம்.

18ம் நூற்றாண்டில் சமுதாயத்தில் பத்திரிகைகள் முக்கியம் பெறத் தொடங்கின. இக்கால கட்டத்தில் செய்தித் தகவலுக்காக பத்திரிகையை நாடவேண்டியநிலை உருவாகியது. இலங்கையில் முதன்முதலாக வெளியிடப்பட்ட பத்திரிகை **கவர்ன்மென்ட் கசட்** ஆகும். இரண்டு பக்கங்களுடன் இப்பத்திரிகை வெளியானது.

இலங்கையில் 1841இல் **உதயதாரகை** என்ற பெயரில் வெளியான பத்திரிகையே முதலாவது தமிழ்ப்பத்திரிகையாகும். மானிப்பாய் அமெரிக்கமிசன் அச்சகத்திலிருந்து இப்பத்திரிகை வெளியிடப்பட்டது. அன்று முதல் இன்று வரை இலங்கையில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் பத்திரிகைகள் வெளிவந்துள்ளன.

தற்போது இலங்கையில் வெளியிடப்படும் தேசிய பத்திரிகைகளில் மூன்றிலொரு பங்கானவை தமிழ்ச் செய்தித் தாள்களாகக் காணப்படுகின்றன. இவற்றுள் மூன்று தினசரிகள் பத்துக்கு மேற்பட்ட வார இதழ்கள் இடம் பெறுகின்றன. **வீரகேசரி, தினகரன், தினக்குரல்** என்பன தேசிய தமிழ்ப் பத்திரிகைகளாகும். **தினமுரசு, நவமணி** போன்ற பத்திரிகைகள் வாரப் பத்திரிகைகளாக வெளிவருகின்றன.

தற்போது தொடர்ச்சியாக வெளிவரும் தேசிய தினசரிகளுள் ஒன்றான 'வீரகேசரி' 1930ல் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியர்களின் நலனைக் கவனிப்பதற்காக சுப்பிரமணியம் செட்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. 1966இல் இப்பத்திரிகை நிறுவனம் **மித்திரன** என்ற பெயரில் மாலைப்பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தது. இலங்கையில் வெளியான முதலாவது மாலைத் தமிழ்ப் பத்திரிகை இதுவாகும். சில காலத்தின் பின் இந்த மாலைப் பத்திரிகை நிறுத்தப்பட்டு ஒரு வாரப் பத்திரிகையாக வெளியிடப்பட்டது. இன்றும் இப்பத்திரிகை ஒரு வாரப் பத்திரிகையாக வெளிவருகின்றது.

இலங்கையின் பிரதான பத்திரிகை நிறுவனமாக 'அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டட்' (லேக்ஹவுஸ்) நிறுவனம் திகழ்கின்றது. தென்கிழக்காசியாவிலுள்ள பத்திரிகை நிறுவனங்களில் ஒரு பிரதான பத்திரிகை நிறுவனமாக இது கருதப்படுகின்றது. இலங்கையில் வர்த்தக ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பத்திரிகை நிறுவனம் இதுவாகும். சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரித்தானியாவில் கல்விகற்றுத் திரும்பிய டி. ஆர். விஜயவர்த்தன இக்கம்பனியின் ஸ்தாபகராவார். 1913இல **டெய்லி நியூஸ்** பத்திரிகையை ஆரம்பித்த அவர் 1932இல் **தினகரன்** என்ற பெயரில் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு தூரநோக்குடனே தினகரன் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மக்களை தேசிய நீரோட்டத்துடன் இணைத்து வைக்கும் பிரதான நோக்குடனே இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. 1932மார்ச் 15ம் திகதி முதலாவது தினகரன் உதயமானது. அன்று முதல் இன்று வரை தினகரன் தொடர்ச்சியாக வெளிவருகின்றது. தினகரனை ஆரம்பித்த நோக்கம் தினகரனால் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறி.

இலங்கையில் பதிப்பு அச்சகத்துறையில் முக்கிய இடம்பெற்ற மற்றொரு கம்பனி எம். டி. குணசேன நிறுவனமாகும். **சுயாதீன பத்திரிகை சமாஜம்** என்ற பெயரைக் கொண்ட இக்கம்பனி **தவச, சன்** என்ற சிங்கள,ஆங்கில தினசரிகளை வெளியிட்டதோடு, 1966இல் **தினபதி, சிந்தாமணி** ஆகிய பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இப்பத்திரிகை நிறுவனம் **தந்தி** என்ற பெயரில் மாலைப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தது. மேலும் **ராதா** என்ற சினிமாப் பத்திரிகையையும் **சுந்தரி** என்ற மாத இதழையும் வெளியிட்டது. 'தினபதியும்' 'சிந்தாமணியும்' தேசிய பத்திரிகைகள் என்ற நாவல் தமிழ், முஸ்லீம் மக்களிடையே செல்வாக்கு மிகுபத்திரிகைகளாகத் திகழ்ந்தன. ஏனைய தமிழ்ப் பத்திரிகைகளை விட புதிய போக்கினை இப்பத்திரிகை கடைப்பிடித்ததன் காரணமாக குறுகிய காலத்திலே இப்பத்திரிகை செல்வாக்குப் பெற்றது. சர்ச்சைகள், மோதல்கள், அம்பலப்படுத்தல் போன்ற விடயங்களுக்கு 'தினபதி' முக்கியத்துவம் அளித்தது. இதன் ஆசிரியராக இருந்த எஸ். டி. திருநாயகத்தின் பங்களிப்பு இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு முக்கியமாக அமைந்திருந்தது. நிதி நெருக்கடி காரணமாக சுயாதீனப் பத்திரிகை சமாஜம் 1990 - 12 - 26ம் திகதி மூடப்படும் வரை 'தினபதி', 'சிந்தாமணிப் பத்திரிகைகள்' தொடர்ச்சியாக வெளிவந்தன. 1995 முதல் 'சிந்தாமணி' **சூடாமணி** எனப் பெயர் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டது. அதுவும் சிறிது காலமே நீடித்தது.

மற்றொரு முக்கிய பத்திரிகை நிறுவனமான 'டைம்ஸ் ஒப் சிலோன் கம்பனி' 1972ல் **ஈழமணி** என்ற பெயரில் தமிழ்த் தினசரி ஒன்றை ஆரம்பித்தது. இப்பத்திரிகைக்கு ஏனைய தமிழ்ப்பத்திரிகைகளுடன் போட்டியிட முடியாத நிலையில் சிறிது காலத்தில் மூடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 மே மாதம் 3ம் திகதி முதல் தினமுரசு என்ற பத்திரிகை வெளியானது. வர்ணத்தில் கவர்ச்சிகரமான முறையில் இப்பத்திரிகை வெளிவந்தது. 1993 முதல் தொடர்ச்சியாக இப்பத்திரிகை வெளிவருகின்றது. இப்பத்திரிகையில் வடக்குக் கிழக்கு யுத்த நிலைமைபற்றி வெளிவரும் விமர்சனக் கட்டுரை, மற்றும் யுத்தம், இனப்பிரச்சினை தொடர்பான தகவல்கள் காரணமாக இதற்கு வாசகர்கள் மத்தியில் நல்ல செல்வாக்குக் காணப்படுகின்றது.

1996ம் ஆண்டு ஒக்டோபர் முதல் **நவமணி** என்ற வாரப் பத்திரிகையை ஸ்ரீலங்கா நியூஸ் பேப்பர் லிமிட்டட்டினால் வெளியிடப்பட்டது. வார இறுதி ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் அரசியல் அந்தரங்கங்கள் போன்று நவமணியில் வெளிவரும் அரங்கத்துக்குள் அந்தரங்கம் பகுதி இப்பத்திரிகையை வாசகர்களை கவர்ந்திழுப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

1997 ஏப்ரல் 6ம் திகதி முதல் தினக்குரல் என்ற தமிழ்ப்பத்திரிகை யுனைட்டட் நியூஸ் பேப்பர்ஸ் பிரைவேட் லிமிடட்டினரால் வெளியிடப்படுகின்றது. பல புதுமையான அம்சங்களை உள்ளடக்கி இப்பத்திரிகை வெளிவருகின்றது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கு இப்பத்திரிகை முயற்சிக்கின்றதன் காரணமாக குறுகிய காலத்தில் சந்தையில் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியுள்ளது என்று கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பகாலத்திலிருந்து **ஈழநாடு** என்ற தினசரி வெளிவந்தது. 1958 முதல் இப்பத்திரிகை வெளிவந்தபோதும் யுத்தநிலை காரணமாக இப்பத்திரிகையை முடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தற்போது யாழ்ப்பாணத்தில் **உதயன்** என்ற பெயரில் ஒரு தினசரி கடந்த சில வருடங்களாக வெளிவருகின்றது.

சிங்கள மொழியில் அண்மைக் காலமாக பல மாற்றுப் பத்திரிகைகள் வெளிவந்துள்ளன. தமிழைப் பொறுத்தவரை சரிநிகர் என்ற பத்திரிகை மாற்றுப் பத்திரிகையாக வெளிவருகின்றது. இருவாரங்களுக்கொரு முறை வெளிவரும் சரிநிகர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள் குறித்து முக்கியத்துவமளித்த செய்திகளையும், விமர்சனங்களையும் பிரசுரித்து வருகின்றது.

மீள்பார்வை என்ற பெயரில் முஸ்லீம்களது கருத்துக்களைப் பிரதிபலிக்கும் பத்திரிகை ஒன்றும் கடந்த சில வருடகாலமாக வெளிவருகின்றது. இப்பத்திரிகையும் தமிழில் வெளிவரும் ஒரு மாற்றுப் பத்திரிகையாக வெளிவருகின்றது.

கடந்த பதினைந்து வருடகாலமாக நாட்டில் நிலவும் தேசிய நெருக்கடிக்கு மத்தியில் தமிழ்ப் பத்திரிகைகள் தம்பணியினைச் செய்வதில் நெருக்கடிகளையும் பல கஷ்டங்களையும் எதிர்நோக்கியே வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் உண்மையான செய்திகளை அப்படியே வெளியிடுவதற்கு முடியாத நிலையைத் தமிழ்ப் பத்திரிகைகள் எதிர்நோக்கியுள்ளன. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சூழல், சுற்றாடல் நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு பணிபுரியவேண்டி இருப்பதனால் சில நிகழ்வுகளை உரிய முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கமுடியாத நிலையை தேசிய தமிழ்ப் பத்திரிகைகள் எதிர்நோக்கியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிகின்றன. யுத்தம், இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ்ப்பத்திரிகைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகளை வெளியிடுவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பத்திரிகை நிறுவனங்களின் கொள்கைகளை மையமாக வைத்தே இவை தீர்மானிக்கப்படுவதனால் இந்த விடயங்களில் பத்திரிகையாசிரியர்களது கரங்கள் கட்டுப்படுத்தப்படுவதுமுண்டு.

இனப்பிரச்சினை, யுத்தம் தொடர்பாக தமிழ்ப்பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள், விமர்சனங்களுக்கு முற்றும் மாற்றமான முறையில், முரண்பட்டவகையில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வெளிவரும் செய்திப் பத்திரிகைகளைக் கண்காணிக்கும் எவரும் இதனை இலகுவில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அம்பலத்திற்குக் கொண்டு வருவதில் பல தடைகள் கஷ்டங்களுக்கு மத்தியில் மேற்கொண்டே வருகின்றன. தமிழ்பேசும் மக்களின் குரலாக தமிழ்த் தினசரிகள் ஆற்றிவரும் பங்களிப்பு குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

"பல்கலைக்கழக மாணவர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் இக்கலைவிழா
தமிழ் அரசியல்வாதிகளிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தட்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முரண் உண்மை"

ஜெ. ஸ்ரீறங்கா
தலைவர்
தமிழ்ச் சங்கம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

மன்றில் ஓர் அசரீரி
ஞானோதயத்துடன் என்
ஞானேந்திரங்களுடன்
நெடுக்குவிசாரணையை ஆரம்பிக்கின்றது.
நீங்களும் ஒட்டுக் கேளுங்களேன்!

திமிர்த் திராவிடனே!
தொன்மைதவிர வேறொன்றும்
பகராதவனே!
நீயாக என்றாவது உன் முன்னோரை
ஆய்ந்திருக்கிறாயா?
அந்நியரின் தேடலில்தானே உன்
நாகரிகம் வெளிவந்தது.

ஐந்நூறு ஆண்டுகளாக
உனையாண்ட ஐரோப்பியர்
தோலுரியணிந்து சக்கிமுக்கிகல்லுடன்
குகைகளில் ....
அதே கணத்தில் சேய்மை எகிப்தில்,
ஆபரணம் பூண்ட அணங்கினர்
ஆடம்பர ஆடை நுகர
வியாபாரியை மனைக்கு அழைக்க,
படையினர் பரிகளில் பவனி
பரிபாலனத்தைக் காக்க,
நாகரிகம் மகோன்னதமடைந்திருந்தது.
அதற்கு முன்பே உன் முதாதையினர்
மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும்
முன்னோடிகளாய் முதிர்ந்திருந்தனராம்.
ஆனால் நீயோ அவரோகணமாய்
மந்தமடைந்து வருகிறாய்.

போலிப் பழமைவாதியே!
உன் இன்றைய கலாச்சாரம்
கல் ஆச்சாரத்திற்குரியது.

எதற்கும் அடுத்தவனில் தொங்கும் நீயா
அடுத்த நூற்றாண்டிற்கு
உன்னைத் தயார்ப்படுத்தப் போகிறாய்?
பண்டைய வரலாறொன்று கால்கிறேன்
கேள்

சக்கரவர்த்திகளின் பேரரசனாம்
அலெக்ஸெண்டர்
பாரசிகம் ஜெயித்து பஞ்சாபி -
பேரரசையும் வென்றவன்
உன்னினக் களிற்றுப்படையெண்ணியே
புறமுதுகிட்டான்
தன்னினத் தனித்தன்மையிழந்து
பாரசீகத்தவளை மணந்து பாபிலோனை
சிருஷ்டித்து
ஈரினத்தை ஏகமாக்க முயல
பாரசீகத்தானாலேயே நச்சூட்டப்பட்டு
நாவெட்டுவயதிலேயே வந்த இடத்திலேயே
அண்ட அதிபதி ஆளாமல்
மாண்டானாம்.
அரசர்கோனிற்கே இந்நிலையெனின்
அடிமையாய் வாழும் உனக்கு!

ஹிட்லரின் ஆரிய இனம்
வடஇந்தியரூடாக சிங்களவர் வரை
வியாபித்து ஆள்கிறது.
தமக்கென தனித்தன்மையை
உருவாக்குகிறது

நாகராய் இயக்கராய் உன்னினம் வாழ
விஜயன் வந்தேறுகுடியாய்ப் புகுந்து
தமிழச்சி குவேனியைக் கைப்பிடித்து
பின்இருபுதல்வர்களை கானகத்தில் விட்டான்
இன்று வேடுவராய் அவர்கள்
சிங்களம் கற்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் புலவனின் எளிய சிலை
பராக்கிரமபாகுவின் வடிவமைப்பாய்
கூடுவிட்டு கூடு பாய்ந்துவிட்டது
நீயோ சும்மாயிருந்தே சகித்திருக்கிறாய்
உனை இனக்குரோதமாய் வாழக்கூறவில்லை
எந்த மொழியினருடனும் தூய தோழமை
பேணு
ஆனால்,
குற்றுயிராய் சேடமிழுக்கும்
உன்னின தனியடையாளம்
காப்பாற்றப்பட வேண்டும் என்கிறேன்.

மரத் தமிழா!
மன்னிக்கவும் மறத்தமிழா!
உன்னினத்தில் குறுகியோர்
தம்மை இழந்து சமூகத்திற்கும்....
நீயோ சமூகத்தை அழித்தாவது
உனக்காய் வாழத் துடிக்கிறாய்.
அவனிற்கும் உனக்கும்
சமாந்தரக்கோடுகளே உவமானம்.
இடைவெளி இன்னும் விரிவடைகின்றது
சுயநலனை பொதுநலனாய்
சிறிதளவாகினும் மாற்றேன்.

இடைக்காலமிருந்து இன்றுவரை
தமிழ்க் குழுமங்கள் ஒத்துமுனைகள்
எனவே தான் அவை
ஒன்றை ஒன்று தள்ளுகின்றன.
மூவேந்தர்களாய் மூர்த்தான்யமாய்
தம்மினச் சமரில் சாதனை படைத்தனர்.
ஆனால் சாதித்தது என்ன?
குமரிவரை ஆண்டார்களாம்
வரைபடத்தில்அதை
வரையறுக்கமுடியுமா?
இன்றோ பன்முகப் பெருக்கம்
இவற்றை ஒன்றிணைக்க
திட்டமிட்ட அறிஞன்
மாற்றின பொதுஎதிரியை மனத்தில்
எண்ணி
'மூல எதிரியின் எதிரி நண்பன்'
என போதித்தார்.
தமிழனின் முதல் எதிரி
அடுத்த தமிழனே என்பதனால்
அந்நிய அடிப்படை எதிரியுடன்
சமாதானமாய் சல்லாபம் புரிந்தன
ஆனாலும் வின்னர்கள்
தொங்கிய நிலையிலும் தமக்குள்
பகைப்பதில் சிறப்புத்தேர்ச்சியடைந்தன.
ஆரிய அடிமைகளாய் அணிவகுத்தவண்ணம்
எத்தனை கட்சிகள்
பிளவுபட்டு பிளவுபட்டே
ஈற்றில் சூன்யமாகப் போகின்றன.

தமிழில் கற்பதற்கு தமிழ்நாட்டில்
தவமிருக்கிறார்கள்
வெட்கமாயில்லை.
அதுசரி. கடவுளையே காட்டுமிராண்டி
என்ற
பெரியார் வழிவந்த நகல் நாஸ்திகர்களின்
விலாங்கு ஆட்சியில்(?) தானே
உன் புனிதஸ்தலங்கள் அமைந்துள்ளன.
'வடமொழி தவிர்த்து தமிழில் பூசை'
அரச ஆணை அமுலுக்கு வருகிறதாம்.
ஆடு நனைவதைக்கண்ட ஓநாய்களின்
அழுகை
புலம்பெயர் நாட்டினில்
இரண்டுங்கெட்ட நிலை தெரியுமா?
தமிழிச்சிகளில் தாசிகள் இல்லையாம்
நெஞ்சுயர்த்தி வீராப்புப் பேசாதே!
எத்தனை உன்னின விபச்சாரர்கள்
மலிவு மதுவில் மயங்கிக்கிடக்கிறார்கள்
குடி குடியைக் கெடுக்கும் என்பதால்
விவாகரத்துப் பெற்றும் குடிக்கிறார்கள்.

பிரதேசவாதங்கள் வகுப்புவாதங்கள்
முதற்கொண்டு
திருட்டுக்கள் என எல்லாவற்றையும்
தாய்நாட்டில் தடை என்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுநாட்டில் அமோகமாய் தூவி
பிரத்தியேகமாய்ப் பிரிந்திருக்கிறார்கள்
அதுமட்டுமா?
காணித்தகராற்றையும் கூட
எம்மினக் கிடுகுவேலிச் சிந்தனைகளுடன்
நாடுகடத்தி மல்லுக்கு நிற்கிறார்கள்
ஆனால் ஒன்று
எம்மினத்திற்குள் மட்டும் இவர்கள்
சூரர்கள்
மாற்றானை ஏறெடுக்க திராணியற்று
முயற்சியற்ற மூடராய்

அடிமைத் தொழில்களில் ஞமலிகளாய்
தாய்மொழியில் அளவளாவுவதே
தரக்குறை என்று எண்ணி மாய்கிறார்கள்
ஆனால்
வீதிகளில் சிறுநீர் கழித்து
அடுத்தவர்களுக்கு எம் கலாச்சாரத்தை
கவனமாய்க் கற்றுத்தருகிறார்கள்
மாமிசம் புசிக்கும் வழிவிடங்கள்
துலபமாய் துலங்கிநிற்க
பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள
கோவில் எனும் ஆகமமறியா
வர்த்தக நிலையங்களில்
தமிழினம் தாய்நாட்டில் பிச்சை எடுக்க
தற்பெருமைக்கு தாரை வார்க்கிறார்கள்
அவர்களும் வரிசெலுத்துவது போல்
சமூகத்திற்கு சிறிதளவு ஏய்த்து
மீதியை ஏப்பம் விடுகின்றனர்.

இந்துவே உன்னிடம் ஓரிரு வினாக்கள்!
உன் மதத்தின் விவிலியம் எது?
எனக்குத்தெரியும் பகவத்கீதைதானே
உன்பதில்
பகுத்தறிவற்றவன் படைத்த அக் கீதையே
சாதியைப் பகுத்து நான்காய் தொடக்கி
வைத்தது
இன்னும் எத்தனை பத்தாம்பசலித்தனங்கள்.
தாழ்த்தப்பட்டவர்கள் தாமதமாய்
கிளர்ந்தெழுந்தனர்

நெசவாளர் மகனாம் வள்ளுவரின்
குறளே முதன்மையென
பார்ப்பன எதிர்ப்பில் பரிந்துரைத்தார்கள்.
பெண்ணடிமைத் தனத்திற்கு
இஃது அழகாய் வித்திட்டிருந்தது.
முன்னது ஆபத்தெனில்
மாற்றீடாய் வந்த பின்னது அபத்தம்.
ஆய்வற்றவனே!

எதைப் பின்பற்றுவது என்றா
வினவுகிறாய்?
தப்பிதங்களை பின்பற்றியே
தரங்கெட்டது போதாதா?
காலத்திற்கேற்ப புதிய திருமறையை
நீயே வடிவமை.

அறிவிலியே!
இந்தியாவில் அயோத்திகட்ட
இலங்கையிலிருந்தும் கல்லனுப்பப்பட்டதாம்.
ஆய்வாளர் அயோத்தி
ஆஃப்கானிஸ்தானில் என
அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

காமத்தை கலையால் வடித்து
ஆன்மீகத்தினுள்ளும் கரைத்தவன்
உன் முத்தகுடி மட்டுமே
நீயோ பாலியல் பற்றி
பகர்வதே பாவமென்று
பரிதாபமாய் வாழ்கிறாய்
பாரதம் அடுத்த நூற்றாண்டில்
பதக்கம் எடுக்கப் போகின்றதாம்
ஆட்கொல்லி நோயில் முதலிடத்திற்கு
அதில் உன் பங்கும் இருக்கும்

மேலைத்தேயம் செவ்வாய்க்கிரகத்தில்
விளம்பரபதாதைகள் நாட்டும் முயற்சியில்
அணுவைப் பற்றி முதலில் கூறிய
ஔவைக்கிழவியின் வழிவந்த நீயோ
உன் புதுவீட்டினுள் புக இராகுகேது
பார்க்கிறாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோளறு பதிகம்' மாற்றுவழி என்றதே
அப்படியிருந்தும் கிரகங்கள்பற்றி
பறைசாற்றும்
எத்தனை சோதிட எத்தர்கள் எம்மத்தியில்
விதிவிலக்காய் விண்வெளி
வீராங்கனையாய்
ஒரேஒரு கல்பனா மட்டும்
அதுவும் அந்நியனுடன் வளர்ந்தமையால்
பத்தாவது கிரகத்தை கண்டுபிடித்து
விட்டார்கள்.
உன் நவகிரகங்களை எப்போது
தசக்கிரகங்களாய் மாற்றுவாய்

மடைமையே!
சந்திரனை அமெரிக்கன் காலால்
மிதித்த பின்பும்
அதை கடவுள் என நம்புபவனல்லவா நீ!
அவதாரம் தாமெனப் பேதைகள்
அரிதாரம் பூசி நிற்க
அடித்து விரட்டவேண்டிய நீயோ
அடிபணிந்து நிற்கிறாய்
ஆதி ஆயுர்வேதம் உன் பாராமுகத்தால்
பாழடைந்து பரிதவிக்கின்றது
பக்கவிளைவு மிக்க ஆங்கில மருத்துவம்
ஆயுர்வேத ஆய்வில்
தமிழ் வைத்தியர்களோ ஆங்கிலமருந்துகளை
விழுதாக்கி பச்சிலையில் தருகிறார்கள்.

உனக்குத் தெரியுமா?
மார்புக் கச்சையும் மடிசாரணிந்த மாதர்
மொகாலயரின் மோகத்தில் தான்
சேலைகளால் சுற்றப்பட்டனவாம்.
இன்று அஃதே உன் கலாச்சாரம்
என்று அடம்பிடிக்கிறாய்.
பாதி உடல் சரீரம்
அரை உடலில் ஆடை
பார்ப்பவர் கண்ணிற்கு விருந்தளிக்கும்
ஆனால் பண்பாட்டை சீரழிக்கும் என்று
சொல்லும் நீ
நாபி தெரிய புடவை செருகுவதிலும்
பாதம்வரை பஞ்சாபி அணிவதே
தவறென்கிறாய்
பழையன கழிதலும் புதியன புகுத்தலும்
காலத்தின் நித்தியம்
உன் முன்னோர்கள் உன்னைப்
போலிருப்பின்
நீயின்று இலைதழைகளுடன்
தானிருப்பாய்.
தாங்கொணா வெயிலில்
கழுத்துப்பட்டியுடன் காற்றோட்டமின்றி
கசாப்புக்கடை செல்லும் காளையை
நிகர்ப்பதை விட
மரவுரி மகத்தாகப் படுகின்றதா?

என்ன மதம்மாறும் உத்தேசமா?
எதற்குத் தாவுவாய்?
மதங்களுக்குத்தான் எப்போதோ
மதம் பிடித்து விட்டதே!
மனமார மனம் மாறு என்கிறேன்
சமயங்கள் இல்லாவிடினும் நன்று
ஆன்மீகமுள்ள மானுடனாயிரு.
ஆம்
சிருஷ்டியை நேரடியாகத் தொடர்புகொள்.
பௌதிக ரீதியில் பரதேசியாய் அலை
பரவாயில்லை
ஆன்மீக ரீதியில் ஆன்மாவை தொடர்புவை

இவ்வளவும் உனைச் சுட்டால்
தங்கத்திற்கு வெள்ளி பூணிட்டு
எஃகு முலாமிட்டு துருப்பிடிக்கும் உனக்கு
புடமிட்டு மாசு களைவதாய்
பெருமை கொள்வேன் - என
முணுமுணுத்தவாறே அசரீரி மறைந்தது.

அடிக்குறிப்பு

முரண் உண்மை	:	Paradox
சக்கிமுக்கிக்கல்	:	Flint
பழமைவாதியே	:	Conservative
மொகஞ்சதாரோ	:	Mohendscho Daro
ஹரப்பா	:	Harappa
போரூஸ்	:	Porus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தினால் ஏற்படும் மருத்துவ ரீதியான தாக்கங்கள்

ந. சுகுமார்

இறுதியாண்டு, மருத்துவபீடம்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

யுத்தம் எத்தனை கொடியதோர் சொல். ஆம் சிந்தித்துப் பார்க்கிறேன். உயிரழிவுகளையும் பொருட் சேதங்களையும் மட்டுமா ஏற்படுத்தியது இந்த யுத்தம். வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை எவ்வளவு பாடுபடுத்தியது, பாடுபடுத்துகின்றது. உயிர்ச்சேதங்களையும் பொருட் சேதங்களையும் மறந்தாலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எதிர்காலச் சந்ததியான இன்றைய சின்னஞ்சிறுசுகளின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினால் நாளை எமது சமுதாயம் சிதறிச் சின்னாபின்னமாவதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியுமா அல்லது ஏற்றுக்கொண்டேதான் ஆக வேண்டுமா?

இன்று முடியும், நாளை முடியும், என்றோ ஒரு நாள் முடியும் என்ற நம்பிக்கை மாறி என்றாவது ஒருநாள் முடியுமா என்ற கேள்விக்குறி தோன்றியுள்ள நிலையில் யுத்தம் ஒரு புறம் நடக்கட்டும் நாம் எமது நாளைய சமுதாயம் சிதறிப் போவதைத் தடுக்க என்ன செய்யலாம் என்று சிந்திக்கத் தவறினால் எதிர்காலத் தமிழ்ச்சந்ததியின் துரோகிகளாக நாம் மாறிவிடுவோம்.

முடிவின்றித் தொடரும் கொடியயுத்தத்தின் மருத்துவரீதியான பாதிப்புக்கள் என்னவென்று ஆராய்ந்தால் தமிழினத்தையே புத்தி சுவாதீனமற்றவர்களாகவும் நோயாளிகளாகவும் நடைப்பிணங்களாகவும் மாற்றிவிடுவதா இந்த யுத்தத்தில் எதிரியின் நோக்கம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

"ஏறத்தாழ 20 - 30 வருடங்களுக்குமுன்பு இலங்கையிலேயே வன்முறையும் கொலை-களும் அடாவடித்தனங்களும் குறைந்த இடம் என்று கூறினால் அது வடபகுதிதான். அப்படிப்பட்ட வட பகுதியில் வாழ்ந்த மக்கள் இன்று ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்யும் அளவிற்குச் சென்று விட்டார்களேயானால் எங்கோ ஒரு இடத்தில் நாம் அவர்களுக்கு எதிராக அநீதி இழைக்கத் தொடங்கியிருக்கின்றோம்" என்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர் ஒருவர் வைத்தியசாலையில் எமக்குக் கற்பிக்கும்போது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய வார்த்தைகள் என்னை மிகவும் சிந்திக்கத் தூண்டியது.

உயிரிழப்புகளும், உடைமைஇழப்புக்களும் அங்கவீனங்களும், அகதிமுகாம் வாழ்க்கையும் குண்டு வீச்சுக்களும், கைதுகளும் சித்திரைவதைகளும் உளவியல் ரீதியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் வர்ணிக்க முடியாதவை. தினசரி நாம் பத்திரிகைகளில் பார்க்கும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் தற்கொலைகள் இந்த உளவியல் ரீதியான தாக்கங்களை வெளிக்காட்டும் ஓர் சிறிய அளவுகோல். தற்கொலைகள் புரியாமல் நாள்தோறும் தமக்குள்ளேயே செத்துக்கொண்டிருக்கும் ஜீவன்கள் எத்தனை. விரக்தியின் உச்சக்கட்டத்தில் ஆயுதங்களே தஞ்சம் என்று நாடும் இளைஞர்கள் எத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, உடை உறையுள் அடிப்படைத் தேவைகள் உயிர்வாழப் போராடும் அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பற்றிய கவலை ஏது? போசாக்கின்மையால் ஏற்படும் நோய்களையும், அறிகுறிகளையும் மருத்துவப் புத்தகங்களில் வாசித்து அறிந்த எமக்கு இன்று அகதிமுகாம்களில் வாழும் ஒவ்வொரு குழந்தையும் மருத்துவப் புத்தகங்களாகி விட்டன. ஆபிரிக்காவில் எங்கோ ஒரு மூலையில் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் மக்களை தொலைக்காட்சியில் செய்தியில் காண்பிக்கும்போது பரிதாபத்துடன் பார்த்த எமக்கு இன்று எமது சொந்தநாட்டில் ஒரு பகுதியில் பட்டினியால் மடியும் மக்களைப் பற்றி பரிதாபப்படமுடியவில்லை. ஏன் அவை செய்திகளிலும் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்படவில்லை என்பதாலா? அல்லது இப்படி எமது நாட்டிலும் நடக்கின்றது என்பதை எம்மால் நம்பமுடியவில்லை என்பதாலா? தமிழ் இனம் அழிந்துகொண்டு செல்கின்றது. தமிழனுக்குக் குடும்பக் கட்டுப்பாடு தேவையில்லை. ஆம் நாம் நினைப்பதிலும் ஓர் அர்த்தம் இருக்கிறது. ஆனால் பிறக்கின்ற குழந்தைகளும் தாயும் ஆரோக்கியமாக இருப்பதற்கு இரண்டு குழந்தைகளுக்கு இடையில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்களாவது இடைவெளி வேண்டும் என்று மருத்துவர்கள் திரும்பத் திரும்பக் கூறுவதை மறந்துவிடலாமா? உயிரைப் பாதுகாக்க ஊரைவிட்டு ஊரும், ஊரைவிட்டுக் காடுகளுக்கும் ஓடிக்கொண்டிருக்கும் எமக்குக் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றியா சிந்திக்க நேரம் என்று ஒரு சிலர் வாதாடலாம். தொடரும் யுத்தம் முடிவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. ஆகவே யுத்தம் முடிந்த பின் அழகான ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பலாம் என்பது ஒரு வெறும் கனவாகவே மாறிவிடும். போருடன் தமது அன்றாட வாழ்வையும் நடத்திச்செல்லப் பழகிவிட்ட தமிழினத்துக்குப் போரினால் ஏற்படும் விளைவுகளுள் எம்மால் தவிர்க்கக்கூடிய அல்லது எமது நடவடிக்கைகளினால் குறைக்கக்கூடிய விளைவுகளைப் பற்றி சிந்தித்து செயற்படவேண்டிய ஒரு கட்டாயநிலை இன்று ஏற்பட்டுவிட்டது.

ஒரு குழந்தை பிறந்தவுடன் எதிர்காலத்தில் இந்தக் குழந்தை பெரியவராகும்போது என்னென்ன நோய்களின் தாக்கத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று நிறமூர்த்தங்களை ஆராய்ந்து சொல்லுமளவிற்கு மருத்துவத்துறை வளர்ந்துவிட்டது. தொற்றுநோய்கள் அருகி தொற்றுநோய் அல்லாத உயர் இரத்த அழுத்தம் இருதயநோய்கள் போன்றவை அதிகரித்துவரும் இன்றைய காலகட்டத்தில் அகதிமுகாம்களிலும், காடுகளிலும் அகதிகளாக வாழ்ந்துவரும் தமிழ்மக்களில் கொலரா போன்ற தொற்று நோய்களால் பலியானவர்கள் பலர்.

தென்பகுதியில் தொலைக்காட்சி, வானொலிகளில் ஒவ்வொரு அலைவரிசையிலும் அன்றாடம் பல்வேறு வைத்திய நிபுணர்கள் நோய்களைப் பற்றி அறிவுரைகள் வழங்குவது தற்பொழுது ஒரு சாதாரண நிகழ்வு. ஏழைமுதல் பணம் படைத்த ஆரோக்கியமான சாதாரண மனிதர்கள்வரை மருத்துவநிலையங்களை நாடி நோய்கள் உண்டா என்று பரீட்சித்துப் பார்க்கும் அளவிற்கு இலங்கையில் சுகாதாரம் பற்றிய அறிவு மக்களிடையே வளர்ந்துவிட்ட காலம் இது. ஆனால் இதே நாட்டின் ஒரு பகுதியில் வைத்தியசாலைகளே அகதிமுகாம்களாக மாறியிருக்கும் நிலை. ஏற்கனவே தொற்றிய நோய்களில் இருந்து சுகம் பெற போராடும் அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வு பற்றிப் பேசுவது விசித்திரமானதாக இருக்கும்.

வடக்குக் கிழக்கு மாகாண வைத்தியசாலையில் இருந்து புற்றுநோய் சிகிச்சைக்காக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அன்றாடம் அனுப்பப்படும் நோயாளர்களில் பலருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றுநோய் என்றால் என்ன என்றே தெரியாது. யுத்தத்தின் கொடிய பிடியில் சிக்கித் தவிர்க்கும் அவர்களிற்கு நோயைப் பற்றி சிந்திக்க நேரம் ஏது? நோயின் அறிகுறிகள் தென்பட்டாலும் இது நோய்க்குரிய அறிகுறி என்று சிந்திக்க நோய்களைப் பற்றிய மருத்துவ அறிவு ஏது? சிந்தித்தாலும் சிகிச்சை பெற மருத்துவ வசதி ஏது? இந்நிலை தொடருமானால் யுத்தத்தினால் மடியும் மக்களைவிட நோயினால் மடியும் மக்கள் அதிகமாவதை தடுக்கமுடியாதநிலை தோன்றும். நமது எதிர்கால சந்ததி பலவீனமான நோயாளிகளாக மாற வேண்டிய நிலை ஏற்படும்.

வானில் இருந்து வீசப்படும் குண்டுகளில் இருந்தும், மழையாகப் பொழியும் ஷெல் வீச்சுக்களில் இருந்தும் வெளியேறும் வாயுக்களும், இரசாயனப் பதார்த்தங்களும், ஒலிகளும் அதிர்வுகளும் வடக்குக் கிழக்கு மக்களின் மீது ஏற்படுத்தும் நேரடியற்ற மருத்துவ ரீதியான பாதிப்புக்கள் பற்றி எவ்விதமான உறுதியான தகவல்களும் இல்லை. இவை இளம் பெண்களின் உடலில் ஏற்படுத்தும் தாக்கங்களும் அதனால் எதிர்காலத்தில் அவர்களிற்குப் பிறக்கும் குழந்தைகளில் ஏற்படக்கூடிய தாக்கங்களும் எவ்வாறு இருக்கும் என்பன எல்லாம் ஏதாவது ஆய்வுகள் நடத்தப்பட்டால் அன்றி முடிமறைக்கப்பட்டுவிடும்.

யுத்தம் இயற்கை வளங்களில் ஏற்படுத்தும் அழிவுகளும் அவற்றின் மூலம் நேரடியற்ற விதத்தில் மருத்துவரீதியில் ஏற்படுத்தும் பாதிப்புக்களும் என்று யுத்தத்தினால் ஏற்படும் கொடிய விளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே செல்லலாம்.

இந்தக் கொடிய யுத்தம் மருத்துவரீதியில் ஏற்படுத்தும் தாக்கங்களைவிட தமிழ்மக்களின் கல்வி, பொருளாதாரம் , கலாச்சாரம் என்று ஒவ்வொரு துறையிலும் ஏற்படுத்திய, ஏற்படுத்துகின்ற, ஏற்படுத்தப்போகின்ற பாரிய அழிவுகளை சிந்தித்துப் பார்க்கிறேன்.

இப்படியே அழிவுகளையும், விளைவுகளையும் பத்திரிகைகள் வாயிலாகவும் புத்தகங்கள் வாயிலாகவும் எவ்வளவு காலமாக எழுதிக் கொண்டிருக்கின்றோம், எதுவித ஆக்க பூர்வமான திட்டங்களையும் சிந்தனைகளையும் தெரிவிக்காமல் விளைவுகளைச் சுட்டிக்காட்டி நாம் அடைந்த பயன் என்ன?

எம்மால் பல அழிவுகளை தடுக்கமுடியாது போனால் தடுக்கக்கூடிய அழிவுகளை தடுப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது. உதாரணமாக ஏற்பட்ட நோய்களை குணமாக்க வேண்டிய மருத்துவ வசதிகளை வழங்கமுடியாவிட்டாலும் ஆரோக்கியமான மக்கள் அந்நோயினால் புதிதாகப் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு. குடும்பத்திட்டம், சுகாதாரம், போஷாக்கு என்று பல்வேறு துறைகளில் ஏன் நாம் எமது அறிவை இந்த மக்களுக்கு ஒன்று சேர்ந்து வழங்கக்கூடாது. எமது இனத்துக்கே பலமான இந்த அறிவை ஏன் நாம் பல கல்விமான்களிடம் இருந்து ஒன்று திரட்டி வழங்கக்கூடாது?

யுத்தத்துடன் வாழப்பழகிய நாம் அந்த யுத்தம் ஏற்படுத்தும் அழிவுகளையும் தடுக்க வேண்டிய எம்மால் ஆன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே எனது ஆதங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவிகள் அனுப்பி வைக்கும் அவசரக் கடிதம்"

எஸ். நிலக்ஷன்
பேராதனை பல்கலைக்கழகம்

வணக்கம்!
மானத்தை விற்றுப்
பிழைக்கத் துணிந்து விட்ட
மகா மனிதர்களே,
என்னைத் தெரியவில்லையா?
உற்றுப் பாருங்கள் ....
என்ன?
பதவி மயக்கத்தில்
பார்வை தெளிவில்லையா?
அல்லது ....
நானெப்படி இங்கு
வந்து சேர்ந்தேனென்று
அதிர்ச்சியால் - உங்கள்
கண்களையே
நம்ப முடியவில்லையா?
வடிவாகப் பாருங்கள் .... நான் தான்,
நானே தான்!

இப்போது நான் பயணிக்க
"லயன் எயார்" தேவையில்லை!
கட்டி வைத்த கவச வாகனத்துடனும்
கரணைக் கிழங்கோடும்
சேர்ந்து பயணிக்க
"லங்கா முதித்தவுக்காய்"
காத்திருக்கத் தேவையில்லை!
விரும்பிய நேரத்தில்
விரும்பிய இடத்திற்கு
வாயு வேகத்தில் நாம்
வந்து போகமுடியும்!
ஆம்! விளங்கவில்லையா?
நான் தான்,
காணாமற் போனோர் பட்டியலில்
கடைசித் தானத்திலிருக்கும்
காண்டீபனின் ஆவி.........!
கள்ளியங்காட்டுச் சந்தையில்
காய்கறி விற்ற நான்- இன்று
கால்களற்ற ஓர் ஆவி!
என்னைப் போலவே அங்கு
ஆண்களும் பெண்களுமாய் - ஒரு
அறுநூறு பேர் இருக்கிறார்கள்
எனினும்
எம்மை இன்னும்
"காணாமற் போனோர்" என்று
"கற்றகறைஸ்" பண்ணிவிட்டுக்
கதையளக்கின்றீர்கள்!
காணச் சகிக்காமல் தான்
"கடிதம்" கொணர்ந்துள்ளேன்!

ஆவியுலகு கூட்டிய
அவசரக் கூட்டத்தில்
ஓருமனதாய் எழுதிய
ஓலையிது! வாசித்துப் பாருங்கள்!
ஓ! உங்களில் சிலருக்கு
வாசிக்கத் தெரியாதா?
சரி, கேளுங்கள்
நானே வாசிக்கிறேன்!

கனவான்களே! கனவாட்டிகளே!
காற்றோடு கலந்த
கனிவான வந்தனங்கள்!
"காணாமற் போனோர்"எனப்படும்
கவலைக்குரிய சீவன்கள்
காட்டமாய் எழுதுவது;
நாங்களும் உங்கள் இனத்தவர் தான்
ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வந்தேறு குடிகளென"
வருணிக்கப் பட்ட பின்னும்
வக்கற்ற வாய்வீரர் தம்
வம்சத்தவரெனச் சொல்ல
வெட்கப்படுகின்றோம்!
செம்மணிச் சேற்றில் எங்கள்
செத்த உடல்கள் உக்கிச்
சேர்ந்து கலந்த பின்னும்,
அம்மணிக்கு ஆரத்தி எடுத்து
ஆலவட்டம் பிடிக்கும்
அன்பர்களே!

நாங்கள் செத்தாலும்
நடந்தவற்றை மறக்கவில்லை!
எங்கள் அப்புவுக்கும்
உங்கள் ஆச்சிக்கும்
என்றோ நடந்த
வேலிப் பிரச்சனைக்கும்
பெட்டைப் பிரச்சனைக்கும்
பேட்டுக் கோழியிட்ட
முட்டைப் பிரச்சனைக்கும்
வஞ்சம் தீர்ப்பதற்காய்

சிலர் ஆட்டிய தலையாட்டில்
நாங்கள் மாட்டிக் கொண்டோம்
அவ்வளவு தான்!
ஆனால்,
எமக்கு நடந்த
சித்திரவதையெல்லாம்
நீங்கள் அறியாததல்லவே?
இருந்தும்,
சத்தமின்றி இருப்பதேனோ?

குடித்த சிகரட்டை
அணைக்கும் "ஆஷ்ரே" யாய்
எங்கள் மார்புகளைப்
பாவித்த செய்தி
சித்திரவதைக்கெதிரான
சட்ட மூலத்திற்காய்ச்
சருவதேச மட்டத்தில்
சல சலப்பை ஏற்படுத்தும்
சட்ட வல்லுனர்கள்
சொந்த நாட்டில்
வெந்து போன எங்களையேன்
ஏறெடுத்தும் பார்க்கவில்லை?

வெளிநாட்டுப் பெண்களின்
வேதனை தீர்ப்பதற்காய்
விசாரணை நடாத்துகின்ற
எங்குலப் பெரியவர்கள்
எங்களைப் பற்றியேன்
எதுவும் கதைக்கவில்லை?

செத்த பொதிக்கு அத்தர் ஊத்திச்
செழுமைப் படுத்துவதிலுள்ள
உங்கள் ஆர்வத்தை
இத்துப் போன எங்கள் உடல்களை
வெளியில் எடுத்து
உண்மையை உலகறியச் செய்வது
கொஞ்சம் காட்டலாமே?

காமரட்ணவானாலும் - அந்தச்
சோமரட்ணவுக்குக் குத்திய
மனச்சாட்சி கூடவா
உங்களுக்குக் குத்தவில்லை?

நம்பி நம்பி
நான்கு தலைமுறைகள் ஏமாந்து
நாதியற்றுப் போனபின்னும்
நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்!
கதிரைச் சுகம் உங்கள்
கண்களை மறைக்கிறது!
கருவேப்பிலையாகும் போது
காலம் பிந்திவிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது .....
உங்களுக்கும் புதைகுழிதான்
பரிசாகக் காத்திருக்கும்!
நீங்கள் இவ்விடத்தை
நிரப்பிய பின்னர் தான்
நாங்கள் விடிவு பெற்று
வானுலகஞ் செல்வோம்!
அதுவரை,
அமைதி பெறாத இந்த
ஆத்துமாக்கள் - உங்களை
ஆட்டிப் படைக்கும்!
பாதியிரவில் "fan" சுற்றும்போது
காற்றாக மாறிக்
கண்முன்னே வருவோம்!
அர்த்தராத்திரியில்
அயர்ந்து தூங்குகையில்
ஆவியுருவிலேயே
ஆர்ப்பரித்து வருவோம்!
பஜரோவின் "ஏயருக்கு"
வளிநிரப்பும்போது
வசதியாய்ச் சிலநேரம்
உட்புகுந்து கொள்வோம்!
"சீற்றுப்" பிடிப்பதற்காய்க்
கூட்டங்கூடும் போதும்
"சீலிங்குக்" குள்ளே நாம்
சிரித்துக் கொண்டிருப்போம்
எங்கள் பெற்றோரின்
நிம்மதியைத் தொலைத்து விட்டு,
நீங்கள் மட்டும்
நிம்மதியாய் இருக்கலாமா?
அப்பாவித்தனமாக
அறிக்கை விடுவதெல்லாம்
இந்த நூற்றாண்டோடு
அற்றுப் போகட்டும்!
நெஞ்சை நிமிர்த்தி ஏதும்
நேர்மையாய்ச் செய்யுங்கள்
இன்றேல் .....
"பெஞ்சன்" எடுத்துவிட்டுப்
பேசாமற் போய்விடுங்கள்

உங்களுக்குத் தெரியாமலே
உங்கள் செயல்களை நாம்
உற்று நோக்குகிறோம்!
உங்களை எங்களுக்குத் தெரிகிறது
ஆனால் - எங்களை
உங்களுக்குத் தெரியாது!
ஏனெனில் நாம்
ஊளைச் சதையிழந்த,
ஊனக் கண்களால்
உருவகிக்க முடியாத
ஆவியுருவங்கள்!

எனவே
சிந்தித்துச் செயற்படுங்கள்
உலகின்
நிந்தனைக்கு உட்படாது,
உணர்ந்து செயற்படுங்கள்!
உண்மை நிலையை
உலகுக்கு உணர்த்த
உருப்படியாய்ச் செயற்படுங்கள்!
தேவையேற்படின் நாம்
மீண்டும் மடல் வரைவோம்
அதுவரை,
அன்பு வணக்கங் கூறுவது,
"ஆவியுலகத்து அப்பாவிகள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சமூகவியல் நோக்கில் தமிழ் திரையுலகம்'

- சில விமர்சன குறிப்புகள் -

இரா. ஜெ. ட்ரொஸ்க்கி (சட்ட பீடம்)
இறுதியாண்டு

இருபதாம் நூற்றாண்டு தமிழ் சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களின் மீதும், வாழ்வியல் கூறுகளின் மீதும் தமிழ் திரைப்படத்தின் பார்வை பாயாத இடமே இல்லை எனும் அளவிற்கு தமிழ் திரைப்படங்கள், தமிழ் மக்களின் சமூக வாழ்வியல் விடயங்களை பேசமுனைந்துள்ளன. கலை இலக்கியங்கள் சமூகம் என்னும் விளைநிலத்தின் பயிராக அமையவேண்டும், கலை இலக்கியங்கள் மக்களுக்காகவே படைக்கப்படவேண்டும், மக்களின் வாழ்வை உன்னதநிலைக்கு இட்டுச்செல்ல வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்றவகையில், கட்டுரையின் விரிவஞ்சி, தமிழ்த் திரைப்படங்கள் மீது காத்திரமான சில விமர்சனங்களை முன்வைக்க இக்கட்டுரை முனைகின்றது.

தமிழ் கலை இலக்கியங்களினது வரலாற்று பரிணாம வளர்ச்சியினதும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் தமிழ்ச் சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தினதும் நேரடியான விளைவே தமிழ் திரைப்படங்கள். கூத்துக்களின் வளர்ச்சி நாடகமாகவும் நாடகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி திரைப்படமாகவும் அமைந்துள்ளன.

தமிழ் இலக்கியங்களில், அதர்மம் ஓங்கி தர்மம் அழியும்போது தர்மத்தை நிலைநாட்ட தன்னிகரில்லாத் தலைவன் தோன்றுவான் எனும் கருத்தியல் மிகப்பழமையானது. உலா, பரணி போன்ற இலக்கியவடிவங்களும், அவதாரக் கோட்பாடுகளும் இக்கருத்து நிலையை பிரதிபலிக்கின்றன. சோழர்காலக் காவியங்களில் இப்பண்பு மிகவும் மேலோங்கி இருந்தது. அவ்வக் கால சூழ்நிலையில் நிலவிய சமூக தத்துவார்த்தப் போராட்டங்களின் பின்னணியில், குழுக்களின் தலைவர்களும், வீரம்மிக்க அரசர்களும், இறைவனும் கூட தமிழ் இலக்கியங்களில் தன்னிகர் இல்லாத் தலைவர்களாகவும் மக்கள் துயர் களைகின்றவர்களாகவும் காட்டப்பட்டனர்.

தமிழ்க்கலை, இலக்கியங்களில் அநீதி, வஞ்சகம் ஆகிய கருத்தியங்கள் பிரதான தாக்கு மையங்களாக அமைந்துள்ளன. இந்த வகையில் ஆரம்பகாலத்தில் இருந்து இன்றுவரையும் தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகன் தன்னிகரில்லாத் தலைவனாகவும், அதர்மத்தை எதிர்த்து போராடுகின்றவனாகவும் காட்டப்படுவது ஒரு வரலாற்றுத் தொடர்பைக் காட்டி நிற்கின்றது.

மனித வரலாறு என்பது அரசர்களினதும் தளபதிகளினதும் வாழ்க்கைச் சம்பவங்கள் அல்ல. சமூகப் போராட்டங்களின் தொகுப்பே என்பது நிரூபிக்கப்பட்டுள்ள போதும் தமிழ்த் திரைப்படங்கள் தன்னிகரில்லா தலைவனாக கதாநாயகனைக் காட்டுவதால் சமூக யதார்த்த வாழ்வில் இருந்து தப்பிச் செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலப்பகுதியில் இந்திய சமூகம் இருநிலைப்பட்ட போராட்டங்களை முன்னெடுத்தது. ஒன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து தேச விடுதலைக்கான போராட்டம். மற்றது சமூகத்தின் உள்ளே நிலவிய நிலபிரபுத்துவத்திற்கு - சமூகக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டம். இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் தமிழ்த் திரைப்பட முயற்சியும் உருவாகியது. எனவே இவ்விரண்டுவிதமான போராட்டங்களும் தமிழ் திரைப்படங்களை தவிர்க்கவியலாத வகையில் ஆக்கிரமித்தன.

அந்நியரை எதிர்த்து வீராவேசத்துடன் போராடிய மன்னர்களினதும், மனிதர்களினதும் வரலாற்றினைத் திரைப்படங்கள் உள்வாங்கி பிரித்தானியருக்கு எதிரான சிறந்த அரசியல் கிளர்ச்சிப் பிரச்சாரங்களைச் செய்ய முனைந்தன. மறுபுறத்தில் தெய்வத் திருவிளையாடல்களை படமாக்குவதன் மூலம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கலாச்சாரப் போராட்டத்தைத் திரைப்படங்கள் நடத்தின. 'கப்பலோட்டிய தமிழனும்' 'வீரபாண்டிய கட்ட பொம்மனும்' தமிழ்த் தேசியவாத எழுச்சியின் சின்னமாக காட்டப்பட்டுள்ளனர்.

பிரித்தானியரின் மிலேச்சத்தனமான அடக்குமுறையின் போதும் கூட, காலனித்துவத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வைக் குறியீட்டின் மூலம் திரைப்படங்கள் வளர்க்கமுனைந்தன. உதாரணமாக ஒரு திரைப்படத்தில் திணைப்புலம் காக்கும் பெண் "ஏய் வெள்ளை கொக்கே எங்கள் பயிரை திருடிப்போக உனை அனுமதியேன்" எனப் பொருள்பட பாடுகின்றாள். கொக்கு வெள்ளையராகவும், திணைபுலம் இந்தியாவாகவும் பயிர் இந்திய வளமாகவும் இங்கு காட்டப்பட்டு இந்திய தேசியவளம் பிரித்தானியரால் சூறையாடப்படுவது கண்டிக்கப்படுகின்றது. 'பாஞ்சாலி சபதம்' மூலம் தாய் நாடே வெள்ளையரால் துகிலுரியப்படுகின்றது என்ற உணர்வை ஏற்படுத்திய பாரதியின் செயல் இங்கு நினைவு கூறத்தக்கது.

சுதந்திரத்தின் பின்னரான திரைப்படங்கள் இந்திய சமூக அமைப்பில் நிலவிய நிலபிரபுத்துவ முரண்பாடுகளையும், வளர்ச்சி கண்டுவந்து முதலாளித்துவ கெடுபிடிகளையும் தம் கதை அம்சங்களாக கையாண்டன. நிலபிரபுத்துவம், முதலாளித்துவம் என்பவற்றிற்கு எதிராக தமிழ்நாட்டில் வளர்ச்சி கண்டுவந்த மார்க்ஸியக் கருத்துக்களும், பகுத்தறிவுவாத கருத்துக்கள் திரைப்படங்களில் வெளிப்பட்டன. பகுத்தறிவுவாத இயக்கத்தினர் தமது அரசியல் கருத்துக்களைப் பரப்பும் பிரச்சார ஊடகமாக, ஊதுகுழல்களாகத் திரைப்படங்களைப் பயன்படுத்தினர். இதன் விளைவாக தமிழ்த்தேசிய உணர்ச்சியும், மூடப்பழக்கவழங்கங்களுக்கு எதிரான தன்மை என்பன நகைச்சுவையான கட்டங்களிலும் கூட திரைப்படங்களில் முன்னணிக்கு வந்தன.

தேசவிடுதலை, தமிழ்த் தேசியவாதம் என்று வந்த தமிழ்த் திரைப்படங்கள் பின்னர் மத்தியதரவர்க்கத்தினரின் பச்சாதாபங்களையும் பாலியல் வக்கிரங்களையும் பேசமுனைந்தன. இக்காலகட்டத்தில் இலாபம் ஈட்டும் பெருந் தொழிற் துறையாக திரைப்படதுறை வளர்ச்சி கண்டமையால், இலாபம் ஈட்டும் நோக்கு, கோமாளித்தனமான கேளிக்கூத்தான நாகரிகமற்ற திசைவழியில் தமிழ் திரைப்படங்களை இட்டுச் சென்றது.

இந்தியாவில் நிலபிரபுத்துவம் சிருஷ்டித்த சாதிக்கொடுமை, பண்ணையடிமை, பெண்ணடிமை என்பனவும், முதலாளித்துவம் சிருஷ்டித்த வன்முறை, கொலை, கொள்ளை, விபச்சாரம், அப்பட்டமான சுரண்டல் என்பன பற்றிய கருத்துக்கள் திரைப்படங்களில் பேசப்பட்டபோதும், மக்களை அக்கருத்துக்கள் ஆக்கபூர்வமான திசையில் இட்டுச்சென்றதா? என்பதே இங்கு வினா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் திரைப்படங்கள் இரண்டு விதமான வகையில் பெண்ணடிமையை வளர்த்தே வந்துள்ளது. கல்லானாலும் கணவன் 'புல்லானாலும் புருஷன்' என்று ஆண்கள் எதைச் செய்தாலும் குடும்ப அமைப்பிற்குள் பெண்கள் அதனை பொறுத்துக்கொள்ளவேண்டும் எனக் காட்டுவது ஒரு மரபு சார்ந்த போக்கு. மறுபுறத்தில் அதிதீவிர ஐரோப்பிய நாகரிக மோகம் கொண்டு பெண்விடுதலையைப் பேசுதல். இங்கு பெண் ஆபாசமாக சித்தரிக்கப்படுதல் அவதானிக்கத்தக்கது. இந்த இருநிலைப்பட்ட போக்குமே பெண்ணடிமைத் தனத்தைதான் பேண வழி செய்துள்ளன. சமூக அசைவியக்கத்தினை இனங்காணாத பெண்ணுரிமைக் கருத்துக்களே திரைப்படங்களில் பேசப்பட்டுள்ளன.

இந்திய சமூக அமைப்பில் பெண்ணடிமைத்தனம் இல்லை என்பதல்ல எனதுவாதம். பெண்ணுரிமை கருத்துக்களைப் பேசுவதாக தமிழ்த்திரைப்படங்கள் கூறப்பட்டபோதும் உண்மையில் பெண்களை மானாகவும் மயிலாகவும் போகப்பொருளாகவும் காட்டி பெண்கள்மீது ஆண்களின் பாலியல் வக்கிர உணர்வுகளை தூண்டவும் பெண்கள் மீது ஆண்களின் பாலியல் வன்முறைகளை அதிகரிக்கவும், பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்துவதிலேயே திரைப்படங்கள் பெரும்பங்கை வகித்துள்ளன என்பதில் இருநிலைப்பட்ட கருத்து இருக்கமுடியாது. அடிப்படையற்ற வாதங்கள் மூலம், முதலாளித்துவம் பெண்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அநாகரிகமான அடக்குமுறை, பொருளாதார சுரண்டல் என்ற கருத்தியல்களை திரைப்படங்கள் ஆதரித்து வருகின்றன.

உலகில் நடைபெற்ற போராட்டங்கள், புரட்சிகள் என்பன தீரமிக்க வெகுஜனங்களின் தியாகங்களின்மேல் நடைபெற்றவையாகும். தனிமனிதன் ஒருவனாலேயே ஒரு சமூக விடுதலையை சாதிக்கமுடியும் எனக் கருதுவது, வரலாற்று குருட்டுணர்விற்கு இட்டுச் செல்லும் சிறுபிள்ளைத்தனமான சிந்தனையாகும்.

தமிழ்த் திரைப்படங்களில் காணப்படும் தனிமனித வழிபாட்டுப் போக்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இரண்டு பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. முதலில் தனிமனித வழிபாடு திரைப்படக் கதையம்சங்களை யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட கனவுலகிறகு ரசிகர்களை அழைத்துச் செல்கிறது. இங்கு மக்கள் போராட்டத்திற்கான கருத்து அம்மக்கள் மத்தியில் இருந்து வருவதாக அன்றி, அவர்களுக்கு மேலிருந்து வருவதாகவும், சமூக விடுதலையில் மக்கள் எவ்விதமான புரட்சிகரமான அல்லது முக்கியமான பங்குவகிக்காத திராணியற்றவர்களாக காட்டுவதாகவும் அமைகின்றது. மக்கள் எழுச்சியொன்றில் இந்த கலைகள் காணாமல் போவதற்கு இப்போக்கே முன் நிபந்தனையாக அமைந்துள்ளது.

தனிமனித வழிபாடு மக்களின் புரட்சிகரப் போராட்டத்தை மறுப்பதோடு, நடிகர்களின் நட்சத்திரமதிப்பையும் உயர்த்திவிடுகின்றது. இதன் காரணமாக பிரசித்தமான நடிகர்கள் கோமாளிகளாக நடிக்கும் படங்களையும் கைதட்டி வரவேற்க ரசிகர்கள் மன்றங்களை அமைத்து கோமாளிகளையும் ஏமாளிகளையுமே விருத்தி செய்துள்ளனர். குருட்டுத்தனமாக நடிகர், மீதும் நடிகைகள் மீதும் ரசிகர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். 'உள்ளத்தை அள்ளித்தா', 'தேடினேன் வந்தது', 'தில்லுமுல்லு', 'காதலா, காதலா' போன்ற சில படங்கள் இதற்கு உதாரணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு முரண்பாடான அம்சம் என்னவெனில் சமூக பிரச்சினைகளைப் பேசவரும் நாயகர்கள் அழகானவராகவும் திடகாத்திரமான உடலமைப்புக் கொண்டவராகவும் இருக்க வேண்டும். நடிகைகள் அழகானவர்களாகவும் தாராளமாக தன் உடற்பாகங்களை காட்டுகின்ற-வர்களாக இருத்தல் என்பனவாகும். திரைப்படங்களில் காட்டப்படும் பசுமையான வயல்களை அடுத்து கறுத்த குடிசைகள் உள்ளன. உழைத்து உழைத்து ஓடாய்ப்போன வானமே சாட்சியாக நடக்கும் அக்கிரமங்கள் உள்ளன. உலகில் சமூக விடுதலைக்காகப் போராடிய மாபெரும் தலைவர்களெல்லாம் தமிழ்த்திரையுலக நாயக நாயகிகளைப் போல கவர்ச்சியானவர்கள் அல்ல. சமூகத்தில் பிரச்சினை கவர்ச்சியான மனிதர்களுக்கு மட்டுமா இருக்கின்றது? இந்தவகையில் அழகான ஆணையும் பெண்ணையும் காட்டி பணம் பறிப்பதென்பது நவீன விபச்சார முயற்சியே எனலாம்.

தமிழ்த் திரைப்படங்களில் இருவிதமான வாய்ப்பாட்டுத் தன்மைகள் உள்ளன. அதன்படி ஆரம்பத்தில் கதாநாயகன் பிரச்சினையின்றி குடும்பத்துடன் இருத்தல், மக்கள் நலனுக்காக வில்லனுடன் மோதல், பின்னர் துன்பப்படுதல், இறுதியில் எல்லாவற்றிலும் வெற்றிகொள்ளுதல் என்று ரசிகர் படத்தின் ஆரம்பத்தைப் பார்த்தவுடனேயே முடிவைக் கூறக்கூடிய நிலை காணப்படுகின்றது. 'குருதிப்புனல்', பாரதிகண்ணம்மா' போன்ற புறநடைகளும் மிகக்குறைவாக உள்ளன. மறுபுறத்தில் குறிப்பிட்ட கதையொன்று வெற்றிகரமாக ரசிகரின் பாராட்டைப் பெறின் அதைப் போன்ற கதையமைப்பைக் கொண்ட படங்கள் வெளிவருகின்றன. 'கரகாட்டக்காரனுக்கு பின்னர்வந்த கிராமியப் படங்கள்', 'காதல் கோட்டை'க்குப் பின்னர் வந்த காதல் கதைகளில் இப்பண்பினை அடையாளம் காணலாம். இந்த வாய்ப்பாட்டுத் தன்மையும் திரைப்படத்தை யதார்த்த வாழ்வில் இருந்து பிரிந்துவிட்டது.

திரைப்படங்களில் காணப்படும் நியாயப்படுத்தும் தன்மையினை நோக்குவோம். இந்திய நாட்டாரியல் ஆய்வாளர்களான டாக்டர் சக்திவேல் டாக்டர் லூர்து ஆகியோரின் ஆய்வுகளில், இன்று கிராமிய மக்களால் வணங்கப்படும் பெரும்பாலான சிறுதெய்வங்கள், நிலப்பிரபுக்களின் பாலியல் பலாத்காரத்திற்கு எதிராக தமது உயிரை மாய்த்துக்கொண்ட கற்பு தெய்வங்களாக உள்ளமை காட்டப்பட்டுள்ளது. தவிரவும் இந்தியாவில் கடுமையான போராட்டத்திற்குப் பின்னரே சில உரிமைகளையாவது விவசாயிகள் பெற்றனர். இன்றும் நிலப்பிரபுக்களை எதிர்த்து விவசாயிகள் பெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இச்சூழ்நிலையில் 'எஜமான்', 'சின்னக்கவுண்டர்', 'தேவர் மகன்', 'பாரதி கண்ணம்மா', 'நாட்டாமை' போன்ற படங்கள் பண்ணையார்களை ஒழுக்க சீலராகவும், கருணையாளராகவும், நீதி வழுவாதவராகவும் காட்டி, இந்திய சமூக அமைப்பில் நிலபிரபுத்துவப் பண்ணையடிமைக்கு எதிரான மக்கள் போராட்டங்களைப் பலவீனப்படுத்தவே திரைப்படங்கள் முனைகின்றன.

இங்கு வினாக்களை முன்வைக்க விரும்புகின்றேன். சமூக உற்பத்தியில், உழைப்பில் ஈடுபடாத பண்ணையாருக்கு பெரிய நிலமும் சொத்துக்களும் எங்கிருந்து வந்தன? அவர் வாரி வழங்குவதாகக் காட்டப்படும் சொத்து யாருடையது? திரைப்படங்களில் காட்டப்படுவது போன்று உழைப்பில் ஈடுபடாமல், தொடர்ந்தும் பொருட்களை மக்களுக்கு வழங்குவதோடு, அவருடைய சொத்துக்களும் குறைவடையாமல் இருப்பது எப்படி சாத்தியமாகும்? உடமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு பிரித்துக் கொடுக்கும் பண்ணையார் எப்படி தொடர்ந்து பண்ணையாராக இருக்கமுடியும்?

சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான திரைப்படங்கள் வந்தபோதும், அவை சாதி திமிர்பிடித்த தனிநபர்களின் மனமாறுதல்தான் சாதி ஒழிப்புக்கு வழி எனக் காட்ட முனைகின்றன. 'பாரதி கண்ணம்மா', 'வேதம் புதிது' போன்ற படங்களில் இப்பண்பைக் காணலாம். 'இந்திரா' போன்ற படங்களில் ஒரு இளந்தலைமுறையினரின் எழுச்சியில் சாதிய கொடுமை அழிவுறும் எனக் காட்டப்பட்டபோதும் அது சாதிய அமைப்பின் அடிப்படையை தகர்க்கவில்லை. உண்மையில் சமூகத்தில் பொருளாதாரச் சுரண்டலை ஒழித்துக் கட்டும்வரை சாதிய கொடுமை நிலவிக்கொண்டே இருக்கும். சாதியின் பெயரைக்கூறி உயர்சாதி, கீழ்சாதி என கருதப்படுவோர் தமது சாதிக்குள்ளேயே பொருளாதாரச் சுரண்டலையும் ஏழை பணக்கார வித்தியாசத்தைப் பேணுவது ஒழிக்கப்படவேண்டும்.

இசைத்துறையினை பொறுத்தளவில் திரைப்படங்கள் பெரிய பங்களிப்பினைச் செய்துள்ளன. தமிழரின் பாரம்பரிய இசை, நாட்டார் இசை என்பனவற்றை பாராட்டக்கூடிய அளவில் திரைப்படங்கள் கையாண்டுள்ளன. ஆனால் அண்மைக் காலங்களாக ஏற்பட்டு வரும் அதீத ஐரோப்பிய நாகரிக மோகம் இசைத்துறையில் வேண்டாதவற்றினை புகுத்தியுள்ளது. எந்தவிதமான சமூக தேவைப்பாடும் இன்றி வரையறை அற்றவிதத்தில் மேலைத்தேய இசை தமிழ்ப் பண்பாட்டினுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய கலாச்சார ஆதிக்கத்தின் பின்னணியில் மேற்கொள்ளப்படும் பொருளாதார சுரண்டலை மூன்றாம் மண்டல நாடுகள் தெளிவுபடுத்திக் கொள்ளாமையின் வெளிப்பாடாக மேற்கூறிய பண்பு அமைகிறது.

இலக்கிய தரம்மிக்க, சிந்தனையைத் தூண்டக்கூடிய பல பாடல்களை திரைப்படங்கள் தந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. சமூகப் பொருளாதார அரசியல் கொடுமைகளைச் சாடிய பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்கள் இந்தவகையில் குறிப்பிடத்தக்கன. எனினும் மிகப் பெருந்தொகையான பாடல்கள் பெண்களை போகப்பொருளாகவும் ஆபாச விடயமாகவும், தனிமனித துதிபாடுவனவாகவும், விரக்தி நிலையில் பச்சாதாபப்படுபவனவாகவுமே உள்ளன. மனிதாபிமான தார்மீக சிந்தனை கொண்ட எந்த மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு பாலின்பத்தை, கொச்சைப்படுத்திய புலம்பல்களாக பாடல்கள் அமைகின்றன. 'தனியுடமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா, வளர்ந்துவரும் உலகத்துக்கே நீ வலது கையடா' எனப் பட்டுக்கோட்டையால் நம்பிக்கையூட்டப்பட்ட சிறுவன் இன்று 'சிக்குபுக்கு ரயிலே கலக்குதுபார் அவ ஸ்டைலே' என்றும் 'குச்சிக்குச்சி ராக்கம்மா வரமாட்டா' என்றும் பாலியல் வக்கிரங்களைப் பாடிக் கொண்டிருக்கும் அவல நிலையே காணப்படுகின்றது. இன்றைய சினிமாப் பாடல் என்றாலே பாலியல் வக்கிரந்தானோ எனும் அளவிற்குப் பாடல்கள் மலினப்படுத்தப்பட்டு விட்டன.

தேவையற்ற வகையில் ஆங்கில சொற்களை பாடல்களில் புகுத்தல், அநாவசியமான கூச்சல், தமிழை ஆங்கிலம் போல் உச்சரித்தல் என்பன மூலம் என்ன கருத்தை சமூகத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல வருகின்றார்கள் என்பதே புரியவில்லை. உதாரணமாக காதலன் படப்பாடலான 'பேட்டாராம்' பாடலை குறிப்பிடலாம். இப்பாடல்கள் மன நோயாளர்களின் புலம்பலோ என்றும் எண்ணத்தூண்டுகின்றது.

மிகப்பெரிய செலவில் பாடல் காட்சிகளும், சண்டைக் காட்சிகளும் திரைப்படங்களில் அமைக்கப்படுகின்றன. மருதநாயகம் படத்தின் ஆரம்பச்செலவு பல கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 'ஜீன்ஸ்' படத்தின் வெளிநாட்டுப் படப்பிடிப்புக்குப் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளன. இவ்வளவு செலவு செய்து அப்படி என்ன புதுமையான செய்தியை சமூகத்திற்குக் கூறுகின்றனர்?

மக்களுக்கு அத்தியாவசியமான சமூக உற்பத்தியில் ஈடுபடாத டைரக்டர்களும், படத்தயாரிப்பாளர்களும், நடிக நடிகையரும், இசையமைப்பாளர்களும் பெருந்தொகையான பணத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பது எப்படி? அவையாருடைய பணம்? கோடி கோடியாக பணத்தை செலவிட்டு களியாட்டங்களில் ஈடுபடுகின்றார்களே திரை நட்சத்திரங்கள் அது யாருடைய பணம்? பஞ்சம், பசி, தொழிலின்மை கல்வியறிவின்மை என்று இறப்பின் முகட்டை எட்டும்வரை உழைத்துக் கொண்டிருக்கின்றார்களே அந்த பாமர மக்களின் பணம்தான் அது என்று நிச்சயமாக சொல்லமுடியும்.

வெளிநாடுகளுக்குச் சென்று நட்சத்திர ஓட்டல்களில் தங்கி கும்மாளமிட்டும், வெளிநாடுகளின் நடனக் குழுவினரையும், நடிகைகளையும் வைத்து படமெடுத்துக் கொண்டும் இந்தியாவின் மூலதனத்தை தாரை வார்க்கின்றார்களே இந்த உரிமை யார் தந்தது? அன்று வெள்ளையர் காலனித்துவ நாட்டிற்குள் சென்றுதான் சுரண்டினர். இன்றோ அவர்களின் கால்களிலேயே நாட்டின் தேசிய வளத்தை ஈடுவைக்கும் வேலையை திரைப்படங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதாகக் காட்டி ஒரு புறம் மக்கள் பசி பட்டினியில் இருக்க, மறுபுறம் சிலர் காம களியாட்டங்களிலும் சுகபோகங்களிலும் ஈடுபட்டிருக்கக்கூடிய நிலையை உருவாக்கும் இந்தத் திரைப்படங்கள் தேவைதானா? என்ற வினாத்தோன்றும். பெருந்தொகையான பணத்தைப் பாடல் காட்சிக்காகவும், சண்டைக்காட்சிக்காகவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொட்டி இறைப்பதற்கான சமூகத்தேவை என்ன இருக்கின்றது. மக்களிடம் இருக்கும் வறுமையை கதையாக்கி அவர்களிடம் இருக்கும் எச்சசொச்சங்களையும் கொள்ளையடித்து வயிற்றுப் பிழைப்புவாதம் நடத்திக்கொண்டிருக்கின்றன திரைப்படங்கள்.

தரமான கதைகள், பாடல்கள் என்ற நிலைபற்றி விவாதிக்கும் பத்திரிக்கைகளுக்குப் பதிலாக நடிகைகளின் இடையினையும், எடையினையும், நடிகரின் காமக் களியாட்டங்களையும் பேசும் பத்திரிக்கைகளும் இன்று பக்க விளைவாக வளர்ந்துவிட்டன. எனவே திரைப்படங்களில் சமூக விடுதலைக்கான கருத்துக்களைத் தேடுவது சிறுபிள்ளைத்தனமான செயலாகிவிட்டது.

திரைப்படங்களின் லாபம் ஈட்டும் நோக்கு பாமர மக்களின் சொத்துக்களை சுரண்டவும், தேசிய வளங்களை சிதறடிக்கவுமே பயன்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியங்களில் இருந்த பல வரலாற்றுச் செய்திகளை தமிழ்த் திரைப்படங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டின் பல உயர் விழுமியங்களை வெளியுலகுக்குக் காட்ட முனைந்துள்ளது. தமிழ்ப் பண்பாட்டு வட்டத்திற்குள்ளே இருக்கும் வேறுபட்ட அம்சங்களை அடையாளம் காணவும் மதிக்கவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியது. இந்தியா என்ற தேச உணர்வையும், தமிழன் என்ற தேசிய உணர்ச்சியையும் தூண்டுவதில் பங்களிப்புச் செய்திருக்கின்றது. தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றுப் பதிவுகளாகக் கருதவும் முடியும். எனினும் இப்பண்புகளை திட்டுக்களாகவும் குன்றுகளாகவும் ஆங்காங்கே காணக்கூடியதாக மட்டுமே உள்ளது.

உண்மையில் பெருந்தொகையான பணத்தைக் கொட்டி பணம் சம்பாதிக்கும் வணிகக் கலையாக இன்று திரையுலகம் இருப்பதால் அபத்தமாக வெகுஜனங்களுக்கு எதிரான வழியில் திரைப்படங்கள் சென்றுகொண்டிருக்கின்றன.

உலகளாவிய ரீதியில் புரட்சிகரப் போராட்டங்களூல் காலடிவைக்கும் காலப்பகுதியினுள் நாம் நுழைந்து கொண்டுள்ளோம். மனிதவுரிமைப் போராட்டங்களும், விடுதலைப்போராட்டங்களும் நடந்து கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் தமிழ்த் திரையுலகம் பெண்களின் உடலமைப்பைப் பற்றிய விவாதத்தில் ஈடுபடப்போகின்றனவா? அல்லது அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் நியாயப்படுத்தி மக்களை வரலாற்று குருட்டுணர்விற்கு இட்டுச் செல்லப் போகின்றனவா? அல்லது கலை இலக்கியங்கள் மக்களுக்காகவே என்ற அடிப்படையில் திரைப்படத் துறையைக் கைப்பற்றி மக்கள் இலக்கியம் படைக்கப் போகின்றோமோ? என்பதே வினா.

இறுதியாக ஏங்கெல்ஸ் கூறுவதைப் போல் "குற்றங்களுக்காக தனிமனிதனைத் தண்டிக்கக் கூடாது. குற்றங்களின் சமுகவிரோத பிறப்பிடங்கள் அழிக்கப்படவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய உயிராற்றலின் இன்றியமையாத வெளிப்பாட்டுக்குரிய சமூக வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். மனிதன் புறச்சூழலால் உருவாக்கப்படுகின்றான் என்றால் அந்தப் புறச்சூழல் மனித பண்புடையதாக்கப்படவேண்டும்." என்ற கருத்திற்கு இசைவாக தமிழ் திரையுலகை வெகுஜனங்கள் மாற்றியமைக்கக்கூடிய இலக்கை திரைப்படத்துறை உள்ளிட்ட இன்றும் காத்திரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

"பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய அடிப்படைப் பண்புகளில் இருந்து விலகாது கற்கும் கல்வியூடாக சமூக விழுமியங்களை மேம்படுத்த வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்தர்

செல்வி வத்சலாதேவி வாசு

கலைப்பீடம் முதலாம் வருடம்

தமிழ்மொழி வளர்ச்சிக்கு இலங்கைத் திருநாட்டைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். அத்தகைய தமிழ்ப்பணியாற்றிய அறிஞர்களில் கிழக்கிலங்கை தந்த தவப்புதல்வர் சுவாமி விபுலானந்தர் பெரிதும் போற்றிப் புகழப்பட வேண்டியவர். இலங்கை முதல் இமயம்வரை இன்றமிழில் இசை கண்ட தமிழ் முனிவர். முத்தமிழும் கற்று துறை தேர்ந்த தமிழ்ப்புலவர். ஊனையும்உயிரையும் உருக்கவல்ல பக்தித் தேனொழுகும் பாக்களையும் கற்பனை வளம்பொங்கும் கவிதைகளையும் வளமுற வடித்துத் தந்த வரகவி. மறைந்து கிடந்த தமிழிசையை மண்ணுலகிற்குக் கொடுத்து இன்புறல் காட்டிய இன்னிசைப் புலவர். உலகின் முதல்ப் பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றதோடு, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் அரும்பணியாற்றியவர்.

இந்த மனித முத்து இந்து சமுத்திரத்தின் எழில் முத்து என்று கூறப்படும் இலங்கைத் திருநாட்டின் கிழக்கு மாகாணத்தில் தென்திசையில் கல்முனைக்கு அருகில் காரைத்தீவு எனும் சிற்றூரில் 1882ம் ஆண்டு பங்குனி 27ம் திகதி சாமித்தம்பி, கண்ணமையார் தம்பதிகளுக்கு மயில்வாகனம் என்ற இயற்பெயர் கொண்ட மகனாகப் பிறந்தார். சின்னஞ்சிறு பிஞ்சு வயதில் கல்வி கற்பதில் ஆர்வமிக்கவராக இருந்த மயில்வாகனத்துக்கு உறுதுணையாக நின்றவர் அவரது அருமைத் தந்தையே. இவர் தனது ஏட்டுக்கல்வியை திரு. நல்லரத்தினம் என்பவரிடம் தொடங்கினார். அத்துடன் திரு. குஞ்சுத்தம்பி என்பாரிடமும் கல்வி பயின்றார். இவர் இட்ட கல்வி அத்திவாரமே 'முத்தமிழ் வித்தகர்' எனும் கட்டிடம் எழும்ப உறுதுணையாக அமைந்தது. மயில்வாகனம் தனது ஆசிரியர் மீது அளவற்ற அன்பும், பக்தியும், மதிப்பும் கொண்டிருந்தார். இதனால் தனது ஆசிரியரை செய்யுளாலேயே வாழ்த்தினார்.

"அம்புவியிற் செந்தமிழோ
டாங்கிலமும் எனக்குணர்த்தி அறிவுதிட்டி
வம்பு செறி வெண்கமல
வல்லியருள் எனக்கூட்டி வைத்த - குஞ்சுத்
தம்பியென்னும் பெயருடையோன்
தண்டமிழின் கரைகண்ட தகைமையோன்றன்
செம்பதும மலர்ப்பாதத்தை
சிரத்திருத்தி என்ஞான்றும் சிந்திப்பேனே"

என்று வாழ்த்துகிறார்.

மயில்வாகனார் திருக்குறள், பாரதம், நன்னூல், சூடாமணி, நிகண்டு, வடமொழி என்பவற்றை காரைதீவு சைவப்பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியராக இருந்த வைத்திலிங்க தேசிகரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றார். ஆங்கிலக் கல்வியிலும் ஈடுபாடு கொண்ட இவர். 1902ம் ஆண்டு தனது 10வது வயதில் கல்முனை மெதடிஸ்ட் கல்லூரியில் சேர்ந்து நான்கு ஆண்டுகள் பயின்று மேலும் கற்கும் பொருட்டு 1906ம் ஆண்டில் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரியில் சேர்ந்தார். இக்கல்லூரியில் அதிபராக இருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வண.பொனேல் என்பவரிடம் சிறப்பாகக் கணிதம் பயின்று அதில் தேர்ச்சி பெற்றார். மேலும் இக்கல்லூரியிலிருந்து 15வது வயதிலே கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் முதன்மையாகத் தேறினார். இவ்வாறு இவர் தமது திறமையை பலவகையிலும் வெளிப்படுத்தியபோது தாம் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

மேலும், இவர் தான் ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராக வேண்டும் என்ற ஆர்வத்தினால், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு ஆண்டுகாலம் பயிற்சி பெறுவதற்காக 1911ம் ஆண்டு கொழும்பு மாநகரத்திற்கு வந்தார். இவர் கொழும்பில் இருந்த காலங்களில் தனது பாடங்களோடு ஆங்கிலத்தையும், தமிழையும் நன்றாகக் கற்பதில் கவனஞ் செலுத்தினார். தமிழறிஞர்களான சி.தாமோதரம்பிள்ளை வித்துவான் கைலாயப்பிள்ளைஆகியோரிடம் சங்க இலக்கியங்களையும் முறையாகப் பாடங்கேட்டு தமிழ்ப்புலமையை விருத்தி செய்தார். இந்தக் காலத்தில் தான் கொழும்பு விவேகானந்தா சபையினருடன் தொடர்பு ஏற்பட்டு அதுவே ஆன்மீகத் துறையிலும் ஈடுபாடுகொள்ள ஆர்வமூட்டியது.

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் 1912ம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரி ஆசிரியராகப் பணிபுரிந்தார். மொழித்துறையிலும், இலக்கியத்துறையிலும் மட்டுமன்றி விஞ்ஞானத் துறையிலும் தனது திறமையை வெளிக்காட்ட பின்னிற்கவில்லை. 1915ம் ஆண்டு கொழும்பு அரசினர் பொறியியற் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916ம் ஆண்டு விஞ்ஞானத்தில் 'டிப்ளோமா' பட்டத்தையும் பெற்றார். அரசினர் பொறியியற் கல்லூரியிலேயே இரசாயன உதவி விரிவுரை-யாளராகப் பணியாற்றினார். இவர் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் புதுப்புது பரிசோதனைகளை மேற்கொண்டு எளிய நடையில் அனைவருக்கும் விளங்கக்கூடிய வகையில் விரிவுரைகளை நடத்தினார். இவற்றோடு மட்டும் நின்றுவிடாது தமிழ்மீதும் தீராத காதல் கொண்டு மதுரை தமிழ்ச்சங்கம் நடத்திய தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று பண்டிதர் என்ற பட்டத்தையும் பெற்றார். இவர் 1917ம் ஆண்டில் மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி சர்வானந்தர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இருந்தபோது, அவரிடம் மனம்விட்டுக் கதைத்த வேளையில் தானும் உலக வாழ்வினைத் துறந்து, துறவறத்தை நாடவேண்டும் என்று எண்ணினார். எனினும் தனது மாணாக்கர்களின் நலன் கருதி சிறிது காலம் தொடர்ந்து ஆசிரியப் பணியாற்றினார். அத்துடன் பிறர் உதவியின்றி தாமாகவே முயன்று கற்று இலண்டன் பல்கலைக்கழக பி. எஸ். சி தேர்விலும் வெற்றி பெற்றார். இவரது திறமை காரணமாக 1920ம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி இவரை. நாடி வந்தது. அங்கும் சிறப்பான விஞ்ஞான கூடத்தை நிறுவி விரிவுரைகளை திறம்பட நடத்தினார்.

இலங்கையில் தமிழ்மொழியைப் போற்றி வளர்க்க ஓர் அமைப்பு இல்லாததைக் கண்டு தமிழ் வளர்ச்சிக்காகப் பல அறிஞர்களையும் கலந்து ஆலோசித்து தனது அயராத முயற்சியின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக "யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்" என்ற கழகத்தை அமைத்தார். இதன் மூலம் பிரவேசப் பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் எனும் மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். இவரது இந்த முயற்சி பல பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

1922ம் ஆண்டு மயில்வாகனனாரின் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. நெடுங்காலமாக துறவு வாழ்வில் இருந்த ஆர்வம் அதிகமாகி, தனது அதிபர் பதவியைத் துறந்தார். பின் சென்னை மயிலாப்பூரில் இருந்த இராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்து சுவாமி சிவானந்தரிடம் "பிரபோத சைதன்யா" என்ற தீட்சா நாமத்தைப் பெற்றார். இவர் இராமகிருஷ்ண மிஷனில் இருந்த காலத்தில், அச்சங்கம் நடத்திய 'இராமகிருஷ்ண விஜயம்' என்ற தமிழ் சஞ்சிகைக்கும் 'வேதாந்த கேசரி' எனும் ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல ஆரிய கட்டுரைகளை எழுதினார். அத்தோடு மதுரை தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையின் பரீட்சார்த்தகராகவும் நியமிக்கப்பட்டார்.

இவர் துறவியாகத் தம்மை ஆயத்தஞ் செய்த காலத்தில் சித்தாந்த நூல்களுடன் காவியங்களையும், ஆங்கில இலக்கிய நூல்களையும் கற்றார். அவற்றில் தாம் படித்துச் சுவைத்தவற்றை 'ஆங்கிலவாணி', 'பூஞ்சோலைக் காவலன்' என்ற இரு இலக்கியப்படைப்பாக வழங்கினார். துறவறத்துக்குரிய கடமைகளை ஒழுங்காகப் பூர்த்தி செய்து இருந்த 'பிரபோத சைதன்யருக்கு' 1924ம் ஆண்டு சித்திரைப் பௌர்ணமி அன்று சுவாமி சிவானந்தரால் "சுவாமி விபுலானந்தர்" என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. சுவாமி விபுலானந்தர், தமிழ் மொழியில் நாடகக் கலை செழித்து வளர வேண்டுமென்று கனவு கண்டார். அதனை நனவாக்கும் நோக்குடன் 1924ம் ஆண்டு மதுரை தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் கலந்து கொண்டு 'நாடகத் தமிழ்' எனும் அற்புதமான உரையினை நிகழ்த்தினார். இதனை ஓர் நூலாக எழுதித் தரும்படி டி. சி. சீனிவாச ஐயங்கர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 'மதங்கசூளாமணி' எனும் நூலை சுவாமிஜி அவர்கள் எழுதினார்கள். 1925ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் தமிழ்நாட்டிலிருந்து தாயகம் திரும்பினார். இங்கு வந்த சுவாமிகளுக்கு இலங்கையிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளைப் பராமரிக்கும் முகாமையாளர் பொறுப்பைக் கொடுத்தனர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு இணங்க சுவாமிகள் மக்கள் பணியே மகேசன் பணி எனக் கருதி சமூகத்தொண்டுகளிலும் ஈடுபட்டார். இவர் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபட்டார். குறிப்பாக கல்வியின் மூலமே சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். சுவாமி விபுலானந்தர் கல்விக் கூடங்கள் இல்லாத கிராமங்களில் எல்லாம் மிஷனின் உதவியுடன் பாடசாலைகளை நிறுவினார்.

இன்றைய மாணவர்கள் நாளைய சமூகத்தின் வழிகாட்டிகள் என்பதை உணர்ந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி, தேசப்பற்று சமயப்பற்று, மொழிப்பற்று என்பவற்றை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த மகாகவி பாரதியாரின் சுதந்திர உணர்வூட்டும் பாடல்களையும், சுவாமி விவேகானந்தரின் வீர உரைகளையும் அடிக்கடி மாணவர்களுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவார். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்பதை அடிப்படையாகக் கொண்ட மகாத்மா காந்தி அடிகளின் ஆதாரக் கல்வி முறையை பரீட்சித்துப் பார்த்த பெருமை விபுலானந்தரையே சாரும்.

சுவாமி அவர்களின் அரும் பெரும் முயற்சியாலேயே காரைதீவு மூதூரில் உள்ள 'சாரதா வித்தியாலயமும்' மட்டகளப்பிலுள்ள 'சிவானந்தா வித்தியாலயமும்' உருவாகின. இவற்றோடு இலங்கையின் தலைநகரமான கொழும்பில் விவேகானந்தா சபை இயங்கிவந்தாலும், தலைநகரில் தமிழ்ப்பள்ளிக்கூடம் இல்லாதது பெரும் குறையாகவே இருந்தது. இக்குறையை நீக்கி, இவரது ஆலோசனையின் பேரில் புதிதாக 'விவேகானந்தா வித்தியாலயம்' தொடங்கப் பட்டது. கல்வித்துறையில் அனைவரும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்க வேண்டிய அவசியத்தை முதன் முதலாக உணர வைத்தது மட்டுமன்றி அதனை சிவானந்தா வித்தியாலயத்தில் செயற்படுத்திய பெருமை சுவாமிகளுக்கே உரியதாகும். சுவாமி விபுலானந்தர் இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் பெரிதும் அக்கறை காட்டினார். அந்த வகையில் சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக உறுதுணையாக நின்றவர் எம் சுவாமிகளே. இதனால் இவரையே பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியராக பொறுப்பேற்கும்படி கேட்டுக்கொண்டதற்கு இணங்க 1931ம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியர் என்ற அதுவும் தமிழ்நாட்டின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமை நம் நாட்டைச் சேர்ந்த சுவாமிகளையே சாரும். சுவாமி அவர்கள் பேராசிரியராகப் பதவி ஏற்றுக்கொண்ட பின்பு தமிழ் மொழிக்கு புதிய சகாப்தம் ஏற்பட்டது எனலாம். ஏனெனில் இதன் பின்னர்தான விமர்சன நூல்கள், இலக்கிய வரலாற்று நூல்கள், மொழி ஆராய்ச்சி நூல்கள் என்பன வெளிவரத் தொடங்கின.

தமிழ் மொழியில் கலைச்சொற்கள் பிறப்பதற்கு வித்திட்ட பெருமையும் இவரையே சாரும். விஞ்ஞானக் கலையை தமிழ் மொழியில் தமிழர்களுக்கு அளிப்பதற்கு விஞ்ஞான சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை தெரிவு செய்து ஒரு நூலை உருவாக்குவதற்கு 'சொல்லாக்கக் கழகம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் முயற்சியாலும், சுவாமிகளின் அரிய விரிவுரைகளாலுமே 'கலைச்சொற்கள்' என்ற அகராதி வெளிவந்தது. மகாகவி பாரதியாரின் கவிதைகளில் சுவாமி அவர்களுக்கு அதிக ஈடுபாடு உண்டு. கற்றறிந்தோருக்கு ஏற்றது கலித்தொகை மட்டுமல்ல. பாரதியாரின் கண்ணன் பாட்டும்தான் என்று துணிந்து உரைத்தார்.

1937ம் ஆண்டில் இமய மலைச் சாரலில் இராமகிருஷ்ணமிஷன் நடத்தும் "பிரபுத்த பாரதா" எனும் ஆங்கிலத் திங்கள் இதழின் ஆசிரியப் பணியை ஏற்று அதனைச் சிறப்பாக நடத்தினார். தமிழ் மொழியின் சிறப்புப் பற்றியும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வு பற்றியும் பல கட்டுரைகள் எழுதினார். இமய மலையின் இயற்கை எழில் கொஞ்சும் அமைதியான சூழலில் "யாழ் நூல்" பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். யாழ் நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் பதவியை ஏற்கும்படி பலரின் வேண்டுகோளின் நிமித்தம் 1943ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ப்பீடத்தை அலங்கரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்தர் பேராசிரியர் பதவியுடன் கல்விப்பகுதி பாடநூற்சபை, தேர்வுச் சபை, கல்வி ஆராய்ச்சிச் சபை ஆகியவற்றிலும் கௌரவ உறுப்பினராகத் திகழ்ந்தார். இலங்கை அரசாங்கம் பாடசாலைக் கல்விக்காக ஒரு திட்டத்தை வகுத்தபோது, சுவாமி அவர்கள் சங்கீதப் பாடத்திற்கான ஒரு திட்டத்தை ஒவ்வொரு வகுப்பிற்கும் வகுத்துக் கொடுத்தார். பாடசாலைகளில் சைவசமயம் படிப்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டபோது சமயத்திற்காக ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார். இவ்வாறு கல்வி வளர்ச்சிக்காக தன் உடல் நலனையும் பாராது அயராது உழைத்தார். சுவாமி அவர்களின் தமிழ்த் தொண்டால் தலைசிறந்து விளங்குவது அவருடைய 'யாழ்நூல்' ஆராய்ச்சியாகும். அவர் பதினைந்து ஆண்டுகள் ஆராய்ந்து கண்டுணர்ந்த யாழ்நூலினைக் கரந்தைத் தமிழ்ச்சங்க ஆதரவுடன் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில், நாளும், செந்தமிழ் இசை பரப்பிய ஞானசம்பந்தனின் சந்நிதானத்தில், இசை விற்பன்னர்கள் வியக்க, கற்றோரும், மற்றோரும் பாராட்ட தேவாரப் பண்களைத் தாமே அமைத்து 1947ம் ஆண்டு ஆனித் திங்களன்று அரங்கேற்றினார்.

இவ்வாறு தம் உடல் நிலையையும் பொருட்படுத்தாது அரிய யாழ்நூலை எமக்குத் தந்த அடிகளார் யாழ்நூலின் அரங்கேற்றத்துக்குப் பின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பில் மருத்துவ சிகிச்சை பெற்றார். எனினும், எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு 1947ம் ஆண்டு ஆடித்திங்கள் 19ம் நாள் சனிக்கிழமை இரவு மீளாத்துயிலில் ஆழ்ந்து சுவாமி விபுலானந்தர் அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டார்கள். இவரது பூதவுடல் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷனில் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் அவரது பிறந்த பூமியாம் மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. சுவாமி அவர்களை அடக்கம் செய்யப்பட்ட கல்லறை மேல் சமாதி ஒன்று எழுப்பப்பட்டது. அதில் சுவாமி அவர்கள் யாத்த,

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்ந்த மலர் எதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலரு மல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது

என்ற உயிர்த் துடிப்புமிக்க கவிதா வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. சுவாமி அவர்கள் இம்மண்ணில் பிறந்து ஒரு நூற்றாண்டை நிறைவு செய்திருந்தாலும், அவரது கல்விப்பணியும், விட்டுச் சென்ற எழுத்துச் செல்வங்களும் அவரை எமக்கு ஞாபகமூட்டிக்கொண்டே இருக்கும். பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நடாத்தப்படும் போட்டிகளில் இவருக்கும் தனியிடம் வழங்கப்பட்டிருப்பது நாம் அவரை மறக்கவில்லை என்பதையே உணர்த்துகின்றது. எனவே இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் இருக்கும்வரை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் திருநாமமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் அற்ற நாட்டில்......

க. மயூரன்

2ம் வருடம் முகாமைத்துவ நிதிப்பீடம்

கண்ணே என் கற்பகமே
பொன்னே என் பேரமுதே
காந்தக் கண்ணழகே
கண்ணூறு படவைக்கும் கறுப்பழகே
பாராள வேண்டிய நீ
பாவி வயிற்றில் பிறந்தது ஏனோ?

பாவி நான் என்றேன் - நீ
பாவம் ஏது செய்தாய் என்பாய்
சமாதானம் அற்ற நாட்டில்
சஞ்சரித்தது முதல் பாவம்
புறமுதுகு காட்டாத தமிழினமாய்
பிறந்து பெரும் பாவம்
என் வயிற்றில் உதித்ததனால்
என் கண்ணே நீ பாவம்.

தமிழனாய் பிறந்ததனால்
தலை நிமிர முடியவில்லை
தன் வாயால் தான்கூட
தகவல் தர முடியவில்லை
தன் ஊரை வாய் திறந்து
சொல்லவும் முடியுதில்ல
தன் வீட்டில் மகிழ்வுடனே
தங்கவும் முடியுதில்ல
இவ்வளவும் இருக்கையில
இங்கு வந்து ஏன் பிறந்தாய்?

அழகுசாதன நிறையுகத்தில்
அழகுமிகு தமிழச்சியாய் இருந்து விட்டால்
கற்புக்காக
அழகிழந்து கரி பூசி
அலைகின்ற காலத்தில்
அழகுப் பெண்ணாக நீ வந்து
அவதரித்தது ஏன் மகளே?
சொந்த இடத்தில் இருப்பவரோ
சொற்பம்
அலைந்து திரிபவரோ
அதிகம்
அகதி என்றால்
அகராதியில் கூட
ஈழத்தமிழன் என
அச்சேற்றக் கூடிய
அந்நிலையில்
அன்பே! நீ ஏன் பிறந்தாய்!
நெற்றியில் திலகமிட்டு
நேர்த்தியாக சேலைகட்டி
கண்டதும் கைகூப்பத் தோன்றும்
குல மங்கையர் கொண்ட - நம்
கலாச்சாரம் கூட
அரைகுறை ஆடைகள் நோக்கி
அவசரமாய் செல்லுகையில்
ஏன்டியம்மா வந்துதித்தாய்?

உன் தாத்தாவுக்கு பிள்ளை பத்து
ஊரிலோ எவரும் இல்லை
இறையடி சேர்ந்தாலும்
இங்கிருந்து அங்கு செல்ல
ஆணமார்க்கம்
ஏது மற்ற நாடுகளில்
ஏன் பிறந்தாய் மகளே?
தமிழனாய் இருந்து விட்டால்
அடையாள அட்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவற் பதிவும்
கர்ணனின்
கவச குண்டலம் போல்
கட்டாயம் உடன் வேண்டும்
இந்நாட்டில்
கண்ணே நீ ஏன் பிறந்தாய்
சமாதானத்தின் தேவதைகள் நாமென
சனத்திரளில் கத்துவார்கள்
சமாதானப் புறாவுடன் நிற்கும்படம்
சந்தி சந்தியாக ஒட்டுவார்கள்
தமிழரின் வாக்குகளை
தம் பக்கம் கறப்பார்கள்
ஆட்சிக்கு வந்தவுடன்
சமாதானப் புறாவதை
பசிக்குக் கறி ஆக்கும்
இந்நாட்டில்
முத்தே நீ விளைந்தது ஏனோ?

சண்டைகள் அற்ற நாட்டில்
சமாதானம் உள்ள நாட்டில்
இவை நடக்க
சந்தர்ப்பம் ஏதுமில்லை
சமாதானம் அற்ற நாட்டில்
பிரமன் உனைப் படைத்த தானோ?

(மகள் தாய்க்குச் சமாதானம் கூறுவதான
கற்பனை)
தாயே உன் கவலை
தவறாகத் தெரிகிறது

தமிழன் என்று சொல் அம்மா
தலை நிமிர்ந்து நில் அம்மா
அதிலும்
தமிழச்சியாய் பிறப்பதற்கு
தவம் புரிய வேண்டும் அம்மா
தரணி எங்கும் போற்றும் பெண்கள்
அடிமை விலங்கை உடைத்தவர்கள்
ஆணுக்குப் பெண் சமம் என
ஆடுகளத்தில் நின்று
அகிலம் உணரச் செய்தவர்கள்
தமிழ்ப் பெண்கள் தானன்றோ?

நீ சொன்ன அவலங்கள்
நிதர்சனமானவை தான்
ஆனால்
உழைக்காமல் இருந்து கொண்டு
உணவுண்ண முடியுமோ?
முயற்சி ஏதுமின்றி
முன்னேற முடியுமோ?
நாம் எல்லாம்
அலட்சியமாய் இருந்து விட்டால்
அவலங்கள் அகன்றிடுமோ
அவலமும் ஆனந்தமும்
நம் கையில் தான் தாயே
இனியும்
அழுகுரல்கள் வேண்டாம்
ஆனந்தம் அமைந்திட
ஆனவழி கூறுதாயே.

"பிறப்பில் அன்னை எம் வளர்ப்பில் தமிழ்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரும் மருத்துவ அறிவும்

கிருஷ்ணா கலைச்செல்வன்
மருத்துவபீடம்

பழம்பெருமை கொண்ட பல சிறப்புக்களைக் கொண்ட தமிழர்கள் உலகில் பல அரிய கலைகளையும் சிறப்பான ஒழுக்கத்தையும் உடையவர்கள் என்பதனையும் உலகளாவிய ஆய்வுகளை நடத்திய அறிஞர்கள் தமது ஆய்வுகளின் மூலம் கண்டறிந்துள்ளார்கள். தமிழர்களின் வாழ்வில் மருத்துவ விஞ்ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பதனை நாம் இன்று அறியக்கூடியதாக உள்ளது.

"நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

திருக்குறள் மருந்து அதிகாரக்குறளின் மூலம் மருத்துவனானவன் நோயை அதன் இன்னது என்று துணிந்து பின் அது வருவதற்கான காரணத்தை ஆராய்ந்து தெளிந்து பின் அது தீர்க்கும் உபாயத்தினை அறிந்து அதனை பிழையறச் செய்க எனக்கூறிய கருத்து, இன்றைய மருத்துவ உலகிற்கு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளிற்கு முன் திருவள்ளுவரினால் தரப்பட்ட ஓர் அரிய கருத்தாகும்.

"சோதிடம், பஞ்சபட்சி துலங்கிய
சரநூல் மார்க்கம்
கோதறு விகார வித்தை
குருமுனி ஓது பாடல்
தீதிலாக் கக்கிடங்கள்
செப்பிய கன்ம காண்டம்
ஈதெலாம் கற்றுணர்ந்தோர்
இவர்களே வைத்தியராவர்"

(சித்தர் நாடி நூல் 18)

'பாண்டிதனியலுள பண்டித கனமே' என்று தேரையர் மகாகரிசலிலும் கூறியுள்ளார். ஆகவே சித்தமருத்துவத்தில் சிறந்து விளங்கும் மெய்ஞானம், விஞ்ஞானம், உடல்தத்துவம், சமயம், சோதிடம், பஞ்சபட்சி, சரம், மருந்து, மருத்துவம், பரிகாரம் போன்றவைகளை ஐயந்திரிபறக் கற்றுணர வேண்டும். சங்க இலக்கியங்களில் மருத்துவத்திற்கான பொருட்கள் தெளிவாக உள்ளதைச் சான்றுகளுடன் கூறலாம்.

"திருந்திய யாக்கையுள் மருத்துவன்
ஊட்டிய
மருந்துபோல், மருந்தாகி, மனன்
உவப்பப்
பெரும் பெயர் மீளி ...."
(கலித்தொகை - 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் வருவதும் இயற்கை அப்போது மருந்துண்பதும் இயல்பு. ஆனால் உடல் நல்ல உடலாக இருந்தால் தான் மருந்து விரைவில் உடலில் கலந்து நோய்தீர்க்கும். உடல் மிகக் கெட்ட நிலையிலே நோய் வருமானால் மருந்து ஏதும் பலன் தருவதில்லை என்று கூறப்படுகின்றது.

பண்டைய இலக்கியங்களில் அறுவை மருத்துவம் (Surgery), உடற்கூற்றியல் (Anatomy) பற்றிய கருத்துக்கள், அன்றைய தமிழர்கள் இத்துறைகளில் சிறந்த அறிவினை பெற்றிருந்தார்கள் என்பதனை தெளிவாகக் காட்டுகின்றன.

"மீன்றேர் தொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல் பெயர்ந் தன்ன நெடு வெள்ளூசி
நெடுவசி பரந்த வடு" (பதிற்றுப்பத்து)

பதிற்றுப்பத்து என்ற நூலில் வரும் அடிகள் தையலைப் பற்றிய குறிப்புகளைத் தம்முள் அடக்கியுள்ளன. தையலிடும்போது ஊசி சதையுள் புகுந்து பின் வெளிவரும் காட்சி மீன்கொத்திப் புள் நீருள் வாழும் மீனைக் கொத்தி எழும்போது அதன் அலகு எவ்வாறு நீருள் சென்று மீளுமோ அவ்வாறு காணும் எனக் கூறப்பட்டுள்ளது.

"குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும் -
இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம்" (நாலடியார்)

சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றை குடல் குறிக்கும். கொழுவானது மேலே களத்துடனும் (இரைக்குழல்) கீழே சிறுகுடலின் முற்பங்கோடும் தொடுக்கப்பட்டதாய் சற்று அகன்று காணும். இது உழவு ஏரின் கொழு போன்றிருப்பதனால், இதை கொழு என்றழைத்தனர்.

"தோற்போர்வை மேலும் துளைபலவாய்
பொய்ம் மறைக்கும்
மீப் போர்வை மாட்சித்து உடம்பானால்" (நாலடியார்)

யாக்கையின் மேற்போர்வை தோல், உடற்கூறுகளனைத்தும் தோலால் பொதியப்பட்டு அநேக விலங்குகளுக்கும் மனிதனுக்கும் உடலாகின்றது. இவை தவிர, மிகநுண்ணிய துளைகளான வியர்வைத் துவாரங்களும் தோலில் நிறைந்து காணப்படும்.

பல்லென்பு, பழுவென்பு, கமிழ்தார் இடுதலை உதிர்ந்த தாடை என்பு போன்றவைகளை நாலடியார் பாக்களில் காணலாம்.

வாழ்வியல் ஒழுக்கத்தை வரையறுத்த பழந்தமிழ்ச் சான்றோர் இன்பமும் பொருளும் அறனும் என்றுதான் வகுத்தனர். இன்பத்தை முதலாகவும், எல்லா ஒழுக்கங்களுக்கும் மூலசக்தியாகவும் அவர்கள் காட்டிச் சென்றனர். வாழ்வது போதாது வாழ்வியலின் நுணுக்கங்களை அறிந்து அனுபவித்து இனிமை காணவும் வேண்டும் என்ற ஒப்பற்ற நெறியைக் கண்டவர்கள் நம் முன்னோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாத வளமும், குன்றாத வீரமும், பண்பட்ட உள்ளமும் கலந்து மகிழ, பிணிதீர்க்கும் நெஞ்சமும் காயத்தைக் கற்பமாக்கும் மனப்பாங்கும் தமிழினத்தின் வழிவழி வரும் வாழ்வியற் பெருநியதிகளே. இந்நியதிகளே, அந்நாளில் எழுந்த இலக்கியங்களின் மூலக்கருவாக அமைந்தன. புனைந்துரையும் போலித்தத்துவமும், கட்டுக்கடங்காத கருத்தற்ற கற்பனையும் அவைகளில் சேரவில்லை. உள்ளத்தை உள்ளவாறே ஆனால் உயரிய பாணியில் சொல்லோவியங்களாக்கித் தரும் ஒப்பற்ற மொழிப்புலமையின் ஊற்றுக்களங்களாக இலக்கியங்கள் விளங்கின. நவகோடி சித்தர்கள் இன்பத்தின் செவ்வியை அறிந்து அவர்கள் எழுதிய இணையற்ற மருத்துவ நூல்களே சித்த மருத்துவமாகும்.

பண்டைநாட்களில் அறிஞர்களாகிய சித்தர்கள் இறத்தலை ஒழித்துக் காயத்தை கற்பமாக்கிக் கொண்டார்கள். கீழ்நிலை உலோகங்களான இரும்பு, செம்பு போன்றவற்றை பொன்னாக்கும் வழியையும் அறிந்து வைத்திருந்தனர். அதுபோல் சுரசம், சாறு, குடிநீர் போன்றவற்றை நெடுநாட்கள் வரை சுயகுணம் மாறாமல் இருக்கும்படியான உபாயத்தை அறிந்திருந்தனர். சித்தமருத்துவ இயல் தமிழ் மண்ணிற்கேற்பவும், இங்குள்ள தட்ப வெப்பநிலைக்கு ஏற்பவும் பல்வேறுபட்ட இயற்கைப் பொருட்களைக் கொண்டு பிணிகளை நீக்குவதற்கென்று உருவாக்கப்பட்டுள்ளதாகும். எல்லோருக்கும் இலகுவில் கிடைக்கக்கூடிய மருத்துவ முறையாகும். உஷ்ணத்தினால் மேகவேட்கையால், உணவின்மையால், மனக்கவலையால் ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு சித்தமருத்துவம் பரிகாரம் காணுகின்றது. இயற்கையில் கிடைக்கும் புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலியவைகளைக் கொண்டும், நவரத்தின நவலோகங்களைக் கொண்டும், இரசம், கந்தகம், காந்தம், கற்பூரம், தாரம், அயம், கிட்டம், பவளம், அன்னபேதி, துருசு முதலியவைக் கொண்டும் திரிகடுகு, திரிசாதி, திரிபலை, அரிசிவகை, ஆறு போன்ற பல மருந்து வகைகளைக் கொண்டும், பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளிர்தைலங்கள் ஆகியவற்றைக் கொண்டும், நல்ல தண்ணீர், கடல்நீர், காடித்தண்ணீர், கடுகுத்தண்ணீர், கதம்பைச் சாறு முதலிய பல நீர்வகைகளைக் கொண்டும் பால், தேன், சீனி, நெய் முதலியவைகளைக் கொண்டும், தெங்கு, புங்கு, புன்னை, வேம்பு, எள் முதலிய பல தாவரஎண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒப்பற்ற மருத்துவமுறையாகும்.

சித்தர்கள் வியாதிகளின் மூலகாரணங்களில் கவனம் செலுத்தி அவைகளைப் பலபகுதிகளாகப் பிரித்து அவைகளுக்குரிய பரிகாரத்தையும் தெளிவாகக் கூறியிருக்கின்றனர். அவைகளில் வர்ம பரிகாரம் என்பதும் ஒன்றாகும்.

வர்ம பரிகாரம் என்றால் என்பதற்கு 'முறிவு சாரி' என்ற நூல் இவ்வாறு விடையளிக்கின்றது. நரம்புகளில் தட்டுதலுற்றால் உணர்விழப்பது வர்மம் ஆகும். ஆனால் எல்லா நரம்புகளிலும் தட்டுப்பட்டால் வர்மம் கொள்ளுவதில்லை. குறிப்பிட்ட நரம்பின் எல்லாஇடங்களிலும் தட்டுப்பட்டாலும் வர்மங் கொள்வதில்லை. தட்டுதல் எப்படிப்பட்டதாக இருந்தாலும் வர்மங் கொள்வதில்லை. சுருக்கமாகச் சொன்னால் குறிப்பிட்ட சில நரம்புகளில், குறிப்பிட்ட சில இடங்களில், குறிப்பிட்ட அளவில் தட்டுப்பட்டால் தான் ஒருவர் உணர்விழப்பார். அவருக்கு வர்மம் அல்லது காயம் கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் இயற்றிய தமிழ் மூவாயிரம் தவிர எண்ணாயிரம் என்ற மற்றொரு நூலின் பெயரையும் கேள்விப்படுகிறோம். தமிழ் மருத்துவத்துறையில் ஆதிநூல் இது. இன்னும் வெளியிடப்படாத நூல், விலை மதிப்பற்ற திருமூலர் எண்ணாயிரம் முழுவதுமாக நமக்குக் கிடைக்கவில்லை. திருமூலர் கருக்கிடையில் இரசக்குளிகை பற்றிக் கூறும் ஓர் இடத்தில்,

"தேடித் திரிந்து திகையாதே மாந்தரே
பாடினே(ன்) எண்ணாயிரத் தினிற் பார்த்திட்டே"

என்று கூறப்பட்டுள்ளது.

இரசக் குளிகையின் பெருமையை நான் இயற்றிய 'எண்ணாயிரம்' என்னும் நூலில் பார்த்துக் கொள்க என்று திருமூலர் தெரிவிக்கின்றார்.

இதுகாறும் கூறியவற்றால், தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் மருத்துவ விஞ்ஞானம் சம்பந்தமான பல்வேறுபட்ட குறிப்புகளும் ஆங்காங்கே குவிந்து கிடப்பதைக் கண்டோம். நமது முனனோரா வட்டுசெனற இநதச செலவததைப பெட்டகததில பூட்டிவைததுச செலலாககவிடாமல் காப்பது நமது கடன். தமிழ் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் என்று தமிழ் வைத்தியம் தனியிடத்தை அடையும் என்றும் நம்புவோமாக.

நன்றி : உலகத்தமிழ் மாநாடு விழா மலர் (1968)

"தமிழை நாம் வளர்க்கிறோம் என்பதை விட தமிழில் நாம் வளர்கிறோம் என்பதே சரியானது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானல் தாகங்கள்

க. சந்திரகலா
2ம் வருடம் முகாமைத்துவ பீடம்

ஆயுத அகப்பை கொண்டு
அடுப்படியே அவைக்களமாய் ....
ஆபீசுக் கோப்புக்களும்
ஆபீசர் ஏச்சுக் களும்
அட்டவணை நியமங்களாய்.......
சொன்னதெல்லாம் செல்வாக்கு
சேர்வதெல்லாம் பொதுக் கூட்டம்........
அரசியல் தலைவி!
பெண்ணென்றால் பெருந்துயரம்
என்றாகிப் போன - இந்த
வஞ்சகச் சமூகத்தில்
அகப்பைகளோ கோப்புகளோ
அரசியல் யாப்புகளோ ஒன்றும்
பாவைகளுக்கிங்கு பாதுகாப்பு
தரவில்லை!

* * *

போதும். மரபுக்கவிதையாய் உன்
கட்டுப்பாடு!
புதுக்கவிதையாய் புறப்பட்டு வா!
மௌனப் போராட்டம் போதும்
சங்க நாதம் செய்து சீறி எழு!
போராட்ட மத்தியில் உன்
மென்மை தொலைந்து வெகுகாலம்.
இன்றைக்கு உன்னை இயைபாக்கிக்
கொள்ள
இதுதான் உனக்கு சரியான நேரம்!
தவறின் பெண்ணே - உன்
தக்கன பிழைத்தல் - சிம்ம
சொப்பனம் தான் நாளும்.

உன் வாழ்க்கை முறையை - மீள்
பரிசீலனை செய்!
சற்றென் பின்னே வா.
இந்த அவலங்களின் அவஸ்தைக்கு
மீட்சி உண்டா தேடுவோம்!

* * *

கட்டுப்படுத்தும் வரையறைகள்!
சிலரால் தம் வசதிக்காய் வகுக்கப்
பட்டவையே.
வர்ணனைகளைப்போல் இவையொன்றும்
ஆண்டவனால் அருளப்படவில்லை.
"ஆணுக்குப் பெண் கட்டுப்பட்டவள் ...."
'திருவிளையாடலில்' நடிகர் திலகத்தின்
பொறி பறக்கும் கர்ச்சனை!
தேடிப் பார் - அங்கே
திரைக்கதை வசனம் ஓர் ஆணாயிருப்பான்

* * *

சமூகப் பொறுப்புக்கள் தாங்கும் - நீ
நிரந்தரச் சுமை தாங்கியாய்..........
அடுத்தவர்க்கும் பகிர்ந்தளி!
பாவம் புரியாமல் தடுமாறுகிறார்கள்
தடம் மாறி ....
வாழ்க்கைப் பந்தயத்தில்
சுமைகளின் சுமைகளோடு
நீ சோர்ந்து போய் தோற்றுக்
கொண்டிருக்கின்றாய்.
'பொதிகள்' என்றும் பக்கச் சார்பானவை
தான்
பரவாயில்லை பிரித்துக் கொடு.
சுமைகளின் வலியை என் சுகத்தையும்
கொஞ்சம் உணர்ந்து கொள்ளட்டுமே!

* * *

நீ உன்னைச் செதுக்கும்
சிற்பியாயிரு
மற்றவரால் செதுக்கப்படும்
சிலையாகாதே!
சிதைந்து போவாய்.....
இல்லை சிதைக்கப்பட்டு
சிதிலமாய் விடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயச் சிற்பியே நீ பாதையாக
வேண்டியவள்
பாதுகைகளாய் அல்ல.
இலக்குக்கு வழிகாட்ட வேண்டியவள் நீ
இலக்கே இன்றி அடுத்தவரிட்ட
எல்லைகளைப்
பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கின்றாய்.
அந்தக் காலனுக்கே ஓலையனுப்பக்
கூடியவள், ஜன்னல் கம்பிகளுக்குள்
முகம் தொலைத்து மூலையில்
முடங்கிக் கிடக்கின்றாய்!
வெளியே வா. சுதந்திரக் குளிர்காற்று
உன்னை சூடாய் தழுவட்டும்.

* * *

சீதனம் மாமியார் காமுகன்
வடிவில் ஆபத்துக்கள் உன்
அருகிலேயே! இவைக்கான - இந்த
தீர்வுகளோடு நீ
உடன்பாடா பார்.
புலிப்பல் எடுத்து பரிசம் போட்டனராம்
மறவர் அன்று!
புலிப்பல் வேண்டாம். இன்று
ஓர் எலிப்பல் தரச் சொல்
ஒன்றுக்கு ஏழென்று லட்சங்கள்
தருகின்றோம்.

* * *

காமுகன்!
பெண் குழந்தை பிறந்தாலே
பாதுகாப்பு வலயம் போட்டு
பெற்றோரின் பரிதவிப்பு!
உன்னைப் பேணிக் கொள்ள
பெண்ணே உன்னால் மட்டுமே
இயலும்.
விரல்களின் கிரீடமாய் விளங்கவல்ல
நகங்கள்
சமயத்தில் அவை புலியின் பலம்
பெற வேண்டும்.
முல்லைப் பற்கள் தான்.
தேவையெனின் முள்ளை
ஒக்கும் உரம் பெறும்.
உணர்த்து.
அடிக்கடி பத்திரிகை பார்
இதற்கான தீர்வு ஆயிரம்
உண்டுனக்கு அயல்நாட்டுப்
பெண்மூலம் ....!
அகிம்சைக்கில்லை பெண்ணே
இப்போதெல்லாம் அதிரடிக்குத்தான்
தலை வணக்கம்.

* * *

காளையோடு கலப்பையையும்
பசுவோடு பாலினையும்
தொடர்பு படுத்தச் சொல்லிக் கொடு!
காளையிடம் பாலும்
கறவையிடம் கலப்பையும்
கற்பனையில் கூட கசக்கவே செய்யும்

* * *

அன்பிற்கு அடிமையாகு
தப்பில்லை.
ஆணவ ஆக்கிரமிப்பு
உன்னை அண்டாமல் பார்த்துக் கொள்.
கவனம் ....!
அன்பின் போர்வையில் அதிகார வலை
வரலாம்.
கபடத்தைக் கண்டறியக் கற்றுக் கொள்!
உன்னை உணர்!
பின்
உணர்த்து!
நில்!
குட்டைச் சட்டையும்
வெட்டுப் பேச்சும் தான்
நீ விரும்பு சுதந்திரத்தின் படிகள்
எனின்,
வேண்டாம் அந்த பாழாப்போன
சுதந்திரம் நமக்கு!

* * *

ஒழுக்கம்!
உன்னால் ஓம்பப்பட வேண்டும். - இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் சொல்லி வருவதல்ல.
உனக்குள் ஒரு சத்ய ஜோதியாய்
சுடர் விட்டு தகிக்கும்,
பேச்சில் பார்வையில் நடத்தையில்
வெளிப்படும் - அது
மற்றவர்க்கு உணர்த்தும் உன்னை!
இல்லையென்றால்
ஓரங்கட்டு. ஒழுக்கத்தையல்ல
உன்னை விமர்சிப்பவரை!
மற்றவர்க்கல்ல நீ நல்லவளாய்
திகழ வேண்டும். உன் மனசாட்சிக்கு!
அடுத்தவர்க்காகவெனின் அது நடிப்பு.
வேஷம் கலைந்தே
பலவீனமான ஒரு சந்தர்ப்பத்தில்
உன் அரிதாரம் கரைந்தே போகும்.

* * *

எல்லைகள் தானுன் கவசம்
கழற்றிவிட எண்ணாதே கர்ணனாவாய்.
இல்லை.
இலக்குவன் கோடு தாண்டிய
சீதையாவாய்.
எல்லைகளுக்குள் எச்சரிக்கைகள்!
தளைகள்!! வேண்டாம் வெட்டியெறி!
உனக்கு வேண்டியது
மனித அந்தஸ்து.
கயவர்கள் என்ற கெட்ட
பெயரல்ல!
கோப்பைகளை மோத விட்டும்
ஆணுக்கென்றோர் விபச்சார விடுதி
வைத்தும் கேட்பது தான்
நீ கேட்கும் சலுகையென்றால் ....
இப்போது ஆண்கள்
உன்னை வைத்திருக்கும்
ஸ்தானமே அதிகம்!
நீ பெண்ணாய் என்ன
மனிதப் பிறவியாய் இருக்கவே
லாயக்கற்றவள்!
பூவாய் ....
வண்டுகள் மொய்க்கா
நெருப் .... பூவாய் இரு.
வண்டாய் வேண்டாம்.

தீயாய் இரு
தண்ணீரில் வெந்து போகா
தண்ணீரையே வேக வைக்கும்
தீயாய் ..../

கண்ணீர்!
அனுதாபத்தையே தேடித்
தரும்.
அடுத்தவர் மீது பரிதாபம்
கொள்ள நீ விஸ்வரூபமெடு.
வாமனமாய் குறுக்கப்பட்டிருக்கும் நீ
இந்த பாரிகளுக்கு பாடம்
புகட்ட விஸ்வரூபமெடு.
மூவுலகும் வேண்டாம். இந்தப்
பூவுலகம் உன் வசமாகும்.

* * *

முயற்சி செய்
இன்றிருந்தே ....
உலகம் அதற்குள் அழியாது
போனால்,
உன் கடைசி ஜனனமேனும்
சுதந்திரமாய் நிகழ. நீ
இன்றிருந்தே முயற்சி செய்.
நிகழ்காலத்தில் பலிதமாகும்.
இல்லை நீயே பலியாவாய்!
போகட்டும் விடு
அடிமையாய் அழுது
கொண்டிருப்பதிலும்........ சுதந்திரத்திற்காக
சுதந்திரமாய் செத்துப் போ!
உனக்கு தூவும் புஷ்பாஞ்சலி
பெண் விடுதலை
விடியலின்
விடிவெள்ளியாய்ப் பூக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிருந்தும் குருடர்களாய் காதிருந்தும் செவிடர்களாய் வாயிருந்தும் ஊமைகளாய்

நி. சத்தியசுதன்
2ம் வருடம் விஞ்ஞான பீடம்

மண்மனைகள்
மலிந்து கிடந்தது
அக்காலம்
சல சல நீரோசை
மனதில் மறந்து
செல் ஓசையில்
செவிகள் மரத்து
மண்ணுள் மனையில்
எம்மை மறைத்தது
இக்காலம்

படை எடுப்பு
என்றார்கள்
அடுப்பங்கரை நின்றபோது
அலறி அடித்து
அகம்விட்டு அகன்றோம்
அணிந்திருந்த ஆடையுடன்
திரண்ட சனத்திரளில்
முச்சுத்திணறல்களுக்கு
முக்கியத்துவமில்லை
பாதி வழியில்
ஆவியாகினர் சிலர்

இன்னும்
எத்தனை இடர்கள்
அத்தனைக்கும் பொருள்
இடம் பெயர்தல்
இது நிகழ்காலம்
விஞ்ஞானம் இன்று விருட்சம்
என்று கேள்வி
நிழலுக்குள் நின்றதில்லை
எமக்கு வெளிச்சம்
பகலவன் பகிர்ந்தால்தான்
எம் நடைமுறையெல்லாம்
அந்தி நடக்கும் வரைதான்
பின்
கண் இருந்தும் குருடர்கள்
மின்
அனுபவித்து அதிககாலம்
நவரசத்தில்
நாளும் நாமறிந்து
பயம் மட்டும்தான்
வார்த்தைகளுக்கும் வரையறை
பல வேளைகளில்
வாயிருந்தும் ஊமைகள்
துணிந்தால்
விளையும் சில பயிர்களுக்கு
தலைகள்தான் பசளைகள்
தலை தூக்கத் தலைநகர் வந்தால்
அங்கும் தாழ்வு
உலாவுவதற்கு
உள்ளத்தில் அச்சம்
ஊர்காவல் துறைக்கு
நிரபராதியும் பயங்கரவாதி
ஒடுங்கி கிடக்கின்றோம்
காலிருந்தும் முடவர்களாய்
கூரைக்கும் நான்கு சுவர்களுக்கும்
நாலாயிரம் ரூபாய்
வாடகை
வாங்குவது வாடிக்கை
அநியாயம் என்றால்
வீதியே உறுதி

இதனால் இங்கும்
வாயிருந்தும் ஊமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்
சொற்பிழை செம்மைப்படுத்த
சொல்வதெழுதல் எழுதிய ஞாபகம்
இப்பொழுது
திருந்திவிட்டோம்
இருந்தும்
தலைநகரில்
கண்முன் அகப்படும்
பெயர் பலகைகளில்
எத்தனை தமிழ் பிழை
சுட்டிக்காட்டாமல்
கண்ணிருந்தும் குருடராகி விட்டோம்

எம் இனத்தில்
இருக்கும் சில
பண அடர்த்தி மிதம் கொண்டோர்
எமக்கு இடர் என்று போனால்
தாமும் எம்மைப்போல்
என்று அடக்கிச் சொல்லி
எம்மை அனுப்பி விடுவர்
இப்படி
கண்ணிருந்தும் குருடன் வேடம்
பாரீர்
கேளீருக்கே

கேடானதைக் கேட்டோம்...
இருக்காது
பாழானதைப் பார்த்தோம் ....
வாய்ப்பில்லை
என்று எம்மை
கண்ணிருந்தும் குருடனாக்கும்
காதிருந்தும் செவிடனாக்கும்
பத்திரமாய்ப் பதவிகாக்கும்
எட்டப்பர் பலபேர்
எம்மிடத்தில்
யார் இங்கு
எம் குறைக்கு
குரல் கொடுப்பர்?
ஒருவரை தெரியும் வரை
நாம் வாயிருந்தும் ஊமைகள்

எமக்கு எட்டும்
சந்தர்ப்பங்கள் எல்லாம்
சிந்திக்க வைப்பது
இவைகளை மட்டும் தான்
கண்ணிருந்தும் குருடர்களாய்...
காத்திருந்தும் செவிடர்களாய்....
வாயிருந்தும் ஊமைகளாய்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே எம் சமாதானம்

செல்வி. A. M. சமூன்
1ம் வருடம் கலைப்பீடம்

சிதைகின்றது சித்தம்
கொதிக்கின்றது இரத்தம்
துடிக்கின்றது மீசை
நடக்கின்றது யுத்தம்
தூர தொலைகின்றது எம் சமாதானம்

முழங்குகின்றது பீரங்கி
வெடிக்கின்றது துப்பாக்கி
மடிகின்றது மானுடல்
ஒலிக்கின்றது மரண ஓலம்
தூர தொலைகின்றது எம் சமாதானம்

சூறையாகின்றது கற்பு
முளைக்கின்றது புதைகுழி
நீள்கின்றது காணாமற்போவோர்
பட்டியல்
புதைகின்றது உண்மை
தூர தொலைகின்றது எம் சமாதானம்

அழிகின்றது சொத்து
அலைகின்றனர் மக்கள்
மாறுகின்றது அரசு
தருகின்றது வாக்குறுதி
ஆனால்
தூர தொலைகின்றது எம் சமாதானம்

அழியட்டும் பயங்கரவாதம்
(அன்றேல்) பறக்கட்டும் வெண்புறாக்கள்
கிடைக்கட்டும் ஆதரவு
இருக்கின்றது தீர்வுப்பொதி
விரைவில் வந்துவிடும் எம் சமாதானம்
கூறுவது அரசு

ஒழியட்டும் அரச படைகள்
ஒடுங்கட்டும் ஆதிக்க வர்க்கம்
கிடைக்கட்டும் சம உரிமை
ஒளிரட்டும் தமிழீழம்
நாளை வந்துவிடும் எம் சமாதானம்
கூறுவது போராளிகள்

அடங்கட்டும் போர் முழக்கம்
ஒழியட்டும் வன்செயல்கள்
நடக்கட்டும் பேச்சுவார்த்தை
வெளிவரட்டும் தீர்வு
வந்துவிடுமே எம் சமாதானம்
கூறுவது மக்கள்

அழியட்டும் வேற்றுமை
பிறக்கட்டும் ஒற்றுமை
கண்திறக்கட்டும், சமத்துவம்
ஓங்கட்டும் நீதி நியாயம்
இதோ தெரிகின்றது (!) எம் சமாதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Colombo Hierarchy System



Tamil Speaking Student's Societies



1. **Tamil Society**
2. **Muslim Majalis**
3. **Hindu Society**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faculties & Departments

1. Faculty of Arts

1. Department of English
2. Department of Geography
3. Department of History & Political Science
4. Department of Sinhala
5. Department of Sociology
6. Department of Demography
7. Department of Arabic and Islamic Studies

2. Faculty of Law

1. Department of Law

3. Faculty of Management & Finance

1. Department of Commerce
2. Department of Management

4. Faculty of Medicine

1. Department of Anatomy
2. Department of Biochemistry
3. Department of Community Medicine
4. Department of Forensic Medicine
5. Department of Medicine
6. Department of Microbiology
7. Department of Obstetrics & Gynaecology
8. Department of Paediatrics
9. Department of Parasitology
10. Department of Pathology
11. Department of Pharmacology
12. Department of Physiology
13. Department of Psychological Medicine
14. Department of Surgery

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **Faculty of Science**

   1. Department of Chemistry
   2. Department of Mathematics
   3. Department of Statistics & Computer Science
   4. Department of Physics
   5. Department of Zoology

6. **Faculty of Education**

   1. Department of Educational of Psychology
   2. Department of Humanities & Education
   3. Department of Science & Technical Education
   4. Department of Social Science Education

7. **Faculty of Graduate Studies**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOSTELS MAINTAINED BY UNIVERSITY OF COLOMBO

MENS HOSTEL

1. BLOMFONTEIN (MENS) HOSTEL
   176, Norris Canal Road
   Colombo - 08

2. KITHYAKARA (MENS) HOSTEL
   87, Aranda Rajakumar Mw
   Colombo - 10

3. De SARAM PLACE (MENS) HOSTEL
   220, Desaram Place
   Colombo - 10

4. THEWAWALA ROAD (MENS) HOSTEL
   Thelawala Road
   Ratmalana

WOMENS HOSTEL

1. DeSARAM PLACE (WOMENS) HOSTEL
   215, Desaram Place
   Colombo - 10

2. MUTTIAH ROAD (WOMENS) HOSTEL
   48, Muttiah Road
   Colombo - 02

3. HAVELOCK ROAD (WOMENS) HOSTEL
   90, Havelock Road
   Colombo - 05

4. BULLER'S LANE (WOMENS) HOSTEL
   37/15, Buller's Lane
   Colombo - 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faculty of Arts

First Year

1. K. Sutheshna
2. K. Gowry
3. S. A. Neilupher
4. M. F. M. Abdullah
5. N. Nufailah
6. S. Bamini
7. K. Nalini
8. M. A. F. Raeesa
9. V. Vathsala
10. Sakeena Majeed
11. Thusyanthan
12. Milana Iqbal

Second Year

13. P. Manogaran
14. T. Jesuthas
15. A. A. M. Fawzeen
16. I. L. Waseem
17. M. H. Iqbal
18. S. Baskaran
19. S. A. M. Sabreen
20. S. M. Jaleel
21. V. Jayaruban
22. Z. M. M. Niyasdeen
23. M. A. Abulkalam
24. M. F. M. Faris
25. Mohideen Raja
26. A. C. S. Inaya Cader
27. C. S. Costa
28. D. Aruldas
29. M. Amuthalingam
30. M. R. F. Waseema
31. M. S. Asiya Ummah
32. M. S. Gunaratnam
33. M. U. S. Katheeja
34. S. Puwaneswary
35. S. Sivagurunathan
36. Sharmila Oleed

Final Year

37. A. A. Faida
38. A. C. Haleemdeen
39. A. G. M. Riyal
40. A. R. M. Amanulla
41. Aneesa Careem
42. B. Nilam
43. N. Buwana
44. S. Devaki
45. H. F. Farhana
46. H. S. Y. Yasna
47. J. Riyas Mohanad
48. Juliet Valantenapius
49. M. A. Zahrani
50. M. F. J. Muneer
51. M. Haris
52. M. J. N. Asmiya
53. M. L. M. Rizan
54. M. L. Najeema
55. M. M. Meerasahib
56. M. R. F. Shahana
57. M. S. M. Rifkhana
58. M. S. Ranees
59. M. T. M. Rizvi
60. Mazeeha Mouzoon
61. Munaffra Nafly
62. N. Arunthathy
63. Nismiya Raby
64. P. L. Zubaida
65. Rizana Hamza
66. Rizna Hasan
67. S. A. M. Safree
68. S. A. S. Mafahira
69. S. Azmiya
70. S. Javard
71. S. M. Haider
72. Shiyama Zawahir
73. Suahira Lsmail
74. T. Faris
75. T. Mathiwathany
76. V. M. Susila
77. Y. F. Kaleema
78. Yasotha Ramasamy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faculty of Commerce & Management

1 st Year Commerce

1. S. Arikaran
2. M. R. S. Ahamed
3. J. R. Ahamed
4. M. L. M. Arshad
5. H. N. Begam
6. M. M. F. Nirosa
7. M. J. F. Silmiya
8. K. Gowreesan
9. M. H. F. Hishana
10. A. R. Izzedeen
11. P. Janarthanan
12. A. L. F. Jasmin
13. A. Jeyadeepan
14. V. Jeyanth
15. H. Krishnaleela
16. S. Maithily
17. F. S. M. Ansar
18. M. L. M. Aswer
19. M. S. M. Faizal
20. M. M. Isham
21. S. A. M. Nijam
22. A. A. M. Riyaz
23. M. G. A. M. Ziyan
24. M. N. M. N. Nauffer
25. M. A. Niswa
26. K. Piratheeban
27. M. Ragavan
28. S. T. Rajakumary
29. A. R. Ramzy
30. U. T. Ranoos
31. M. Z. S. Razana
32. S. H. F. Rihana
33. M. S. Salahudeen
34. M. Sasikumar
35. S. Sasikumar
36. S. Menaga
37. M. A. S. Rihana
38. S. Sivajini
39. N. Surendren
40. S. Varatharaj
41. K. Vijaya
42. S. Nagaratna
43. S. Uthayashanker
44. S. Parameswaran
45. V. P. Paraneetharan
46. K. Suseenthra
47. M. A. Naleem

1 st Year Management

48. I. M. U. Feroza
49. A. H. Shadheela
50. K. Farooziya
51. M. M. F. Shakeela
52. U. A. F. Fasrina
53. M. R. Fathima Sihana
54. K. Anandhanayage
55. M. M. H. Hazeena
56. I. A. Latheef
57. M. R. M. Minhaj
58. S. H. M. Munas
59. A. R. M. Rajhi
60. J. M. Thalas
61. M. M. M. Mulaffer
62. M. A. S. Naisara
63. U. L. F. Rifka
64. M. S. F. Risana
65. N. L. M. M. Shahani
66. M. I. R. Shanaz
67. K. R. Silmiya
68. K. Vijaya
69. V. Sasitharan
70. M. Anbarasan
71. A. A. M. Riyas
72. P. Baskar
73. M. N. M. Bisrul Haji

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. K. Dhineshkumar
75. P. D. Ebenezer
76. N. T. S. Fowmila
77. M. Inpakeethan
78. P. Jemilgulan
79. M. I. M. Ajamathulla
80. N. N. M. Aroos
81. J. M. Faleel
82. M. J. M. Riyas
83. M. S. N. Sheroz
84. A. M. M. Shiraj
85. S. Muguntharaj
86. S. Shijaan
87. S. Sudharjini
88. T. Thevakumaran
89. T. Abirami
90. P. Thivaharan
91. T. Jegapriya
92. K. Vanitha
93. G. Vinothini
94. S. Sivasoruban
95. P. Babu

2 nd Year Commerce

96. S. Sasidaran
97. K. Pradeepa
98. M. S. F. Irshana
99. A. F. Rimziya
100. A. N. M. F. Rizqurya
101. A. R. Rayeesha
102. M. H. F. Zunriya
103. M. N. F. Nasliya
104. M. H. F. Farooja
105. M. B. S. Shireen
106. K. Balakumari
107. K. Vinodhini
108. P. Vathani
109. U. Tharani
110. R. Pathmawathy
111. W. T. Arisiya Umma
112. Y. M. Siyar
113. M. S. M. Farzan
114. M. I. S. M. Hilmy
115. K. M. Rahuman
116. A. H. M. Kamil
117. S. A. Mohammedushifan
118. A. W. M. Faizal
119. S. Ranjitharuban
120. M. Mathitharan
121. V. Sujeevan
122. U. J. M. Imthihan
123. T. Sivakumar
124. S. Duraisingh
125. P. Ramadas
126. M. R. Shereen Banu
127. S. S. F. Sakeela
128. U. Varatharajan
129. K. Manisegaran
130. A. S. M. Matheen
131. I. Janoosa
132. S. Sarangan
133. A. Sivakumar
134. G. Thanusa
135. T. L. Jaseema
136. K. Kirishankar
137. A. M. Bakir
138. M. S. M. Ismath
139. N. M. S. M. Rismy
140. M. M. M. Rizvi
141. M. B. L. Fazil
142. A. Niranjan
143. K. Niroshani
144. R. Pradibha Lakshmi
145. R. Chitra
146. S. Ravindren
147. F. Rizwan
148. A. D. Subodhini
149. R. Thavarajani
150. K. Imayavasan
151. S. Baskaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. M. H. Hidayathulla
153. S. Kugadas
154. M. H. M. Ashar
155. M. H. M. Hisham
156. A. R. M. Nizar
157. M. M. M. Ramzeen
158. M. R. M. Rizad
159. H. M. M. Riyal
160. M. H. M. Hilmy
161. M. S. Muhamed
162. N. Thayalini
163. P. Sutharjini
164. S. Sharmila
165. T. S. Selvakon
166. S. Vythegi
167. S. Manju
168. M. H. Subaideen
169. K. V. Sugirth
170. K. Mayooran
171. B. M. M. Irfan

2 nd Year Management

172. B. C. Agithkumar
173. A. Alestinkumar
174. A. M. Amardeen
175. A. M. Askar
176. B. Gayathiri
177. K. Chandrika
178. A. C. F. Khan
179. F. N. Nilufa
180. G. Priyadharshini
181. K. V. A. M. Hassan
182. K. Thayalini
183. K. Malarvathani
184. K. Kokila
185. P. Mathytharan
186. T. Mayooran
187. K. F. Faizar
188. M. S. Firdous
189. M. I. M. M. Naleem
190. A. R. M. Naleer
191. M. S. M. Nasleem
192. M. S. M. Ramzeen
193. A. S. M. Safwan
194. A. L. M. Ali
195. M. R. M. Rifkhan
196. D. Vijeyaletchumi
197. M. R. F. Naseema
198. P. Romani Berundha
199. A. R. R. Mohamed
200. H. M. R. Mohamed
201. M. Saravanan
202. L. S. Sharma
203. M. T. S. Nisana
204. P. Sivakumar
205. G. Sivakumar
206. S. Nisanthy
207. S. Devagi
208. J. J. Surendren
209. A. Suresh
210. M. Thayabaran
211. J. Theepan
212. T. Gayathri
213. T. Sugatha
214. T. Yoharan
215. N. M. A. Rifaq
216. T. Arulnesan
217. J. F. Farsana
218. P. Hemasabesan
219. S. M. J. Umma
220. A. Ketheeswaran
221. A. R. Kirijiya
222. K. Dushanthiny
223. M. Sivakumaran
224. M. I. M. Haris
225. N. M. M. Fazal
226. M. I. M. Irshad
227. M. R. M. Unais
228. R. Vasini
229. S. F. Rinosa
230. S. Jeyamegala
231. K. Sivajini
232. M. M. Mohideen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

233. K. Chandrakala
234. S. Subendren
235. S. Rathakrishnan
236. A. L. M. Inamulla
237. M. S. M. Sures
238. T. Sivaruban
239. H. Isadeen

3 rd Year Commerce

240. Z. A. N. Ahamed
241. M. A. M. Ali Arsath
242. M. A. M. Anas
243. A. M. Ashraff
244. M. S. A. Asry
245. M. N. M. Farmina
246. F. F. Faseela
247. D. Gangatharan
248. A. M. Ikram
249. K. N. Kannadasan
250. M. Fathima Rizviya
251. M. M. R. Riyaz
252. M. B. S. I. S. B. S. L. M. Minsar
253. M. N. N. Nissa
254. M. H. M. Ramsi
255. M. T. M. Rickas
256. M. Krishnakumary
257. M. S. M. Nasli
258. K. S. Punitha
259. R. Dharshanee
260. S. I. M. Riyas
261. Y. M. Rizwan
262. S. Sasiharan
263. S. M. Shakeer
264. S. Subash
265. M. Thilakarajah
266. M. H. Yasmiya
267. M. A. Fareeha

3 rd Year Management

268. A. L. S. Begum
269. A. M. H. P. Begum
270. C. Sutharshini
271. K. Dayannand
272. J. D. N. Deen
273. M. F. F. Nazreena
274. A. R. R. Hizana
273. M. R. M. Huwailith
274. M. F. M. N. Khan
275. Y. M. Lebbe
276. M. M. M. Fahim
277. M. H. M. M. Fayaas
278. M. S. M. Feroz
279. M. M. M. Ismath
280. M. I. N. Nazeer
281. M. A. M. Razeeya
282. A. L. M. Riyas
283. M. M. Mubarak
284. M. A. Z. K. Murshida
285. M. Panumathy
286. P. Bhakeerathy
287. A. Pushpakala
288. M. M. A. Raais
289. M. Rajadwai
290. M. M. S. Ramziya
291. M. I. N. Riyas
292. K. Anandaruby
293. K. Sajini
294. Z. S. Sathar
295. S. Vijeyafowry
296. A. H. M. Siyam
297. S. Suthagaran

4 th Year Commerce

298. S. H. Abdul Mathin
299. M. N. Ahamad Usari
300. H. L. Fathuma Sihara
301. M. H. Fathima Zahariya
302. M. D. Fathuma Sumaina
303. M. M. S. Farosa
304. K. Sivajini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

305. R. Rajendren
306. T. Luxmitharan
307. A. M. Marikar
308. M. Fathima Mariyam
309. M. S. Fathima Fiyaza
310. S. Mailvaganam
311. M. S. Mohamed Akram
312. M. F. Mohamed Asmil
313. M. S. Mohamed Fahim
314. M. R. Mohamed Faiz
315. S. S. Mohamed Fashi
316. M. H. Mohamed Hanan
317. A. M. Maheer
318. M. T. M. Rihab
319. M. S. M. Hisham
320. M. H. M. Saleem
321. M. N. M. Rahuman
322. N. Indradevi
323. R. Logendren
324. M. H. M. A. Ramzy
325. M. H. S. Risviya
326. M. S. S. Maky
327. I. Sasikumar
328. K. Sivaraja
330. S. Pirameela
331. A. Suthan
332. P. Yogendran
333. M. M. M. Nasrul Haq
334. K. Vijeyakanthan
335. K. Kamalasani
336. A. Angelin Thayalini
337. J. M. Nalir

4 th Year Management

338. O. Asfar
339. M. C. Amanulla
340. N. Ashrof Ale
341. H. N. Fareen
342. H. M. M. Farzana
343. T. M. F. Risana
344. A. H. F. Rizana
345. M. Ganagenthiran
346. B. Gowthaman
347. H. I. Fahima
348. H. Nimnas
349. S. Indumathy
350. K. Kalaivani
351. K. Jeyasuganthi
352. V. Kumar
353. M. S. F. Luthufiya
354. A. Mathavan
355. K. M. M. Anis
356. N. M. M. Azhar
357. J. A. M. Jiffry
358. I. L. M. Nisthar
359. M. R. M. Rahumathulla
360. M. R. M. Ramzeen
361. S. J. M. Rizvi
362. A. M. M. Rizwan
363. M. M. M. Tharik
364. M. T. M. Wafeer
365. M. J. M. Fahim
366. S. M. Anas
367. M. S. M. Milhan
368. M. F. M. Aslam
369. S. Mujeebudeen
370. P. Prabaharan
371. R. F. Rilaya
372. R. R. Sanoon
373. A. Selvaganesh
374. M. S. S. Sareena
375. A. Siyanabegum
376. S. Lorinda Subodhini
377. M. J. J. Begum
378. M. Veena
379. K. Anpalakan
380. K. Suthagar
381. J. M. Razil
382. T. Thavaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faculty of Law

1 st Year

1. J. Virgini
2. B. Niranjine
3. T. Thurgadevi
4. M. I. Farhana Begum
5. S. Thusanthy
6. V. Priyanthi
7. T. Suparajiny
8. F. Shamila Dawood
9. Jasmine Issabelliah Baliah
10. A. Fathima Jinnah
11. Vasavan
12. Karikalan
13. Karunakaran
14. Kesavan
15. Alexraja
16. Deneeswaran
17. Jebenesan
18. Aruran
19. Sabarullah
20. Nazeem

2 nd Year

21. K. Shiyamini
22. S. Subajini
23. S. R. P. Siraiva
24. K. Vinayagamoorthy
25. P. Pradeepkumar
26. S. Shamini
27. N. Sutharjini
28. N. P. Inaya
29. T. Sasikala

3 rd Year

30. K. Subashiny
31. A. Kafeela
32. V. Srivani
33. I. L. M. Ramees
34. V. M. Siyan
35. M. S. Kariapper
36. A. A. M. Rooby
37. T. Vinitha
38. M. I. M. Azver
39. V. Kalatharan
40. M. H. M. Rafi
41. A. L. M. Saleeth
42. A. H. M. Musabbir
43. S. Thiruchelvam
44. P. Yoganathan
45. M. B. M. Fawmy
46. V. M. Naseer
47. M. B. L. Rahuman

4 th Year

48. A. A. Fathima Zareena
49. P. Ambigadevi
50. A. S. Shafeena
51. M. F. Nasooha
52. S. Suthajini
53. S. M. M. Nafees
54. A. M. M. Zarook
55. M. H. M. Hamsa
56. M. I. R. Haathey
57. N. Sutharshan
58. M. T. M. Muzammil
59. U. Balasingham
60. S. Sivanathan
61. I. Mahbouba
62. K. Yasodara
63. V. Ramakamalan
64. M. Visvanathan
65. M. I. M. Iynullah
66. S. Keetheswaran
67. P. Sivakumar
68. K. Thayaparan
69. Y. Prapaharan
70. R. J. Troskey
71. S. Nishanthan
72. V. S. Niranchan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faculty of Medicine

1. G. Sujaharan
2. B. Indrajith
3. B. Banumathy
4. S. P. Athithan
5. A. Loganthan
6. S. Yudisjrika
7. S. Mathu
8. V. Mayooran
9. S. Rajeev
10. S. Sivaganesh
11. V. Kirupalar
12. S. Sivaprriyan
13. T. Sorubini
14. K. Reginald
15. R. Rerathi
16. A. Meryl
17. P. Janaki
18. S. Mathanakumar
19. Ketheeswaran
20. R. Ganasekaran
21. T. Prabahar
22. S. Sumangali
23. W. Udyashankar
24. S. Sailajah
25. Sarawanabava
26. Y. Jegan
27. T. Mirnalini
28. S. Arulkumar
29. S. Sivanandan
30. S. Murugathas
31. S. Normann Rosanth
32. V. Sutharsan
33. C. Ganachandran
34. K. Sivakumar
35. K. Nirantharakumar
36. A. Kavitha
37. S. Srishankar
38. P. Sriharanathan
39. K. Sivaganeshan
40. G. Kugarajah
41. T. Sobitha
42. T. Malarvili
43. B. Vani
44. P. Saravanan
45. K. Vithiyan
46. N. Jegananthan
47. T. Prgash
48. C. N. Anthony Pillai
49. T. Thivakaran
50. R. Rameshshankar
51. Rohan
52. D. Vinsdan
53. M. Pradeepan
54. S. Sivamala
55. K. Kuhappriya
56. A. Shironi
57. N. Vanitha
58. S. Prasanthi
59. K. Anusha
60. N. S. Thevikumar
61. M. Sharmila
62. M. Shanthni
63. K. Umashankar
64. N. Paranitharan
65. A. Meenashisudaram
66. R. Rajeev
67. K. Kalichelvan
68. D. Aravinthan
69. K. Sutharsan
70. Y. Rudra
71. Gunasegaram Jude Tiron
72. M. Rajani
73. K. Silmia
74. N. Suji
75. R. Mekala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Faculty of Science

1993/94

1. N. Selvakumaran
2. K. Sivanesan
3. P. Athiththan
4. Aslum
5. Rameez

1994/95

6. R. Ravindran
7. S. Chandramohan
8. V. Devanand
9. B. Srikumar
10. M. Rajanikanth
11. V. Sukathisvaran
12. K. K. Satheskumar
13. R. Nanthini
14. B. Katheeja

1995/96

15. Kamalesh
16. M. Yohendiran
17. B. Nedumaran
18. P. Ravialahan
19. T. Sivaharan
20. T. Umashankar
21. C. R. Angelo
22. M. B. Tennakone
23. K. M. Kandeepan
24. C. M. Anslum
25. A. T. Lloyd
26. Mazeer
27. N. Thamayanthi
28. T. Kaladevy
29. C. P. Joseph
30. S. Srisathiathas
31. D. Kirupaharan
32. M. R. F. Vimalendra
33. A. J. Luxman
34. B. Baleswaran
35. T. Vathana
36. Hasana
37. Rizana
38. Tharasha
39. P. Sureshvasan
40. Jaykishan

1996/97

41. N. N. Noel Niraj
42. A. Kalbana Kulaweerasingham
43. N. Julian Manojkumar
44. N. Selvakumar
45. P. Sivanthy
46. Vani Sathanathan
47. M. Jeneefar
48. G. Shantharubinee
49. N. Sathyasuthan
50. R. Sutharshana
51. Dharini Wignarajah
52. Edward Reginold Jesudasan
53. T. Sambhavi
54. V. Ketheswaran
55. T. Ruba
56. S. Sugantha
57. S. Pragalathan
58. V. Janarthanan
59. S. Suthakaran
60. R. Thusianthan
61. Haneef
62. Senthuran
63. Sritharan
64. Nusry
65. Aaruran

1997/98

66. Bagavathur Kailainathan
67. Kunthavi Balachandran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. Dileepan Dhayalan
69. Malaravan Alagaratnam
70. Vasuki Sabanathan
71. Geethanjali Shanmuganathan
72. Nadesapillai Sivendran
73. Sobana Ratnasabapathy
74. Manohari Srikrishnarajah
75. S. Jhanenthran
76. T. Thangavelu
77. Anandapragash Vijayakumar
78. Kannan Poobathy
79. Ravindran Krishnakumar
80. A. Mayurika
81. R. Chithrakaladevi
82. T. Kariharan
83. N. Premilanathy
84. M. N. F. Nusrath
85. R. Shanthi
86. S. Girija
87. S. Dhanushaanthan
88. K. Pushpakaran
89. Jayakumaran Subramaniam
90. Jeyathevan Vanniyasingam
91. K. Krishnaveni
92. Pathmakulasingam Kandasamy
93. Ramaneetharan Muthulingam
94. Sujeevan Thambiraya
95. Kiyas Meerasahibs (Muhammad)
96. Ashley Godfrey Fernands
97. Sujeeva Amarasingham
98. Shanthakumar
99. Fowsul Mafahira Mohamed Bathurudeen
100. Jihana Jlyas
101. Seyyadu Muhammadu Naseer
102. M. Haffees
103. Mueenudeen Abdul
104. M. Shiamil
105. Srigowry
106. P. Nishan
107. Rozana Nizous

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By : Laxsu Graphics
T.P : 344046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org